சிந்தாமணி

அக்டோபர் 1926

பொருளடக்கம்.

	பக்கம்.
சுபோத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 130
நாகரிக வாழ்க்கையும் பெண்மக்களும் (பத்திராதிபர்)	... 131
பத்தேபூர்-சிக்ரி: அக்பர் மன்னன் வெப்ப காலங்களில் தங்குமிடம் (சுவாமி அற்புதானந்தர்)	... 133
செந்தமிழ் நாட்டுச் சிறப்புக்கும்மி (ஸ்ரீமான் வித்வான் கா. கோவிந்தசாமி பண்டிதர்)	... 135
நான்கு கடிதங்கள்—சிறு கதை (ஸ்ரீமான் கே. சி. இராமஸ்வாமி, எம். எ., எல். டி.,)	... 137
நோய்—வியாசம் 3 (ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)	... 140
பர்வதகுமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா)	... 143
ஆரோக்கியம் (ஸ்ரீமதி குசப்ரியை)	... 148
நூர்ஜஹான் அல்லது பாத கணத்துச் சௌந்தர்யக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்)	... 152
காரணமற்றுண்டாகும் வெறுப்பு—Prejudice (ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்)	... 155
மார்க்கோ போலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்)	... 158
பனி பெய்ததினால் பெற்ற பாக்கியம்—ஒரு சிறு கதை (ஸ்ரீமான் ஜனார்த்தனம்)	... 161
கண்களைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்ளுங்கள். (ஸ்ரீமதி மங்களாபாயி)	167
காப்பியின் மகிமை—மொழிபெயர்ப்பு (சகோதரி வி. பாலம்மாள்)	... 169
நவராத்திரி (ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்)	... 173
பெண் பாலர் (ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபாலன்).	177
சாஸ்திரியாரது கடிதம் (ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)	182
ராணி பத்மினி—ஒரு சிறு நாடகம் (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)	... 187
பெண்மக்களுக்கும் தேசாபிமானம் வேண்டும் (ஸ்ரீமதி செ. ராஜம்மாள்)	... 190
இந்திய ஸ்திரீ சமாஜம்—சங்கத்தின் முறைகளும் கோட்பாடுகளும்	... 191

ஸ்ரீமான் C. V. சங்கரநாராயண ஐயர் அவர்கள், மெடிகல் ஆபீசர், 28—5—25ல் அலஸ்டாரிலிருந்து எழுதுவது.

அன்பார்ந்த சகோதரியே,

தாங்கள் அன்புடன் விடுத்த "சிந்தாமணி" இதழ்கள் வரப்பெற்றேன். படித்து மனமகிழ்ந்தேன். நம் மடந்தையர் முன்னேற்றத்துக்கு நம் பெண் பாலரே வழிதேடல் அவசியம். அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருந்தகையும் பெண்மக்களுக்கே ஓர் பெருமையுமாகும். எனவே இன்னும் எவ்வளவு விரித்துரைத்தாலும் மிகையாகாது. சமயமின்மையால் இத்துடன் விடுத்தனன்.

ஸ்ரீமான் S. B. பத்தர் அவர்கள் 23—5—'25ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு உபயக்ஷேமம். தாங்கள் அனுப்பிய கடிதமும் சிந்தாமணி பத்திரிகையும் கிடைத்தன. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டேன். தாங்கள் நம் தேசம் முன்னேற வேண்டுமென்ப பேரவாக்கொண்டவர்களென்பதைத் தாங்கள் ஆரம்பித்துள்ள சிந்தாமணி பத்திரிகையைக்கொண்டு அறிந்து கொண்டேன். அதற்காக யான் வந்தனமும் செலுத்துகின்றேன். கடவுளும் தங்கள் முயற்சி விருத்தியுறக் கருணைபுரிவார்.

ஸ்ரீமான் M. S. ரத்தினசாமி அவர்கள் 25—9—25ல் தைப்பிங்கிலிருந்து எழுதுவது.

சகோதரீ!

தங்களால் நடத்தப்படும் "சிந்தாமணி" என்ற மாத சஞ்சிகையைக் கண்ணுற்றேன். படிக்க மிகவும் ஆனந்தமாயிருந்தது. தாங்கள் பெண்களுக்கோர் நல்லமை நாயகமாய் விளங்குவது மாறி காட்டியுள்ள பெண்கள் கூடிய சீக்கிரம் மேன்மையடைவார்களென்பதில் சந்தேகம் உண்டோ? எல்லாம் வல்ல ஈசன் செயலும் அப்படியே முடிக்கும். நான் இன்று ஒரு வருஷ சந்தா அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு தயவுசெய்து எனக்குப் பத்திரிகையை அனுப்பி வரவும்.

சிந்தாமணி பைண்ட் வாலியம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுபுத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதாரானவர்களுக்கும் மட்டும் மேற்கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3-ரூபாய்க்கு சார்ஜ் உள்பட அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

1926 அக்டோபர் 31-தேதிவரையிலும் இக்குறைந்த விகிதத்திற்கு தபால் கூலி இனமாக கொடுக்கப்படும். சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஞு ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்ரவரி முதற்கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரிய வியாசங்களும், செவிமா பேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செவிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ்வாறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

Some Select Opinions on "Chinthamani."

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani.* From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and *regular* contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz, the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the woman-hood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simplicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home,as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTHIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.— *West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

**

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras*.

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balamma is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them toward emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini*.

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

P. G. Naicker Esq., Durban; 25th April 1925.

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

Goonaruthinum, Esq., Durban, Natal; 14th March 1925.

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.

OFFICE OF THE ... MADRAS 10 NOV 1926

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] October 1926. [No. 3.

श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

யமானது நகர வாசத்தில் செயற்கைகளால் அடையவேண்டியிருத்தல் பற்றி நாகரிகம் என்று பெயருள்ளதாக விருக்கின்றது. செயற்கையால் கிராம வாசத்தில் ஆரோக்கியத்தை உற்பத்திசெய்து கொள்ள வேண்டியதில்லை. அவைகளில் இயற்கை ஆரோக்கியம் நிரம்பி இருப்பதால் கிராம வாசத்திற்கு நாகரிகம் சற்றும் ஒவ்வாததாக விருக்கின்றது. இதனால் நாகரிகம் நகர வாசிகளுக்கே ஏற்றதென்பதில் ஐயமில்லை. நாகரிகத்தை ஆரோக்கியமென்ற தத்துவத்தை உள்ளடக்கிக் கைகொள்ளல் நகர வாசிகளின் கடமையாம். ஈதன்றி நவீனம் என்ற ஓர் ஆசையால் தூண்டப் பெற்று வீண் வழக்கங்களை அனுஷ்டிப்பதால் வீண் செலவும் ஓய்வின்மையுமே மிச்சப்படுகின்றன. நாகரிக வாழ்க்கையில் ஆழ்ந்துள்ள ஆடவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லையானாலும் ஆடவர்களின் நாகரிகத் தோரணையால் பெண்மக்களின் நிலைமை தத்தளிப்பதை ஆராய்வதே நமது முக்கிய நோக்கமாகும். பூர்விக வாழ்க்கையில் பெண்கள் கிருக தேவதைகளாகக் கருதப்பட்டார்கள். தற்காலம் நாகரிகக் கோலாகலத்தில் அடிமைகளாக வாழ்கின்றார்கள். முற்கால வாழ்க்கையில் பெண்கள் செய்து வந்த வேலைகள் குடும்ப நிர்வாகத்தைப் பொருத்தனவாயும் புகழளிப்பனவாயுமிருந்தன. தற்காலமுள்ள வேலைகள் குடும்பக் காரியங்களுக்குச் சம்பந்த மற்றனவாயும் ஓய்வற்றனவாயுமிருக்கின்றன. இவ்வாறே ஒவ்வொன்றும் மாறுபட்டு இருப்பது பற்றி விரித்துரைப்பதென்றால் சாத்தியமில்லை. நமது சிந்தாமணி நிருப சகோதரிகள் இதுபற்றிச் செவ்வனே ஆராய்ந்து எழுதக் கூடுமானதால் நாகரிக வாழ்க்கையில் பெண்கள் எவ்வாறு சிரமப்படுகிறார்கள் என்பதைச் சிறிதளவு குறிப்பிட்டு நிறுத்துகிறோம். நாகரிகத்தின் பயனாக சம்பிரதாயங்களும் கட்டுப்பாடுகளும் விட்டொழிக்கப்படுவதினாலேயே பெண்களுக்கு அதிக சிரமம் ஏற்படக் காரணமாயிருக்கிறது. முற்காலத்தில் பெண்களுக்குச்சமையல் செய்தல், தண்ணீர்எடுத்தல், குழந்தைகளை கவனித்தல் இவைகளே பிரதான வேலைகளாக விருந்தன. தற்காலத்திலோ பூட்சுக்கு எண்ணெய் தேய்த்தல், சலவைக் கசக்கி உலர்த்தல், முக க்ஷவரத்திற்குரிய சாமான்களை எடுத்து வைத்தல், சிகார் பெட்டி காலியாயில்லாமல் கவனித்தல் இவைகளே கணவனுக்குச் செய்யும் பிரதான கைங்கரியங்களாக விருக்கின்றன. கிழிந்த சட்டைகளைத் தைத்தல், உடுப்பு மாட்டிவிடல், நினைத்த விடத்தில் போஜனம் பரிமாறல் இவைகள் வேறு. இவ்வாறாக நாகரிக வாழ்க்கையில் பெண்கள் ஒரு சிறிதும் ஓய்வின்றிக் காலங் கழிக்கிறார்கள். தனவந்தர் சிலர் வீட்டில் வீட்டு வேலைகளுக்கு ஆட்கள் இருப்பினும் இத்தகைய வேலைகளுக்குக் குறைவே கிடையாது.

முற்காலம்போல் ஆடவர்கள் தங்கள் வேலைகளைத் தாங்களே பார்த்துக்கொண்டால்குடும்பக் காரியம் செய்து ஓய்ந்திருக்கும் பெண்களுக்கு ஓய்வு ஏற்படக் கூடும். அல்லது அயல் நாட்டு ஸ்திரீகளைப்போல் பொருளீட்டுதலிலும் கணவனுடைய உத்தியோக விஷயங்களில் உதவி செய்வதிலும் சாமர்த்தியம் பெற்றாலும் சிறப்புண்டு. இரண்டுங்கெட்டு திரிசங்கு சுவர்க்கமாக வீட்டுக் காரியங்களைச் சரிவர கவனிக்கும் திறமையும் சந்தர்ப்பமுமற்று கணவனுக்குப் புத்தியாலும்கல்வியாலுமுதவி புரியக்கூடிய அந்தஸ்துமற்று "பாய்"(Boy)என்றால "எஸ்"(Yes)என்று ஓடிவரும் பணியாளைப் போலஓடி தத்தளித்து ஓய்வற்றக்காலங்கழிப்பதே நாகரிக வாழ்க்கையில் நம் பெண்மக்கள் அடைந்த பெரும் பயனாகவிருக்கின்றது. சகோதரிகள் இனியேனும் கண் விழித்துப் பூர்வ காலத்தில் தங்களுக்கிருந்த அந்தஸ்தையும் கண்ணியத்தையும் பெருமையையும் சுக வாழ்வையும் பெறுவதற்குப் பூர்விகக் கல்வியும் ஆசார அனுஷ்டானங்களுமே தக்க சாதனமென்பதை உணர்வார்களாக.

பத்தேபூர்—சிக்ரி.

அக்பர் மன்னன் வெப்ப நாட்களில் தங்குமிடம்.

(சுவாமி அற்புதானந்தர்)

யமுனை நதிக்கரையில் அக்பர் மன்னன் ஆக்பராபாத் என்ற (ஆக்ரா) நகரத்தை ஸ்தாபித்ததும், கோட்டையைக்கட்டி வாழ்ந்து வந்த நாட்களில் புத்திரர்கள் பிறந்தும் ஜீவிக்காத சோகத்தில் அமிழ்ந்து உழலவே, ஆக்ராவிலிருந்து சுமார் 18-மைல் தூரத்தில் சிக்ரி என்ற கிராமத்தினருகில் வசித்துக்கொண்டிருந்த ஷேக் சலீம் கிஷ்தி என்ற பகிரினிடம் சென்று தன் கர்மப் பயனை நொந்து ஆதரவுதேட முயன்றனன். சில சமயம் 10—20 நாட்கள் இங்கேயே தங்கியும் இருக்கலாகினன். இவனுடன் பேகங்களும் தங்கலானார்கள். இப்பகிர் ஒரு குடிசையில் வசித்துக்கொண்டிருந்தார். இவருக்கென ஒரு கட்டிடம் கட்டவும் அக்பர் ஆக்கியாபித்தனன். அருகில் ஒரு கட்டிடம் தயாரிக்கப் படலாயிற்று. இதனுள்ளே அக்பருக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கவே இப்பகிரின் பெயரை வைக்க அக்பர் ஆக்ஞைகேட்டு, பக்கிரும் சம்மதிக்கவே, குழந்தைக்கு சலீம் என்ற பெயர் வைக்கப்பட்டு, பையனும் வளரலானான். அக்பரும் பேகமும் தம் புதல்வர்களைப் பிறந்த வருடம் அல்லது இரண்டில் இழந்து விடுவார்கள். சலீமுக்கு மூன்று நான்கு ஐந்து ஆண்டு ஆகக்கண்ட உடனே அக்பர் ஒரு மசூதியைக் கட்டவும், பகிரை புதுக்கட்டிடத்தில் அமரவும் ஏற்பாடு செய்தான். பின்னர் தான் கான் தேசத்தில் வெற்றிகொண்டு திரும்பவே இம்மசூதியண்டையில் விஜய (வெற்றி) வளைவு ஒன்றைத் தயாரிக்கச் செய்தனன். இவை இரண்டும் இந்தியாவில் மிக அழகியவை எனவே கூறுவர்.

* * * *

பின்னர் தானும் தன் அரசியலும் வெப்ப நாட்களில் இங்கேதங்குவதெனத் தீர்மானித்து பத்தேபூர் சிக்ரிஎன்ற (பத்தே=வெற்றி பூர்= நாடு. சிக்ரி=பலர் சிஷ்தியின் திரிபு என்பர்; சிலர் சிக்கிரி என்று அக்கிராமத்தின் பெயர் என்பர்) பெயரை அளித்தனன். இந்நகரை நிர்மாணிக்கப் பல சில்பிகளும் சாமான்களுடன் வந்து சேர்ந்தனர். அழகிய மாளிகைகளும், மஹால்களும் அந்தப்புர அரண்மனைகளும் தயாரிக்கப்பட்டன. தோட்டங்களும் அரண்களும் ஏற்படுத்தப்பட்டன. காடாக, சிறிய கிராமத்தைக் கொண்டிருந்த இடம் சுமார் 4-5மைல் சுற்றளவில் பெரும் கட்டிடங்களைக் கொண்டிருக்கலாயிற்று. பெரும் மதில்களும், இம்மாளிகைகளைச் சூழ்ந்திருக்கச் செய்யப்பட்டன. வாயில்கள் இக்கோட்டைமதில்களுக்கும் ஏற்படலாயின.

* * * *

இக்கட்டிடங்களில் இவ்வமயம் மிக்கச் சிறந்ததாக பீர்பலின் மாளிகையைக் காணலாம். இப்பீர்பல் ஒரு பிராமணன். கௌட வகுப்பினன். இவன் பல மந்திரிகளில் ஒரு மந்திரியாக அக்பர் மன்னனுக்கு இருந்தனன்.

இவனைக் கலக்காமல் அக்பர் மன்னன் ஒன்றும் செய்வதில்லை. இதற்கிரண்டாவதாக ஜோத்பாய் மகா ராணியாரின் மாளிகையைக் கூறலாம். இவ்வம்மையார் ஜெயபூர் அரசியலைச் சார்ந்தவர். அக்பர் மன்னன் இவரை விவாகித்திருந்தனன். இதற்கடுத்தாப்போல் கல்தானு ராக்கியா பேகத்தின் மாளிகையைக் காணலாம். இதற்கு அடுத்தபடியில் மரியம் ராணியின் மாளிகையைக் காணலாம். இம்மரியம்

சிந்தாமணி

ஸுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY

SISTER V. BALAMMAL

DAUGHTER OF

Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(*All Rights reserved by the Authoress*)

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः ॥

जानकीदेहसौन्दर्यं खरादीनां वधं तथा ।
स्वावमानमपि क्रोधाद्रावणाय जगाद सा ॥ १५ ॥

सा அந்த சூர்ப்பநகியானவள் रावणाय ராவணன் பொருட்டு जानकीदेहसौन्दर्यं சீதையின் தேக வன்மையையும் खरादीनां கரன் முதலியவர்களின் वधं வதத்தையும் तथा அப்படியே क्रोधात् கோபத்தோடு स्वावमानमपि தான் பட்ட அவமானத்தையும் जगाद சொன்னாள் ॥ १५ ॥

वैदेह्या देहसौन्दर्यं राघवस्य च विक्रमम् ।
श्रुत्वा सीतापहरणे रावणो विदधे मतिम् ॥ १६ ॥

रावणः ராவணன் वैदेह्याः ஜானகியின் देहसौन्दर्यं வடிவழகையும் राघवस्य ஸ்ரீராகவனுடைய विक्रमंच பராக்கிரமத்தையும் श्रुत्वा கேட்டு सीतापहरणे சீதையைத் திருடுவதில் मतिं மனதை विदधे செலுத்தினான் ॥ १६ ॥

मायाहरिणरूपेण मारीचेन रघूत्तमम् ।
वञ्चयित्वा जनकजामपहर्तुमियेष सः ॥ १७ ॥

सः அந்த ராவணன் मायाहरिणरूपेण மாயமான் வேடம் பூண்ட मारीचेन மாரீசனால் रघूत्तमं ஸ்ரீராகவனை वञ्चयित्वा வஞ்சித்து जनकजां ஜனக ராஜ குமாரியை अपहर्तुं திருடுவதற்கு इयेष இச்சித்தான் ॥ १७ ॥

राम इत्युक्तमात्रेऽपि भीतभीतं स रावणः ।
निर्बध्य प्रेषयामास मारीचं राघवाश्रमम् ॥ १८ ॥

सः அந்த रावणः ராவணன் राम इति ஸ்ரீராமன் என்று उक्तमात्रेऽपि சொன்ன மாத்திரத்தில் भीतभीतं மெத்த பயந்[illegible] मारीचं மாரீசனை निर्बध्य நிர்ப்பந்தித்து राघवाश्रमं ராமாச்சிரமத்தைக் குறித்[illegible] प्रेषयामास அனுப்பினான் ॥ १८ ॥

(*To be continued.*)

207609
/15m 211, N24M
N26.3

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய ஐப்பசி—October 1926. [இதழ் 3.

நாகரிக வாழ்க்கையும் பெண்மக்களும்.

(பத்திராதிபர்)

இந்தியாவின் நல்ல நகரங்களில் பிரசித்தமாகவும் கிராமாந்திரங்களில் சிறிது சிறிதாகவும் பரவி வரும் நவ நாகரிக வாழ்க்கையின் சம்பிரமம்பற்றிப் புதிதாக எடுத்துரைக்க வேண்டியது அனாவசியமே. ஜன சமூகத்தினிடையே சர்வ சாதாரணமாக ஒரு பழக்கம் நிலவவேண்டுமாயின், அது அனுகூலத்தைக் கொண்டதாக இருக்கவேண்டும். தற்சமயம் பரவி வரும் நாகரிக வாழ்க்கையை ஜனங்கள் ஏதோ ஒரு பெருத்த சீர்திருத்தமென்று பாராட்டி ஆதரிப்பதன்றி அதனால் ஏற்படும் பாதகங்களை ஒரு சிறிதும் ஆராய்வதில்லை. சீர்திருத்த மடைவதில் மோகாட்டார்கள் மெத்த சுறுசுறுப்புக் காட்டி வருகின்றனர். ஆனால் அவர்கள் கைக்கொள்ளும் புதிய முறைகள் உலகாயதக்கொள்கைக்குரிய சகல அனுகூலங்களையும் அளித்துச் செல்வ விருத்தியையும் அளிப்பனவாக இருக்கின்றன. ஆனால் இந்தியரிடையே பரவி வரும் நாகரிகமானது பழைய முறைகளிலுள்ள ஒப்பற்ற தத்துவங்களை அழிப்பதாயும் கைப்பொருளை ஒழிப்பதாயும் சுக வாழ்க்கையை வேரோடு களைவதாயும் இருக்கிறது. நாகரிகம் என்பதின் பொருளை ஆராய்வோமானால் நகரத்திலுண்டாகும் தன்மையுள்ளதென்பது விளங்கும். நாகரிகமென்பது ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். மனிதன் தன் வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதற்கு ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்து கொள்வதில் சீர்திருத்தம் செய்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறான். ஆரோக்

பேகம் (ராணி) ஒரு போர்த்துகீசிய சிறந்தவப் பெண்ணென்று கூறுவர். இம்மாளிகைகளையும் அந்தப்புரங்களையும் அல்லாது திவான் ஐ காஸ், திவான் ஐ ஆம் என்ற இரண்டுபெரும் கட்டிடங்களுமுள்ளன. இவைகள் இராஜ சபை கூடும் இடங்களாகத் தயாரிக்கப்பட்டன. இத்துடன் பாஞ்ச மஹால் என ஒரு வித நூதன முறையில் யானை யுத்தம், மல்யுத்தம், ஆட்டுக்கிடா சண்டை, குதிரைப் பந்தயம் முதலியவைகளைக் கண்டு களிக்க ஒரு பெரும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

* * * *

இக்கட்டிடங்களுக்கு முன் கூறியபடி பெரும் மதில்களினால் சூழப்பட்டு, உரூதிபூல் (யானை வாயல்) என்று ஒரு பெரும் வாயிலை சுமார் 70-அடி உயரம் ஏற்பாடுசெய்து, வாழ்ந்துகொண்டு இருக்கின்ற நாட்களில் ஷேக் சலீம் இஷ்தி என்ற பகீர் காலகதியை அடைந்தனர். இவரை இந்த பத்தேபூர் சிக்ரியிலே அடக்கம் செய்யும்படி ஏற்படுத்தி ஒரு மசூதியையும் தயாரிக்க ஆக்கியாபிக்கவே, வெண் கல்லினால் அரிய ஒப்பற்ற கட்டிடம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதில் இன்னும் வருடா வருடம் பெரும் உரிசு ஏற்படுகின்றது. ஏராளமான அனுக்க தேவதாசிகள் ஒருங்குகூடி மனைவிகளை இரவு முழுவதும் பாடிக் களியாட்டம் கொள்வர். அக்பர் மன்னன் காலமானபின் ஜிஹாங்கீர் தம்வெப்பகாட்களுக்குக் காஷ்மீரத்தைப் போற்றினர். எனவே பத்தேபூர் சிக்ரி காலியாக்கப்பட்டது. ஷாஜஹான் டெல்லிக்குத் தம் அரசியல் தலைமையை மாற்றினர். எனவே பத்தேபூர் சிக்ரி இருளடர்ந்தும், காகம், சிட்டுக் குருவி, வௌவால்பெருகியும் காணப்படுவதுடன் பூதபிசாசங்கள் நிரம்பிக் கிடப்பதாகச் சொல்லப்படுகின்றது. டெல்லி அரசு ராஜ புத்திரர்கள்மீது கோபங் கொள்கையில் அவர்களை இங்கு (பத்தேபூர் சிக்ரியில்) கைதுசெய்வது வழக்கமாக இருந்தது.

இவர்களில பலர் தாம சிறையில் கண்ட காட்சிகளை வரைந்தும் உள்ளார்கள். அவைகளைப் படிக்கப் படிக்க ரோமச்சிலிர்ப்பு உண்டாவதினால் ஒரு வேளை பத்தேபூர் சிகரி பேய் பிசாசுகளின் இருப்பிடமாகிவிட்ட தெனவும் நம்பப்படுகின்றது. இதைப்படிக்காது கட்டிடச் சில்பங்களைக் காணச்செல்பவர்களுக்குக் கோடிக் கணக்கான இந்திய திரவியத்தைவிழுங்கிஏப்பமிட்டுவிட்ட இல்லாம் சிற்பங்களாகவே விளங்கும். கிட்டத்தட்ட 20-30 வருடத்தில் இப்பெரும் மைதானம் தயாரிக்கப்பட்டு, சிறந்தோங்கி, பாழடைந்துள்ளது. இங்குதங்கி இரவில் கதைகளில் வாசித்துள்ளவைகளை அநுபவிக்க முற்படுபவர்களுக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. எனவே இங்கு செல்பவர்களெல்லாம் சலீம் சிஸ்தியின் உரிசு நாளைத் தவிர ஏனைய நாட்களில் தங்கக் கூடாதவர்களாகவே திரும்ப வேண்டியவர்களாக இருக்கின்றனர். உரிசு நாட்களின் குதூகுலமும் இக்கட்டிடங்களினிடையில் ஏற்படும் அட்டூழியங்களும்பார்த்தவர்களுக்குத் தான் தெரியும். வெளியிடுவதில் அவைகள் செப்பனிடப் படா. குடி, விபசாரம் இரண்டும் உரிசு என்ற மதத்தின் திரையில் இங்கு தாண்டவமாடுகின்றன.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் வித்வான் நா. கோவிந்தசாமி பண்டிதர்)

(72-ம் பக்கத் தொடர்ச்சி.)

கேளுங்களின்னமுஞ் சொல்லுகின் றேங்கிள்ளி
கீர்த்திய நபாயன் காலமதில்
சேளுங்கயிலையில் வாழுந் தொண்டர்களின்
நெடுஞ்சரிதஞ் சொன்ன ரொருவர். (88)

சேக்கிழா ரென்றவர்நாமம் புகலுவர்
தெய்வப் புலமையுடையவர் காண்
வாக்குடையார்க் கவர்நாயகமா யிந்த
வையகத் துள்ளவர் நன்கறிவார், (89)

தொண்டர் புராணத்தைப் பாடிடவேயவர்
தொகைபோர் பாகளைப் போற்றிநிற்க
எண்டிசை யண்டருஞ் சூழுஞ்சிற்றம்பலத்
திறைவன் தொண்டர்கள் வாழ்ந்திடவே. (90)

உலகெலா முணர்ந்தோதற் கரியவென்
றோரடி யெடுத்துத் தந்திடவே
நலஞ்சிறந்திடு நாயன்மார் கதையை
நாவலர் கூறினரென்ப நல்லோர். (91)

அன்பர் புராணத்தின் முன்னடிசிற்சபை
அந்தணன் வாயினில் வந்ததென்றால்
பொனபுரை செந்தமிழ்ப் பொற்பினை யொருவர்
புகல்வதெளிதோ பொன்னனையீர். (92)

கச்சியப்ப னென்றவேதியன் நாற்கவி
கற்றவன் கந்தபு ராணமதைச்
செச்சைகொள் வேலவனருளிற் செப்பினன்
தென்னிய செந்தமிழ்ச் செய்யுளிலே. (93)

அகடமில்லதை யாண்டவன் சந்நிதி
ஆன்றவர் முன்னரங் கேற்றுகையில்
திகடசக்கர மென்றமுற் செய்யுளில்
சிதைந்த சந்திவென்றார் புவலர். (94)

தென்னியர் முன்னம்நூல் செய்தவன்விதியைத்
தெளியக் காட்டுவன் நானென்றே
புள்ளிமயிலேறும் புண்ணியன் பாதத்தைப்
போற்றி யுறக்கமிலாத யர்ந்தான். (95)

தொண்டர் அயர்த்தைத் தொலைக்கு நாயகன்
சோதிமணி முடியா றுடையான்
கண்டுதன் தொண்டரின் கலக்கந்தீரவே
கனவிற் காணுங்காட்சி தந்தே. (96)

நன்றுநன்று நாளைநாம் வருவோம் அவை
நாடியே குற்றந்தவிர்த் தருள்வோம்
சென்றுவல்லோ ரவைக்களத்திரு வெனச்
செப்பி மறைந்தனன் தேசிகனே. (97)

மற்றுநாள்கூடிய மாண்புறு செந்தமிழ்
வல்லவர் நிறைந்த நல்லவையில்
முற்றுதபொன் முகைமுலைப்பா லுண்டவன்
மூாணுற்ற விதியாது சொல்வீர். (98)

தீரோதமிழிற் றெள்ளியரே யெனத்
திகடசக்கரச் சந்தி யென்றார்
வீரசோழிய மென்றேயோரி லக்கணம்
விதியுண்டே யிதோபாரு மென்றே. (99)

கல்விக் கழகத்திற்காட்டி மறைந்தவன்
கானகக் குறத்தி காதலன்தான்
கல்விமலிகௌரி செல்வனற் சாட்சியால்
ஞாயமாக் கொண்டனர் நாவலரே. (100)

சங்கத்து ருத்திரசன்ம னெனப்பெயர்
தாங்கிய முருகன் தண்டமிழ்க்கே
பங்கமில்லா தொருநூலைச் சொன்னானெனில்
பாக்கியமிதனின் வேறுமுண்டோ. (101)

இன்பத்துக் கொருநூலில்லை யென்றேசங்கத்
திருந்த புலவரேங்கி நிற்க
துன்பத்தைக் கடந்தசோதி மலைசோம
சுந்தர மதனைக் கண்டிரங்கி. (102)

இறையனாகப் பொருளென் றொருநூல்
எழுதி வைத்தனன் பீடமதில்
மறையவன் கோயில்குருக்கள் கண்டதை
மாடக்கூடல் மன்னவற் களித்தான். (103)

கொண்டதைச் சங்கத்திலே கொடுத்தேயவன்
கோதறு மெய்யுரைகாண்மி னென்றான்
கண்டவர் யாவருங்கூறினர் காணுரை
கருத்தொன்றும் பொருந் தாததனால். (104)

நான்கு கடிதங்கள்.

(சிறு கதை).

(ஸ்ரீமான் கே. சி. இராமஸ்வாமி, எம்.ஏ., எல்.டி.)

முதற் கடிதம்.

க்ஷேமம். பங்குனிமீ 10உ

ஆசிர்வாதம். நம் குழந்தைகள் சௌக்கியம். ருக்மணிக்கு வரன் தேடித் தேடித் திரிவதே எனக்குத் தற்காலம் வேலையாயிருக்கிறது. 'பெண் புத்திசாலி; நல்ல அழகு; சுமாராய் நகை போட்டிருக்கிறேன்' என்றால் யார் கேட்கிறார்கள். சின்ன வயதான பையனைப் பார்த்தால் வரதக்ஷிணை 1,000, 2,000 கேட்கிறார்கள். முன் மூன்று பெண்களுக்கும் கலியாணஞ் செய்து நம் நிலத்தைப் போக்கியம் வைத்தாய் விட்டது. இனி எங்கே, யாரைப்போய்க் கேட்கிறது. எப்படியாயது கன்னி கழித்தால்போது மென்றாய் விட்டது. உன் மன்னியும் இரண்டாவது மூன்றாவது தாரமாயிருந்தாலும் போதும் என்கிறாள்.

இந்த ஊர் மிராசுதாருடைய சம்சாரம் காலமாகி ஆறு மாதமாகிறது. நல்ல ஆஜானுபாகு. வயது முப்பதிற்குமேலிருக்கலாம். ஏதோ சில காலமாகக் காலில் வீக்கம் வந்திருக்கிறது. இருந்தாலும் சிலரைக் கேட்டதில் தோஷமில்லை என்கிறார்கள். அவருடைய தம்பிகள் இரண்டு பேரும் சின்னவர்கள், கலியாணமாகவில்லை. தமையனுக்குக் கலியாணமானால் பிறகு அவர்களுக்கு நிச்சயமாகலாம். அவர்கள் தமையனுக்கு நிலம் மாத்திரம் ரூ. 20,000 பெறுமானதாய் இருக்கிறதாம்.

நம் ருக்மணி விஷயமாய்க் கலந்து யோசித்துப் பார்த்ததில் அவர்களுக்கு சம்மதமாயிருக்கலாமென்று தோன்றுகிறது. அடுத்த வாரம் அங்கு வருவதாயும், பெண்ணைப் பார்த்த பிறகு முடிவு சொல்வதாயும் சொன்னார்கள், ஆகையால் இந்த விஷயத்தை மன்னிக்கு மாத்திரம் சொல்லு. என்ன செய்கிறது! ருக்மணி கடைக்குட்டி. என்னவோ நன்றாய்ச் செய்ய வேண்டுமென்றிருந்தும் பிராப்தம் வேண்டாமா? நான் இரண்டு மூன்று நாளில் அங்கு வந்து சேருகிறேன்.

ஆசிர்வாதம்,
விசுவநாதன்.

இரண்டாங் கடிதம்.

க்ஷேமம். பங்குனி மீ 19உ

ம-௱-௱ஸ்ரீ அண்ணா அவர்களின் பாதபத்மங்களுக்குத் தம்பி ரங்கநாதன் அனேக நமஸ்காரம். உபய குசலோபரி.

நேற்றைய தினம் ம-௱-௱ஸ்ரீ—வீட்டிற்குப் போய் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தோம். பெண் தேவலை. நன்றாயிருக்கிறது. முகத்தில் நல்ல களை. சாயந்திரம் பெண்ணின் தகப்பனாரைக் கண்டு மற்ற விஷயங்களைத் தீர்மானஞ் செய்தோம். பல விஷயங்களையும்உத்தேசித்துக் கலியாணம் திருப்பதியில்தான் நடக்கவேண்டுமென்றும் ஒரு நாள் கலியாணமாகத் தானிருக்கவேண்டுமென்றும் சொன்னேன். இது பெண்ணின் தாயாருக்கு இஷ்டமில்லை, இருந்தாலும் தகப்பனார் ஒத்துக்கொண்டார், ஆகையால் நீங்கள் தயாராயிருக்கவேண்டியது. தங்கள் காலைப் பற்றி ஒரு கேள்வியும் ஏற்படவில்லை. "சுபஸ்ய சீக்ரம்." ஆகையால் முகூர்த்தத்தை சித்திரைக்கு முன்னமே வைக்க வேண்டுமென்று சொன்னேன். அதைப் பற்றி நாள் பார்த்து நாளைக்குச் சொல்வதாக இருக்கிறார்.

நீங்கள் 28உ புறப்பட்டால் நேரே திருப்பதிக்கு 29உ சாயங்காலம் வந்து விடலாம். நான் பட்டணம்போய் வேண்டிய ஜவுளி முதலியவற்றை வாங்கி வருகிறேன். உடனே தந்தி மூலமாக முன் சொன்னபடி பணம் அனுப்பவும் வேணும்.

அனேக நமஸ்காரம்,

ரங்கநாதன்.

மூன்றாங் கடிதம்.

திருப்பதி,
பங்குனி மீ 31உ

அன்புள்ள நண்பா,

நரசிம்மனுடன் அவன் அத்தங்கார் கலியாணத்திற்கு இங்கு நான் வந்தது தெரியுமே. கலியாணத்தைக் காணவேண்டுமென்று நான் வரவில்லை. ஏனென்றால், இந்தக் கலியாணத்திற்கு நான் ஏன் வரவேண்டும்? ஆனாலும் திருப்பதியைப் பார்க்கவேண்டுமென்று எனக்குப் பல வருஷங்களாக ஆவல். அதை மனதில் வைத்துக்கொண்டு நரசிம்மன் தன்னுடன் வரச் சொன்னபோது உடனே வந்து விட்டேன். இதைப் பற்றி நான் இந்தக் கடிதம் எழுதவில்லை.

நரசிம்மனுடைய அத்தங்கார் உறவாகிய ருக்மணிக்கல்லவா கலியாணம். அந்தப் பெண்ணைச் சிறு குழந்தையாயிருக்கும்போதே அவளை நரசிம்மனுக்கு விவாகம் செய்வதாகப் பெண்ணின் பெற்றோர் சொன்னார்களாம். அப்போது நரசிம்மன் தகப்பனாருக்கு வேண்டிய பூஸ்திதி இருந்தது—ஆனால் நரசிம்மனுடைய தமக்கை தங்கை இவர்களுக்குக் கலியாணஞ் செய்ததிலும், நரசிம்மனைப் படிக்கப் பட்டணம் அனுப்பினதிலும் எல்லாம் அழிந்து விட்டது. பெண்ணின் தகப்பனாருக்கும் அப்படியே. அதோடு தம் பெண்ணை ஏழைக்குக் கொடுப்பதைவிட பூஸ்திதியுள்ள ஒருவனுக்குக் கொடுக்க அவருக்குப் பிரியம். மேலும் நரசிம்மன் இப்போது இண்டர்மீடியட் வாசிக்கிறானே! அவனுக்குக் கொடுத்தால் வரதக்ஷிணை கேட்பார்களே என்று அவர் நினைத்து அந்தப் பேச்சை நிறுத்தி விட்டாராம்.

என்ன செய்கிறது. இடையன் ஆட்டுக்குட்டியைத் தோளின்மேல் போட்டுக்கொண்டு அலைந்ததுபோல விசுவநாதர் திரிந்தார். கடைசியில் ஒரு மிராசுதாரருக்கு இரண்டாந் தாரமாகக் கொடுப்பதாகத் தீர்மானித்தார். 'மாப்பிள்ளையின் தம்பி பெண்ணை ஒரு வாரத்திற்கு முன் வந்து பார்த்துவிட்டு, முகூர்த்தம் நிச்சயம் செய்துகொண்டு போய்விட்டான். மாப்பிள்ளை அவன் தம்பியைப் போலிருப்பானென்று எல்லாரும் நினைத்தார்களாம்.

நாங்கள் முந்தநாள் காலை வந்தோம். நரசிம்மனும் நானும் வந்ததில் விசுவநாதருக்கு மிகவும் சந்தோஷம். அவரிட்ட வேலையைச் செய்து முடித்தோம். நரசிம்மனுக்கு மனவருத்தம் அதிகமாயிருந்தபோதிலும், வெளியிற் காட்டாமல் தன் அத்திம்பேர் சொன்னபடி செய்து வந்தான்.

ருக்மணி கலியாணப் பெண்ணாயிற்றே! அவளுடைய கலியாணமாயிருந்தாலும், யாரும் அவளைக் கவனிக்கவேயில்லை. நம் பெண்கள் வழக்கம்போல உள்ளிருந்தபடியே நடக்கும் ஏற்பாடுகளைக் கவனித்து வந்தாள்—நரசிம்மன் ஒரு முறை உள்ளேபோய் வந்தபோது நான் காத்திருந்தேன்—"அம்மாஞ்சி! என் தலைவிதி" என்றது மாத்திரம் காதில் விழுந்தது—நரசிம்மன் கண்களில் நீர் ததும்ப வெளியே வந்ததால் ருக்மணிதான் என்னவோ சொல்லியிருக்கவேண்டும் என்று நினைத்தேன்.

மாப்பிள்ளை வீட்டார் சாயங்கிரம் ரயிலில் வந்திறங்கினார்கள். நானும் நரசிம்மனும்போய் வேண்டிய சௌகரியங்கள் செய்தோம். வந்தவர்கள் 15—பேர்கள்தான். அவர்களில் 4-பேர் அண்ணன் தம்பிகளாம். மாப்பிள்ளை யார் என்று கேட்டதில் பெரியவராய் இருந்தவரைக் காட்டினார்கள்—இதைப் பற்றி பிறகு.

இருட்டினதும் ஜானுவாசத்திற்குப் புறப்பட்டார்கள். கோயிலுக்குப் போகிறதுதானே வழக்கம். மாப்பிள்ளை வீட்டார் இறங்கின வீடு தெருவின் ஒரு கோடி; கோயில் மற்றொரு கோடி. நாங்கள்—பெண் வீட்டார்—நடுவிலிருந்த ஒரு வீட்டில் தங்கியிருக்கிறோம். கோவிலுக்குப்போகும்போது ஒன்றுமில்லை திரும்பி வரும்போது பல விஷயங்கள் வெளி வந்தன. மாப்பிள்ளைக்கு வேண்டிய உடுப்புகளை அவர்களே தைத்துக்கொண்டு வந்தார்கள்—பெரியவர்தான் மாப்பிள்ளை. அவர் புது உடுப்பு போட்டபோது தெரிந்தது அவருக்கு யானைக்கால் என்று. முகமோ சனிசுவர பகவானின் அம்சம்—காலோ அசல் யானைக்கால். வயது 35-க்கு மேலாயிற்று. ருக்மணியைப் போன்ற அழகிய பெண்ணிற்கு இந்தக் குரூபியா புணமகனாக வரவேண்டும் என்று நினைத்தேன். ஜானுவாசம் நடக்கும்போது நரசிம்மனைக் காணவில்லை. தாம்பூலம் கொடுக்க உதவி செய்ய அவனைத் தேடினேன். தனியே இருட்டில் நின்று கொண்டிருந்தான். கண்களிலிருந்து நீர் பெருகிற்று. அவன் மனதுதான் உனக்குத் தெரியுமே! "எனக்கு அவளைக் கலியாணஞ் செய்யவேண்டாம். வேறே சிறியவனாய் ஒருவனும் அகப்படவில்லையா? முருகா! இந்த வெங்கடாசலபதி உண்மைத் தெய்வமானால் இந்த கலியாணம் தடைபட வேண்டும்" என்று அவன் சொன்னான்—எப்படியோ, சமாதானம் சொல்லி அழைத்து வந்தேன்.

இந்த அழகான மாப்பிள்ளையை ருக்மணியும் வீட்டு ஜன்னல் வழியாய்ப் பார்த்து விட்டாள். நம் பெண்கள் வாய்தான் தெரியுமே—வீட்டிற்கு வந்ததும் மாப்பிள்ளையின் ரூபலாவண்ணியத்தையும் உரல் போன்ற காலையும் வர்ணிக்க ஆரம்பித்தார்கள்.

இரவு 12 மணியிருக்கும். நானும் நரசிம்மனும் வாயில் திண்ணையில் படுத்திருந்தோம். வீட்டிற்குள்ளே கலவர சத்தம் கேட்டது. நரசிம்மனும் நானும் எழுந்து என்ன சத்தமென்று கவனித்தோம்—'அப்பா! என்னைக் கொன்று விடுங்கள்—நான் அந்தக் கிழத்தை—ஆனைக்காலைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன். ஒரு குருடனுக்காவது என்னைத் தள்ளுங்களேன்" என்று ருக்மணி அழுது கொண்டிருந்தாள். அவள் தகப்பனாரும் தாயாரும் சொல்லச் சொல்ல அழுகை அதிகமாயிற்று. "அப்பா! அப்பா!! வெங்கடாசலபதி சாக்ஷியாகச் சொல்கிறேன். அந்த கறுப்பன் எனக்குத் தாலிகட்டினால் உடனே உயிர் விடுவேன். குளத்தில் விழுந்து சாவேன்!" என்று ருக்மணி ஓவென்றலறினாள்.

நானும் நரசிம்மனும் உள்ளே ஓடிப்போனோம். என்ன சொல்லியும் ருக்மணி கேட்கவில்லை. இப்படியே இரவு கழிந்தது. பொழுது விடிந்தது. மாப்பிள்ளை இறங்கியிருக்கும் வீட்டில் மங்கள வாத்தியம் கேட்டது. இங்கு ருக்மணியின் அழுகைதான் அதிகரித்தது. அதிகம் சொல்வானேன். இந்த சமாச்சாரம் மாப்பிள்ளைக்கும் தெரியவந்தது. அவர் பரதேசிக் கோலம் போகத் தயாராயிருந்தார். ஆனால் பெண் வெளியிலவர முடியாதென்று சொல்லி விட்டாள், முடிவைச் சொல்கிறேன் கேள்.

மாப்பிள்ளை இப்போதே இவ்வாறு இஷ்டமில்லாத பெண் தனக்கு வேண்டாமென்று பகல் 12 மணிக்கு ரேற்று புறப்பட்டுப் போய் விட்டார். விசுவநாதர் என்ன செய்வார்! நேற்றையதினம காலை 9 மணிக்கு ஒரு முகூர்த்தம் இருந்தது. எப்படியாவது விவாகம்

செய்தேதீரவேண்டுமென்று அவர் சம்சாரம் முதலியவர்கள் வற்புறுத்தவே கடைசியாக நாசிம்மனுக்கே இரண்டாவது முகூர்த்தத்தில் விவாகஞ் செய்யத் தீர்மானித்தார்கள்.

இதில் வேடிக்கை யென்ன தெரியுமா? நாசிம்மனுடைய தகப்பனாருக்கும் தாயாருக்கும் தங்கள் பிள்ளைக்கு ருக்மணியைக் கொடுக்கவில்லையே என்று பெரும் வருத்தம். அதனால் தான் அவர்கள் வரவில்லை, நாசிம்மனை அனுப்பினார்கள். இப்போது நாசிம்மனுக்கு விவாகம் நடக்கவேண்டுமே! அதனால் நாசிம்மனைக் கேட்டு அவன் சம்மதித்தவுடனே ருக்மணிக்கு மாங்கல்ய தாரணம் நாசிம்மன் கையாலாயிற்று. விஷயங்களைத் தெரிவித்து உடனே புறப்படும்படியாய் அவன் தகப்பனாருக்குத் தந்தி அடித்தார்கள். அவர்களும் இன்று காலை வந்து சேர்ந்தார்கள்.

சௌபாக்கியவதி ருக்மணியின் முகத்தில் ஆனந்த லக்ஷ்மி இப்போது அற்புதத்தாண்டவமாடுகிறாள். ஊரையும், கல்யாணத்தையும் பார்க்க வந்த நான் இப்போது இரண்டு பெயருடைய காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்று மாப்பிள்ளைத் தோழன் பிள்ளை வீட்டுக்காரன்; இரண்டாவது, நாசிம்மன் பெண் வீட்டாரைச் சேர்ந்தவனாதலால் அவன் மாப்பிள்ளையாய்ப் போகவே, அவன் வேலையையும் நான் செய்யவேண்டி யிருக்கிறது.

இதிருக்கட்டும். ஊர்கோலத்திற்கு நீ அவசியம் வரவேண்டுமென்று நாசிம்மன் எழுதச் சொல்கிறான். வரப் போக ரயில் சார்ஜைக் கொடுத்து விடுகிறோம். அவசியம் வரவும். மற்றவை நேரில்,

உன்னன்புள்ள,
முத்துகிருஷ்ணன்.

நாலாங்கடிதம்.

ஆவணி மீ 15௳

பிரியமுள்ள பர்த்தாவுக்கு அனேக நமஸ்காரம். க்ஷேமம்.

உங்கள் அன்புள்ள கடிதம் கிடைத்தது. நீங்கள் அவசியம் நவராத்திரிக்கு இங்கு வரவேணும். வேறு வேலையிருக்கிறதென்று சொல்லப் போகிறீர்களென்று இப்போதே எழுதுகிறேன். அப்பாவும் அப்புறம் எழுதுவார். வரும்போது முத்தண்ணாவையும் அழைத்து வரவும். அவர் தம் மாமியார் அகம் போகாது அவ்விடமிருந்தால் என் நமஸ்காரம்.

தங்களையே ஸதா நினைத்திருக்கும்,
ருக்மணி.

நோய்.

வியாசம் 3.

(ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)

முதன் முதல் ஒருவன் மனது சரீர சுகாதார விஷயத்தில் கவனம் செலுத்தி வரும்படி வற்புறுத்தக் கூறுமுன் அக்கவனமானது மிதமீறிச் சென்று சதா தேக ஆரோக்கியத்தையே நினைத்துக் கொண்டிருக்கும் கவலையாய் மாறி விடாமல் பார்த்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்யவேண்டும். ஏனென்றால் அவ்விதக் கவலையே முடிவில் நமக்குக்கெடுதலை விளைவிக்கின்றது. ஒருவன் சதா தான் உண்ணுவதையும் உறங்குவதையும் கணக்கு பார்த்துக்கொண்டும், "அச்சிஸ்" என்பதற்குள் "அப்பாடா" என்று பல ஔஷதங்களை விழுங்கிக்கொண்டும், நிமிஷத்திற்கொரு முறை நாடியைப் பிடித்தும் நாக்கை நீட்டியும் பார்த்துக்கொண்டிருந்தால் அதுவே ஒரு பெரிய வியாதியாய் முடிகிறது.

பலர் ஒரு குறிப்பிட்ட வியாதியை வரவொட்டாமல் தடுக்க எண்ணி, அதே கவலையாய் இருந்து வந்து முடிவில் அவ்வியாதியைத் தாங்களே வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். இதற்குச் சரீரத்தைச் சார்ந்த பிரகிருதி சட்டமே காரணமென்னலாம். அதாவது எப்போது சரீரத்தின் ஏதோ ஒரு பாகத்தைக் குறித்து கவனமானது செலுத்தப்படுகிறதோ, அப்போது அப்பாகத்தின் வேலையில் கலக்கம் ஏற்படுகிறது. நோய்க்குறிகள் அவைகளின் நினைவின் கவலையாலேயே அதிகரிக்கின்றன. இது யாவருக்கும் பிரத்தியட்சமாகத் தெரியக்கூடிய விஷயமே. திருஷ்டாந்தமாக, நாம் நாடியைப் பிடித்துப் பார்க்கத்தொடங்கவும் அதை அறியவேண்டுமென்ற ஓர் கவலையானது அச்சமயம் நம் நாடியின் வேகத்தை சகஜமாயிருப்பதைக் காட்டிலும் அதிகரித்தே காட்டும்படி செய்கிறது.

துயிலச் சென்ற ஒருவன் தனக்கு நல்ல நித்திரை வருமோவென எண்ணமிட்டுக்கொண்டிருந்தால் உண்மையில் வருகிற நித்திரையும் கலைந்து விடுவது சகஜமன்றோ?

நோயானது பாதிப்பங்கு நம் அஜாக்கிரதையால் வருவதென்றால், மற்றப்பாதி நாம் அதைக் குறித்து மித மீறிக் கவலைப்படுவதினாலேயே வருகிறதென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

நம் அஜாக்கிரதையினாலோ, அதி ஜாக்கிரதையினாலோ, நம் உட்சென்று விட்ட விஷத்தை வெளிப்படுத்த முயலும் பிரகிருதியின் முயற்சியே நோயெனப்படும். ஔஷத சாஸ்திரத்தின்படி நம் சரீரத்தினுள் இரண்டு வித கிருமிப்படைகள் இருப்பதாகத் தெரியவருகின்றது. ஒன்று நமதுடலை ஒருவித வியாதியும் தாக்கக்கூடாதபடி தடுத்துவரும் நேசக் கிருமிப் படை. மற்றொன்றோ பல கொடிய வியாதிகளுக்கும் உற்பத்தி ஸ்தானமான சத்துருக் கிருமிப் படை. நம் சரீரத்தில் இவ்விரண்டிற்கும் சதா பலத்த போர் நடந்து கொண்டேயிருக்கிறது. நாம் பூரண ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமானால் சுகாதாரச்சட்டங்களை அனுசரித்து நேசப்படைக்குதவி புரியவேண்டும். அப்படிச் செய்யாமல் நாம் மனம்போனபடி சுகாதாரச் சட்டங்களை மீறி நடந்துவருவோமானால் சத்துருப் படைக்கு உதவி புரிந்தவர்களே ஆவோம். நோயுற்றபோது தகுந்த ஔஷதம் எடுத்துக்கொண்டால் எல்லாம் சரியாய் விடும் என்று எண்ணுவது வீண். முற்கூறிய விதம் நோயானது சரீரத்தின் உள்ளிருக்கும் விஷத்தை வெளிப்படுத்த முயலும் பிரகிருதியின் முறையென்றால் அப்பிரகிருதியே அந்நோயை குணப்படுத்த வல்லவள். மருந்துகளை உட்கொள்வதால் பிரகிருதிக்கு அவள் வேலையில் கூட உதவி புரிவதேயன்றி, தனியே மருந்துகளால் மட்டும் நோயை குணப்படுத்த இயலாது. தற்காலப் பிரபல வைத்தியர்களின் அபிப்பிராயமும் இதுவே. ஆகையால்தான் இக்காலத்துப் புதிய வைத்தியர்கள் நோயாளியின் வியாதியைக் குணப்படுத்தும் விஷயத்தில், புதிய புதிய மருந்துக்களைக் கொடுத்து பரீக்ஷை பார்ப்பதைக்காட்டிலும், நல்ல காற்று, வெளிச்சம், இடம், பத்திய உணவு, வியாதியஸ்தனுக்குத் தகுந்த உபசாரம், பராமரிப்பு இவைகளில் கவனம் செலுத்தி வருகிறார்கள். நிற்க, நோயாளி குணப்படும் விஷயத்தில் வைத்தியர்களும் மருந்துகளும் இன்றியமையாதவைகள் என்றாலும் தனிமையில் அவைகள் மட்டும் போதா. நோயுற்றவனுக்கு அவைகளிடத்தில் நம்பகமும் மதிப்பும் இருப்பது அவசியம். மேலும், வியாதியஸ்தன் பொறுமையும், தான் சொஸ்தமடையப் போகிறோமென்ற நம்பகமும், தைரியமும் உள்ளவனாய் இருத்தல் வேண்டும். நோய் குணப்படுவதற்கும் நாம் பூரண ஆரோக்கியத்துடன் வாழுவதற்கும்

முக்கியமானவைகள் யாதென்றால், ஒழிவு, அதிகம் அலட்டாமை, பத்தியம் அல்லது யுக்தாகாரம், மனச் சந்துஷ்டி அல்லது கவலையற்றிருப்பது இவைகளே.

தற்கால முன்னேற்ற முறைப்படி புதிய புதிய ஔஷதங்களும் வைத்திய முறைகளும் விருத்தியடைந்து வந்தும், வைசூரி முதலிய கொள்ளை நோய்களுக்கும், க்ஷயநோய் முதலிய கொடிய வியாதிகளுக்கும் உட்படுபவர் தொகை அதிகரித்தேயிருப்பதற்கு யாது காரணமென்றாலோ பட்டண (நகர) வாசத்தின் நெருக்கமும், ஜனத்தொகையும், கிராம வாசத்தின் அசுத்த நீர் முதலிய சுகாதாரக்குறைவுமே காரணமெனலாம். மேலும் தற்காலத்தின் நாகரிகத்தின்படி மனிதர் பழகிவரும் கெட்ட பழக்கங்களும் சரீர உழைப்பின்றி வாழும் முறையுங்கூட நம்முள் பெரும்பாலரும் ஏதோ ஒரு தேக, மனோ வியாதியுற்றுக் கஷ்டப்படுவதற்கு ஏதுவாயிருக்கின்றன. முற்காலத்திய ஆங்கிலேய வைத்தியர்கள், தேகத்தில் யாதொரு பாகம் வியாதிக்கு உட்படுகிறதோ, அதையே முக்கியமாய் கவனித்து வேண்டிய முறைகளை அனுஷ்டித்து வந்தார்கள். ஆனால் சிறிது காலத்திற்கு முன் கண்டு பிடித்த விஷயங்களைக்கொண்டு நோயைக் குணப்படுத்தும் விஷயத்தில் நோய்க்குட்பட்ட பாகந் தவிர சரீரத்தின் மற்றபாகங்களும் தம்தம் வேலையைத் தவறாமல் சரிவரச்செய்துவர அவைகளின் ஆரோக்கியத்தை கவனிப்பதும் அவசியமென்றும், பல கடும் மருந்துகளை உள்ளுக்கேற்றி அடமாய் ஒரே அடியில் நோயைக் குணப்படுத்தப் பார்ப்பதைக் காட்டிலும் நல்ல காற்று, வெளிச்சம், பத்திய ஆகாரம், சுத்தமான வசதி இவைகளை நோயாளி அடையும்படி செய்து, நோய் அதிகரிக்காமல் இருப்பதற்குமட்டும் தேவையான சில யுக்த மருந்துகளைக் கொடுத்து, தானே அதன் வேகம் குறைந்து நோய் குணப்படும்படி விடுவதே மேலெனத்தெரியவருகிறது.

இதற்கு திருஷ்டாந்தமாக, க்ஷயநோய்க்காரர்கள், இருதய நோய்க்காரர்கள் முதலிய இவர்களை நல்ல காற்றோட்டம், வெளிச்சம் உள்ள சுத்தமான வசதிகளில் வைத்து, நல்ல ஆகாராதிபானங்களால் போஷித்து, அவர்கள் சரீரத்திற்குப்போதுமான வியாமம் விதித்து, அவர்கள் நித்திரை, ஜீரணம் இவைகள் சரிவர இருப்பதற்கு வேண்டியவைகளை அப்போதைக்கப்போது செய்து, போது போக்கிறதாக இலேசான தொழில், விளையாட்டு இவைகளை ஏற்படுத்தித் தந்து பார்த்ததில், அவர்கள் வியாதிக்கென்று உள்ளுக்கு யாதொருமருந்தையும் கொள்ளாமலே சொஸ்தமடைந்தார்கள். ஆகையால் மனிதன் மனது சரீரம் இரண்டிலும் பூரண ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டுமானால் கீழ்க்கண்ட முறைகளை அனுஷ்டித்தல் வேண்டும். அதாவது:—வேளை தவறாமல் குறித்த நேரங்களில் ஆகார பானம் முதலியவைகளை உட்கொள்ளல்; வேலை, ஒழிவு, நித்திரை இவைக்கு தினமானம் ஓர் கணக்கிட்ட நேரத்தை ஏற்படுத்திக் கொள்ளல்; மேற் கூறியவைகள் எதிலும் மிதமாயிருப்பது; மனச்சந்துஷ்டியுடனிருப்பது; கவலைக்கிடங்கொடாமலிருப்பது; சரீரத்திற்கு வேண்டிய உழைப்பைத் தருவது; கார வஸ்துக்கள், மயக்கந்தரும் லாகிரி வஸ்துக்கள், அதி தீக்ஷணமுள்ள பல கண்ட ஔஷதங்கள் இவைகளை உட்கொள்ளாமலிருப்பது; வாழ்க்கையின் பெரும் பாகத்தைக் கூடிய மட்டும் சுத்தமான திறந்த வெளி இடங்களில் செலவிட முயல்வது; சரீர ஆரோக்கியத்திற்கு அவசியமான சுத்த நீர் முதலிய சுகாதார முறைகள் உள்ளதும், சுற்றுப் பக்கங்களிலும் நம மனதிற்கு பிடித்த பழகிவரக் கூடிய மனிதர்களின் வாசஸ்தானங்கள் உளதுமான ஒரு வசதியும், நம் மனதிற்கும் சக்திக்கும் உகந்த ஓர் தொழிலும் ஏற்படுத்திக் கொள்ளல்; இவை யாவும் அதிருஷ்டவசத்தால் ஒருவனுக்கு சித்திக்குமேயானால் அவன் மனது சரீரம் இவையிரண்டிலும் பூரண ஆரோக்கியமுள்ளவனாய் நீண்ட ஆயுள் படைத்தவனாய் இருப்பான் என்பதில் என்ன ஐயம்?

பர்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(101-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் அத்தியாயம்.

சுசீல குமாரன்.

சுசீல குமாரன் தலையில் வானம் இடிந்து விழுந்தது போலாய் விட்டது. சாப்பிடுகையிலும், படுக்கையிலும், நடக்கையிலும், பேசுகையிலும் அவனுக்குச் சற்றேனும் அமைதி இல்லை. அவன் சதா சிந்தையிலேயே மூழ்கியிருக்கிறான். அவன் இயற்கையிலேயே ஆழ்ந்த சிந்தையுள்ளவன். ஆர அமர யோசிக்கும் தன்மைகொண்டவன் ; மிதபாஷி ; இதுவன்றி, சிற்சில சமயங்களில் தன் ஜமீன் விஷயமான விவகாரங்களிலும் கவலை கொண்டிருப்பதுண்டு. ஆகையால் இச்சமயம் அவன் ஏதோ மிகப் பெரிய விஷயமாய்ச் சிந்தையில் ஆழ்ந்திருக்கிறானென்ற அநுமானம் சிறிதும் பிரதிபைக்காவது செவிலித்தாய்க்காவது உண்டாகவில்லை; ஆகவே இவ்விஷயத்தைப்பற்றி அவனை ஒன்றும் கேட்கவுமில்லை. போஜன சமயத்திலாவது பிரதிபை அவனுக்கு எதிர்ப்பட்டால், அப்போதுதான் அவன் முன்போல் சிரித்துக் கொண்டு பேச முயல்வான். ஆனால் அப்படி முயன்றும் இப்பொழுது தங்கையை எதிரில் பார்ப்பது அவனுக்கு வருத்தமாயிருந்தது. பேசும் பொழுதே அவன் நெஞ்சம் பிளந்து போகிறது.

சுசீல குமாரன் பூபேந்திரனுடைய குணாதிசயத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ளவில்லை. புதிய உபாத்தியாயரின் கையில் அவன் விழுந்தது முதல் அவனைப்பற்றி சுசீல குமாரனுக்குக் கவலை உண்டாய் விட்டது. அவன் மனதில் எப்போதும் பின் வருமாறு சிந்தைகள் எழுந்து அவனை வருத்தலாயின — அப்பா பூபேந்திரனுக்குப் பிரதிபையை நிச்சிதார்த்தம் பண்ணிக் கொடுத்தது சரியில்லை. ஆனால் அதைப்பற்றி இப்போ சிந்திப்பதில் என்ன பிரயோஜனம்? நடந்தது என்னவோ நடந்து விட்டது; பிரதிபையின் நற்குணத்தையும், கல்வியையும், அறவுணர்ச்சியையும், விசுவாசத்தையும் கருதும்போது அவள் பூபேந்திரநாதனைத் தவிர்த்து வேறெவனையும் கனவிலாயினும் நினைப்பாள் என்பது அசம்பவம், முற்றிலும் அசம்பவம். அப்படியிருக்க, இப்போது பூபேந்திரநாதன் பிரதிபையைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் வேறொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால், பிரதிபையின் கதி என்னாகும்? இதற்கு மேல் சுசீலகுமாரனுக்குச் சிறிதும் யோசனை செல்லவில்லை; அந்த சமயம் அவன் நெஞ்சு பிளந்து போகலாயிற்று. அவன் கண்ணீரைத் தடுக்க அவனால் எவ்விதத்திலும் முடியவில்லை.

சுசீலகுமாரனுக்கு நரேச சந்திரனிடமிருந்து அநேகமாய்த் தினந்தோறும் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. அவற்றைப் படித்து அவனுக்கு நாளுக்குநாள் கவலை அதிகமாகத் தொடங்கியது. பூபேந்திரநாதனுடைய பாட்டியம்மை

யும் சிவானும், ஜாதிஜனமும் சுற்றத்தாரும் அரண்மனையிலுள்ள உத்தியோகஸ்தர் பெரும்பாலோரும், முக்கிய முக்கிய ஸ்தானங்களிலுள்ள அத்தியாபகர்களும் பண்டிதர்களும் முதலியஎல்லாருமே இராஜகுமாரனுக்கும் பிரதிபைக்கும் விவாகம் நடப்பதை எதிர்த்து நிற்கிறார்கள். பூபேந்திரநாதன் தானே திடசித்த முடையவனாயிருந்தால் கொஞ்சம் நம்பிக்கைவைக்க இடமுண்டு; ஆனால் இந்த நம்பிக்கையும் நிர்மூலமாய்விடுவதாயிருக்கிறது. அவன் வேறொரு பெண்ணைப் பார்த்திருக்கிறான். அவளோ பேரழகியாயிருக்கிறாள். அவளுடைய அழகு அவனுடைய துர்ப்பலமான மனதை மோக பரவசமாக்கி விட்டது. பாவம்! நரேச சந்திரன் தனியாய் என்ன செய்வான்? ஒரு பக்கம் அவன் தன்னாலான பிரயத்தனம் செய்து பூபேந்திரநாதனுடைய உள்ளத்தில் நல்லெண்ணங்கள் முளையெடுக்கும்படி செய்து வருகிறான்; மற்றொரு பக்கம் அவனுடைய தீயொழுக்கமுள்ள தோழர்கள் அம்முளைகளை அப்பொழுதே அழித்து விடுகிறார்கள். நரேசன் இன்று இவ்வாறு எழுதியிருக்கிறான்! "எப்போது பூபேந்திரன் அந்தப் புதிய பெண்ணைக் காட்சி கண்டானோ, அதிலிருந்து அவனுடைய எண்ணங்கள் ஒவ்வொன்றாய் மாறிக்கொண்டு வருகின்றன. அவன் எப்பொழுதுமே சிந்தையில் மூழ்கின வண்ணமாய் இருக்கிறான்; யாருடனும் விசேஷமாய் எவ்வகைப் பேச்சு வார்த்தைகளும் வைத்துக் கொள்வதில்லை. அவனுடைய இருதயத்தில் பிரளயகாலத்துச் சண்டமாருதம் போன்ற உற்பாதம் உருமிக்கொண்டிருக்கிறது. இப்போது பூபேந்திரநாதன் தன் வாழ்க்கையின் ஒரு பயங்கரமான சங்கட ஸ்தலத்தில் வந்து சேர்ந்திருப்பதாக நான் நம்புகிறேன். அவன் எந்தப்பக்கம் புரள்வானென்று சொல்ல முடியாது. ஆனால் புரள்வான் என்பது நிச்சயம். புத்திமானாகிய சிவானும் இதைத்தெரிந்துகொண்டு உமா சுந்தரியைச் சீக்[illegible] அவனுக்குக் கட்டிக்கொடுத்து விடுவதற்காக உள்ளுக்குள்ளேயே முயற்சி செய்து கொண்டிருக்கிறான்."

இந்தக் கடிதத்தைப் படித்தபோது சுசீல குமாரனுடைய ஆசையெல்லாம் அழிந்து விட்டது. இப்பொழுது சிவானின் மாயவலையிலிருந்து பூபேந்திரநாதன் தப்பித்துக் கொள்வது சாத்தியமில்லையென்று அவன் நினைக்கலானான். 'அப்படியானால் என் தங்கை சுகத்தை இழப்பது தான் தலைவிதியோ? ஆ, தெய்வமே!' என்று கதறிக்கொண்டே சுசீலகுமாரன் படுக்கையில் விழுந்து தலையணையால் முகத்தை மூடிக்கொண்டு சிறு பிள்ளையைப்போல் அழத் தலைப்பட்டான்.

ஐந்தாம் அத்தியாயம்.

மஹாத்மா.

சுசீல குமாரனுடைய நல்லகாலம் அன்றைய தினம் பிரதிபையும் செவிலித்தாயும் இரண்டு பேரும் வீட்டிலில்லை. மனோரமை அவர்களை அழைத்திருந்தபடியால், பிரதிபை தமையனுக்குப் போஜனமிட்டு முடிந்தவுடனே செவிலித்தாயுடன் கூட அவள் வீட்டுக்குப் போய் விட்டாள். மனோரமையின் வீட்டில் இன்று ஏராளமாக அக்கம் பக்கத்து மாதர்கள் கூடியிருந்தார்கள் அவர்களெல்லோருக்கும் இன்று பிரதிபை பியானோவாகிலும் ஹார்மோனியமாகிலும் வாசித்துக் கேட்கவேண்டுமென்று ஆசையாயிருந்தபடியால், பிரதிபை தன்னோடு பியானோவையும் ஹார்மோனியத்தையும் கூடக்கொண்டு போயிருந்தாள். இன்று சாயங்காலமாகிற வரையில் அவள் வீட்டுக்குத் திரும்பி வருவதாயில்லை. சுசீலகுமாரன் சோகசாகரத்தில் மூழ்கியிருந்தான். அப்பொழுதே அவன் தங்கையின் மெல்விரல்களால் தடவப்படுதலால் எழுந்த பியானோவின் கம்பீர ஜங்காரத்தைச் செவியுற்றான்.

சுசீலனுடைய விழிநீர்கள் வற்றிப்போய் விட்டன. அவன் அத்தக்ஷணமே படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து மனதைச் செலுத்திப் பியானோவின் மனோஹரமான ஜங்காரங்களைக் கேட்கலானான். கேட்கக் கேட்க அவனுடைய சோகத்தின் வேகம் மெல்லமெல்லத் தணிந்து கடைசியில் ஒரு கனத்த விபசன்மாய்ப் பரிணமித்தது. அதே சமயத்தில் அவன் செவியில் யாருடைய ஆறுதல் மொழியோ விழுந்தது. யாரோ பின் வருமாறு பேசுவதுபோல் தோற்றியது—"வத்ஸா, சோகத்தால் தைரியம் இழக்காதே; திடமாயிரு. இந்த வாழ்க்கை சுகத்தையாவது செல்வத்தையாவது போகிப்பதற்காக வன்று. வாழ்க்கையின் எல்லாவற்றிலும் மேலான லக்ஷ்யத்தில் திருஷ்டியைச் செலுத்து. தனம், ஜனம், மானம், சுகம் முதலியவை ஒன்றுமே இல்லை. இவை எல்லாம் மித்தை. தன்னுடைய ஆனந்த ஸ்வரூப சிந்தனையில் ஈடுபட்டு சோகத்தை அகற்று. உன்னுடைய மனதை வீட்டின் சிற்றெல்லையினின்றும், அற்பமாகிய தன்னலத்தினின்றும் ஈர்த்து விரிந்த விசுவ முழுதும் வியாபிக்கச் செய். உன்னுடைய ஸ்தூல உண்மையை மறந்துவிடு. அது யதார்த்தமான உண்மையல்ல. உண்மை அநுபவத்தால் அறியத்தக்கதோ அதையே பற்று. பிரதிபையைக் குறித்துக் கிஞ்சித்தும் சிந்திக்க வேண்டாம். அவள் பொருட்டு வாழ்க்கையின் விரிந்த வினைக்களம் பரந்து கிடக்கிறது." சுசீல குமாரன் தன்மயத்துவ மடைந்து இந்தத் திவ்ய வாணியைச் செவிமடுத்த வண்ணமாயிருந்தான். அதே சமயத்தில் பியானோவின் இன்னிசை அவமர்ந்தது. அவன் திடுக்கிட்டுப் பார்க்குமளவில் எதிரே நிற்கிறான் ராமசந்திரன்.

சுசீலகுமாரன் ஆச்சரியத்துடன் கேட்டான்:—"யார் ? ராமசந்திரனா ? எதற்காக வந்தாய் ?"

ராமசந்திரன் கூறினான்—"ஒரு மஹாத்மா வந்திருக்கிறார். நான் அவரைக் கீழே உட்காரச் சொல்லி விட்டு வந்தேன்.

"யார்? நம்முடைய குருமஹாராஜ் வந்திருக்கிறாரா என்ன? அவர் வந்து எவ்வளவு நேரம் ஆயிற்று? நீ அவரை மேலே ஏன் அழைத்து வர வில்லை? போ! சீக்கிரம் போய் அவரை இங்கே அழைத்துவா" என்று சொல்லி ராமசந்திரனை அனுப்பிவிட்டு, சுசீல குமாரன் பரபரப்பாய் எழுந்து ஒரு நாற்காலியை எடுத்து ஓர் தக்க ஸ்தானத்தில் போட்டு வைத்தான். அவ்வளவில் மஹாத்மா இராமசந்திரனுடன் அறைக்குள் வந்து சேர்ந்தார்.

குருமஹாராஜனைக் கண்டவுடனே சுசீல குமாரன் எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். அவர் அவன் தலைமீது கைவைத்து ஆசீர்வாதம் செய்தார். பிற்பாடு அவர் நாற்காலியில் அமர்ந்ததும், சுசீலகுமாரன் அவருக்கெதிரில் ஜமுக்காளத்தின்மேல் உட்கார்ந்தான்.

குருமஹாராஜன் திருமேனிமுழுதும் வெண்ணிறமாயிருந்தது. அவர் ஒரே காவி யாடை உடுத்திருந்தார். அவரது இடது கையில் கமண்டலமும் வலது கையில் தண்டமும் இருந்தன. திருமேனியின் வடிவம் சாதாரணமாயிருந்தது. அவர் தடித்துக் கொழுத்திருக்கவுமில்லை, மெலிந்து பலஹீனமாயுமிருக்கவில்லை. நிறம் பழுக்கக் காய்ந்த தடில்போல் சுடர் வீசியும், மூக்கு உயர்ந்து கூர்மையாயும், புருவங்கள் வெண்ணிறமாயும் இருந்தன. வெண்மேகப் படலங்களுக்குக் கீழ் பளிச்சிடும் இரண்டு நக்ஷத்திரங்களைப்போல் அவருடைய விழிகள் புருவங்களின் கீழ் ஒளி வீசின. அவருடைய பார்வை நெஞ்சத்தை ஊடுருவி அங்கு நிகழ்வதையெல்லாம் உணர்வதுபோல் தீக்ஷணமாயிருந்தது.

சற்று நேரம் மௌனமாயிருந்த பிறகு குருமஹாராஜன் கூறினார்—“அப்பா, நீ இப்பொழுது மகா பெரிய சங்கடத்தில் விழுந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்? மஹாத்மாக்களின் ‘धैर्यं विपदि’—‘ஆபத்தில் தைரியம் (கொள்ளவேண்டும்)’ என்னும் மூதுரையை நினைவில் இருத்திக் கருமத்தைச் செய். சுக துக்கங்களின் லாப நஷ்டங்களையும் கண்ணெடுத்துக் கூடப் பாராமல் கடமையைச் செய்து கொண்டுபோ. உலகத்தில் சுக துக்கங்கள் இருக்கவே செய்கின்றன. எல்லாம் பொய்; கற்பனை. வாஸ்தவத்தில் சுக துக்கமென்பதொன்றுமே இல்லை. இந்த சுக துக்கங்களுக்கு அதீதமானதெதுவோ, அதுவே சத்தியமானது, நித்தியமானது. நீ அந்த சத்தியமும் நித்தியமுமாகிய ஆத்மாவையே தியானம் செய்யக் கடவாய். மோகத்தால் அதை மறந்து ஏமாந்து போகாதே. வினைக்களத்தில் வீரரைப்போல் இழுத்துக் கட்டிக்கொண்டு நில். அற்பமாகிய சுய நலத்தை விடுத்துப் பிறர் நலத்தின் பொருட்டு வாழும் விரதத்தை மேற்கொள். இதிலிருந்து அபூர்வ ஆநந்தானுபவம் உண்டாகும். ஆத்மா விகாஸமுற்று ஸ்வஸ்வரூபம் விரிவதே வாழ்க்கையின் பரமலக்ஷ்யமாம்.

“எல்லா வகையான கட்டுக்களினின்றும் ஆத்மா முற்றிலும் விடுதலை அடைவதே மோக்ஷம். இச்சைகள் ஆத்மாவை எண்ணிறந்த கட்டுக்களால் கட்டி வைக்கின்றன. கட்டுக்கள் நீங்க நீங்க இச்சைகளும் அழிகின்றன. அல்லது, இச்சைகள் ஒவ்வொன்றாய் நசிக்க, கட்டுக்களும் ஒவ்வொன்றாய் நீங்குகின்றன. இச்சைகளை வெறுப்பதினால் மனதுக்குக் கஷ்டமும் உலகத்தில் அசௌகரியங்களும் உண்டான போதிலும், இவற்றுக்குப் பதிலாக நாம் திவ்யானந்தத்துக்கு அதிகாரிகளாகி மோக்ஷ மார்க்கத்தில் முன்னேறிப் போகிறவராகிறோம். சொற்ப பணம் செலவு செய்வதனால் துர்லபமாகிய இரத்தினம் பிராப்தியாவதாயிருந்தால், அந்தச் சொற்பதனச் செலவைக் குறித்துத் துக்கிப்பது புத்திமானுடைய காரியமல்லவே! தியாகமே மநுஷ்யனுடைய உயர்ந்த தருமமாகும். ஆத்மத்தியாகமென்றால் தன் சுய நலத்தைத் தியாகம் செய்வதும், தன்னுடைய குறுகிய தன்மையைத் தியாகம் செய்வதும், அல்லது தன்னுடைய இச்சைகளைத் தியாகம் செய்வதுமாம். தற்காலத்தில் இந்தத் தியாகமே அபாவமாய் விட்டிருக்கிறது. இந்தத் தியாகத்தின் பெயரே சுவாதீனத் தன்மையென்பது அல்லது ஸ்தூலமாய் மோக்ஷமென்றும் சொல்லலாம்.

“சாதாரணமாய் ஒரு ஜன்மத்தில் இந்த மோக்ஷம் அடையப்படுவதில்லை. பலபிறவிகளுக்குப் பிறகே இது பிராப்தியாகிறது. நான் முதலில் இச்சைகளின் கட்டுக்களைப் பற்றிப் பேசினேன். ஸ்தூலமாய்ச் சொன்னால், இந்த இச்சாபந்தனமே கர்மபந்தனமாம். கர்மக்ஷயத்தோடு கூடவே ஆசைகளின் க்ஷயமும் உண்டாகிறது. கர்மங்கள் சுயமாகவே க்ஷயமாகின்றன. அல்லது முயற்சியால் க்ஷயம் செய்யப்படுகின்றன. நான் கர்மக்ஷயத்தின் பொருட்டு முயற்சி செய்வதையே விரும்புகிறேன். எவனுக்கு எவ்வளவு கர்ம க்ஷயம் ஆகிறதோ—அவை இயற்கை முறைகளின்படி க்ஷயமானாலும் சரி, அல்லது முயற்சியால் க்ஷயம் செய்யப்பட்டாலும் சரி—அவனுக்கு அந்த க்ஷயத்துடன் கூடிய கர்மங்களுடனே பின் வரும் ஜன்மத்தின் காரியத்தைத் தொடங்கும்படி நேரிடும். இயற்கை முறைகளின்படி கர்ம க்ஷயமானால் அப்பொழுது மநுஷ்யன் பலவகை மானஸிக கஷ்டங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உட்படவேண்டி வரும். ஆனால் அப்பொழுது

அவனுக்குப் பிராப்தியாகும் ஞானமானது அவன் மோக்ஷ மார்க்கத்தில் முன்னேறிச் செல்லும் பொருட்டுத் துணைபுரியும்.”

இவ்வளவு பேசிய பிறகு மஹாத்மா சற்று நேரம் சும்மா இருந்துவிட்டுப் பிறகு கூறலுற்றார்—“அப்பா, என்னுடையவும் உன்னுடையவும் பிரதிபையினுடையவும் கர்மங்கள் சில இயற்கை நியமங்களின்படியும், சில முயற்சி வன்மையாலும் க்ஷயித்து வருகின்றன. நாம் எந்த நூதனமாகிய தன்னலங்கொண்ட இச்சைகளாலும் நூதன கர்மங்களைச் சிருஷ்டித்து நூதனக்கட்டுக்களால் கட்டப்படாதிருந்தால், நாம் பெரும்பாலும் நம் க்ஷேமத்தைச் சாதித்து வருகிறோமென்று எண்ணிக்கொள். பூர்வ ஜன்மத்தின் கர்மங்களுக்கு எப்பொழுது முடிவு உண்டாகிறதோ, அப்பொழுது இந்த ஜன்மத்தின் கர்மங்கள் ஆரம்பமாகின்றன. கர்மங்களின் பலத்துக்குப் பயந்து தயங்குவது உசிதமல்ல. வீரர்களைப்போல் ஆண்மையுடன் நின்று கர்ம பலன்களை எதிர்க்கவேண்டும்.

“பிரதிபையும் நீயும் ஆகிய இருவரும் மோக்ஷ மார்க்கத்தில் முன்னேறிப்போக முயன்றுகொண்டிருக்கிறீர்கள். இந்த முயற்சி இந்த ஜன்மத்திலேயே உண்டானதல்ல; ஆனால் முந்திய பல ஜன்மங்களிலிருந்து தொடர்ந்து வந்திருக்கிறது. உங்களுடைய இந்த முயற்சி நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாகவென்று நான் ஆசீர்வதிக்கிறேன். முமுக்ஷுக்கள், எனவே, மோக்ஷ விருப்பமுடையவர்களே உலகத்துக்கு உயிராயுள்ளவர்கள். அவர்களின் அபாவத்தினாலேயே பாரதவர்ஷம் இன்று இவ்வளவு வீழ்ச்சியுற்றிருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றி உனக்கு மற்றொரு சமயம் விவரிப்பேன். இப்போது பிரதிபையின் விவாக விஷயமாய் உண்டாயிருக்கும் குழப்பம் எனக்குத் தெரியும்; ஆனால் இதைப் பற்றி நீ ஒன்றும் சிந்திக்கவேண்டியதில்லை. பிரதிபை சாதாரணமான பெண் அல்ல. அவளுடைய புண்ணியம் தீவிரமானது. அவள் விஷயத்தில் உனக்கு உசிதமென்று தோற்றுவதைச் செய். உன்னைக் குமாரீ பர்வதத்தில் பார்த்த பிறகு நான் இங்கே கல்கத்தாவுக்கும் வந்து பிரதிபையை இரண்டொருவிசை பார்த்துப் போயிருக்கிறேன். பிரதிபை அசாதாரண குணவதியென்று அறிந்துகொண்டுவிட்டேன். தற்பொழுது இந்த பாரதவர்ஷத்தில் பிரதிபையைப் போன்ற மாதர்களே எல்லாவற்றிலும் அதிகமாய் வேண்டியிருக்கிறார்கள். ஆண்டவன் உனக்கும் அவளுக்கும் நலம் அருள்வாராக.” இவ்வாறு சொல்லிவிட்டுக் குருமஹாராஜன் எழுந்து நின்று சுசீலனுடைய தலையில் கை வைத்து ஆசி கூறிப் புறப்பட்டார்.

சுசீலகுமாரனும் அந்தக் கணமே எழுந்து வணக்கமாய் உரைத்தான்—“அடிகளே, இப்போ தேவரீர் எங்கே போகிறீர்கள்? இன்றைக்கு இங்கேயே தங்கியருளவேண்டும்.—”

குருமஹாராஜன் நகை புரிந்து கூறினார்—“அப்பா, இச்சமயம் என்னை இங்கே தங்கும்படி வற்புறுத்தாதே. நான் புறப்பட்டுப் போய் உன்னைக் குமாரீ பர்வதத்தில் கலந்து கொள்ளுகிறேன்.” இப்படிச் சொல்லிவிட்டு அவர் போகலானார். சுசீலகுமாரன் பக்தி சிரத்தையோடு அவரை வணங்கி, அவரது திருவடிப்பொடியைச் சென்னிமேற் கொண்டான்.

‘மங்கள முண்டாகுக’ என்று கூறி குருமஹாராஜன் அவ்வறையிலிருந்து வெளிப்பட்டுக் கீழே இறங்கிச் சென்றார். சுசீலனுடைய வாயிலிருந்து வேறொரு வார்த்தையும் வெளிப்படக் கூடவில்லை. அவன் இன்னது செய்வதென்று தோன்றாத பேதைபோல் திகைத்து நின்றான்.

(தொடரும்.)

ஆரோக்கியம்.

(ஸ்ரீமதி குகப்ரியை)

ஆரோக்கியமென்னும் வார்த்தை சாதாரணமாக எல்லாருக்கும் தெரிந்த ஒரு வார்த்தையே. அதை நாம் சௌக்கியமென்றும் "திடம்" என்றும் சுகம் என்றும் சமயத்துக்குத் தகுந்தபடி மாறு பெயர்களால் அழைக்கிறோம். பெரியோர்களை வணங்கினால் அவர்கள் "நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுமாய்" என்றுதான் வாழ்த்துகிறார்கள். அதாவது நோயற்ற வாழ்வுடையவர்களுக்கே செல்வம் பிரயோஜனப்படுமேயன்றி நோயாளியாயிருப்பவர்கள் எவ்வளவு மகோன்னத நிலையிலிருந்தாலும் ஒன்றையும் தாம் அனுபவிக்கவோ பிறருக்குச் செய்யவோ இயலாது என்பது யாவரும் அறிந்த விஷயமே. ஆரோக்கியமென்றால் என்னவென்பதைப் பற்றி எவ்வளவோ பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரிய பெரிய விஷயத்தைப் பற்றி நான் எழுதத்துணிந்தது ஓடத்தைக் கொண்டு சமுத்திரத்தைத் தாண்டுவதை ஒக்கும். தேக ஆரோக்கியம் எல்லா இன்பதுன்பங்களுக்கும் திறவுகோல் போன்றது. ஆனால் முற்றிலும் ஆரோக்கியமான நிலைமையிலுள்ளவர்கள் அகப்படுவது கஷ்டம். பெற்றோர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் குழந்தைகள் அவர்களைவிட நல்ல நிலைமையிலிருப்பார்கள் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இதன் கருத்து என்னவென்றால் பெற்றோர்கள் என்பதில் அன்னையும் பிதாவும் என்பதுபோல் அன்னையின் ஆரோக்கியமே முன்பு கவனிக்கப்படவேண்டியது. ஏனென்றால் ஒரு புருஷனுடைய ஆரோக்கியத்திற்கும், குழந்தையினுடைய ஆரோக்கியத்துக்கும் ஒரு ஸ்திரீயே காரணமாகிறாள். மனைவி பூரணமான ஆரோக்கியத்துடனிருந்தால்தான் குழந்தைகளையும் கணவனையும் சரியானபடி கவனித்துக் கொள்ளக் கூடும். "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" என்றபடி குடும்பத்தினுடைய ஆரோக்கியம் பெண்களையே பொருத்திருக்கிறது. அவள் நல்ல நிலைமையிலிருந்தால் தான் புருஷனுக்கு வேண்டியவற்றை செய்வதும், "சுசி ருசி"யாய் இருப்பதும் சாத்தியமாகும். குழந்தைகள் விஷயத்திலும் சுத்தமாய்க் குளிப்பாட்டல், உடுத்துதல், ஆகாரமளித்தல் முதலியவைகளையும் செய்ய முடியும். ஆனால் தற்காலத்திலோ தங்கள் கணவனுக்குத் தாங்களே சமைத்திடுதல் அகௌரவமென்று கருதுவோரும், தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே உடை உடுத்துதல், ஆகாரமளித்தல் முதலிய

வற்றைச் செய்தால் கேவலம் என்றும் கருதுவோரும் அநேகரிருக்கின்றார்கள். அவர்களுடைய செய்கைகள் "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்னும் செய்யுளை ஞாபக மூட்டுகின்றது. தமது குழந்தைகளை ஆகாரமிடுவது முதல் தூங்கச் செய்வது வரையில் வேலைக்காரர்களிடமே ஒப்புவித்து வைப்பதும், "புல்லி, பப்பி" முதலிய விகாரச் செல்வங்களை அணைத்துக் கொள்ளுவதுமாக வீட்டில் சமையற்காரன் என்ன சமையல் செய்திருங் என்பதுகூட வந்தபின் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளக் கூடிய ஸ்திதியில் இருப்பவர்கள் வெகு பெயர்கள். குழந்தைத் தாதிகள் செய்யும் அக்கிரமங்கள் எண்ணிறந்தன.

நவீன நாகரிகம் என்றால் தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே ஒன்றும் செய்யக்கூடாது என்றும், காலையில் எழுந்ததும் "டென்டால் க்ரீம்" போட்டுப் பல் துலக்கிக் காப்பி சாப்பிட்டு விட்டு தலைவாரிக் கொள்ளுவதும், சற்று சாய்வு நாற்காலியில் படுத்திருப்பதும், அடிக்கடி தம்மை அழகுபடுத்திக்கொள்ளுவதும், "எம்ப்ராய்டரி" வேலை செய்வதும், சமையற்காரன் கூப்பிட்ட பிறகே ஸ்நானஞ்செய்து சாப்பிடுவதும், சற்று தூங்குவதும், அதன்பின் மாலைச் சிற்றுண்டிகளை முடித்து உடம்பு அசையாமல் வண்டியிலேறிக் கடற்கரைசென்று உல்லாசமாய் வண்டியை விட்டிறங்காமலிருக்கும் சகோதரிகள் எத்தனையோ பெயரிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பெயர் வியாதியஸ்தர்களே. மற்றும் சிலர் ஓயாமற் படித்துப் படித்து மனதுக்கு மாத்திரம் மித மீறின பிரயாசையைக் கொடுத்து சரீரத்துக்கு சற்றேனும் பிரயாசை கொடுக்காமல் அதனால் ஆரோகியமின்றி வருந்துகிறார்கள். சாதாரணமாய் இக்காலத்தில் முற்காலத்தை விட நூதன நூதனமான வியாதிகளும் சிசு மரணமும் அதிகரித்து வருவது யாவருமறிந்த விஷயமே. முற்காலத்தில் நமது பெரியோர்களில் ஒருவராவது நம்மைப்போல் பலவீனர்களாயிருக்கவில்லை. சிசு மரணமும் அகாலமிருத்யுவும் இவ்வளவு மிகுதியாய் இருந்ததில்லை. அதன் காரணமென்ன? முற்காலத்தில் நடந்து வந்ததுபோல் தற்காலத்தில் பெண்கள் நடந்து கொள்ளாமையே.

முற்காலத்தில் பெண்களே சகல விதமான குடும்ப நிர்வாகங்களையும், குழந்தைகளுக்குச் செய்யவேண்டியவைகளையும், விருந்தாளிகளை உபசரித்தல், பெரியோர் வழிபாடு, தெய்வ வழிபாடு முதலியவற்றையும் செய்து வந்தார்கள். ஆனால் தற்காலத்திலோ நாம் செய்ய வேண்டிய நித்தியகர்மானுஷ்டானங்களைக்கூடகூலி கொடுத்துப் பிறரைச் செய்யச் சொல்லக் கூடிய நிலைமையில் உலகம் இருக்கிறது. ஆனால் 'அது கிராம வாசம், இது நகர வாசம்' என்று சில சகோதரிகள் ஆக்ஷேபிக்கக் கூடும். அதுவும் உண்மைதான் என்றாலும் நாமாகவே செய்து கொள்ளக் கூடிய சௌகரியத்தை நகர வாசம் வேண்டாமென்று சொல்லாது. தெருவில் மோட்டாரினால் எழும் தூசியையும், இதைப் போன்ற இதர அசௌகரியங்களையுமதான் நகர வாசத்தின் கெடுதல்களென்று சொல்லவேண்டுமேயன்றி நம்முடைய குழந்தைகளையும், வீட்டுப் பண்டம் பாடிகளையும், துணிமணிகளையும் ஒழுங்காய் வைத்துக்கொள்ளாதது நம்முடைய குற்றமேயன்றி நகர வாசத்தின் குற்றமாகாது. நாம் அஜாக்கிரதையினாலோ, சோம்பலினாலோ கண்டது கண்டபடி போட்டு விடுவதையும், சமையற்காரர்கள் அவசர சமயங்களில கண்ட தண்ணீரை சட்டென்று குழம்பு இரசங்களில் விடுவதையும், பூச்சி புழுவைக் கூடப் பார்க்காமல் சுட்டுவிதமாய்க் கீரை, காய் கறிகளை நறுக்கிச் சமையல் செய்வதையும், சில சமயங்களில் வெற்றிலை

பாக்கு எச்சில், மூக்குப் பொடி முதலியவைகள் கூட அதில் சம்பந்தப்படும்படி நடந்து கொள்ளுவதையும், நாம் யார் என்ன செய்கிறார்களென்பதைக் கூட கவனியாமல் அசட்டையாயிருப்பதையும் நகர வாசத்தின் குற்றமென்று சொல்ல முடியுமா!

வேடிக்கையாய் வீட்டைக் கூட கவனியாமற் கடற்கரை போவதையும், விளையாட்டுச் சங்கங்களுக்குச் செல்லுவதையும்தான் நாம் நாகரிகமென்று நினைக்கிறோமேயன்றி "ஆரோக்கியமே" நாகரிகத்துக்கு அடிப்படை என்பதைக் கருதுவதில்லை. ஆனால் ஆரோக்கியத்துக்காகத்தானே உலாவச்செல்லுகிறோமென்று சொல்லக் கூடும். வீட்டில் சரியானபடி எட்டு மணி நேரம் வேலை செய்யும் பெண்கள் ஒரு உலவுதலுமின்றியே நம்மைக் காட்டிலும் திடமாகவும், சுருசுருப்பாகவும், ஆரோக்கியத்துக்கு இருப்பிடம் போலவுமிருக்கிறார்கள். நடந்து சரீரத்துக்கு நல்ல பிரயாசையைக் கொடுப்பது தான் ஆரோக்கியமாகுமேயன்றி டம்பமாய் வெளி நாட்டு வஸ்திரங்களை அணிந்துகொண்டு வண்டியிலேயேபோய், வண்டியை விட்டிறங்காமல் திரும்பி வருவது என்ன பிரயாசையைக் கொடுக்கப் போகிறது!

தினந்தோறும் காலையிலும் சாயங்கால வேளையிலும் நடக்கவேண்டியது அவசியம். என்பதனுற்றான் தினந்தோறும் கோவிலுக்குப்போக வேண்டுமென்பது பெரியோர் கொள்கை. வாரத்தில் ஒரு நாள் கற்பூரப்புகை சூழ்ந்த அறையில் ஒரு மணி நேரம் (நன்றாய் வியர்வை வெளிப்படும் வரையில்) இருப்பது குமிக்க ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது என்று பிரபல அமெரிக்க தத்துவ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இந்தக் கருத்தை அனுசரித்தே நமது கோயிலின் கர்ப்பக் கிருகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இதன் உண்மையை அறியாமல் "நாகரிகம், நாகரிகம்" என்று சொல்லிக்கொள்ளும் நாம் நம்மருகிலிருப்பவர்களிடம் நமது கோவில்களில் "வெண்டிலேஷனே கிடையாது. சர்ச்சைப் பாருங்கள், எவ்வளவு காற்றோட்டமாயிருக்கிறது" என்று சொல்லுகிறோம்.

சாதாரணமாய் நம் பழக்க வழக்கங்களில் சிலவற்றைத் தவிர மற்றவை யெல்லாம், தத்துவ சாஸ்திரத்தை ஒட்டியே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முதலில் தலை சீவுவதைப் பார்ப்போம். நவீன மாதிரிகளான "பிரஷி"னால் தலைவாரிக்கொண்டால் பிரஷ்மேலே பூத்தவாரியாய் அழகாய் வார உதவுமேயன்றிச் சிக்கெடுக்கவோ, மயிர்க் காலிலுள்ள அழுக்குகளைப் போக்கவோ முடியாது. பிரஷ் உபயோகிக்காவிடில் அகௌரவமென்று நினைக்கும் சகோதரிகளும் இருக்கிறார்கள். அது குப்பைகளை மூடிப்போர்வை போர்த்துவதைப் போலிருக்கிறது. இரண்டாவது மஞ்சள் பூசுதல், நெற்றிக்கிட்டுக்கொள்ளுதல் கூடச் சிலருக்கு அகௌரவமாய்த் தோன்றுகின்றது. மஞ்சளிலுள்ள எண்ணைசத்து சொறி சிரங்குகளை அண்ட வொட்டாமல் தடுக்கிறது என்பது பலரும் அறிந்த விஷயமே. நெற்றிக்கு விபூதி, குங்குமம் முதலியவைகளை அணிவது தேக ஆரோக்கியத்துக்காகவே. சாதாரணமாய் பிராதக்கால ஸ்னானஞ் செய்பவர்கள் காலையில் விபூதி அணிவதனால் அது தலையிலுள்ள ஈரத்தை வாங்குகிறது. மத்தியானத்தில் நல்ல வெயில் வேளையாதலால் சந்தனம் அணிதல் குளிர்ச்சி தரும். மறுபடி சாயங்காலம் குளிர்ந்த வேளையாதலால் விபூதி அணிவது காலையிற் செய்த குணத்தையே செய்கிறது. தவிர, அலங்காரத்துக்கு மாத்திரம் விபூதியோ சந்தனமோ அணிவதென்றால் ஏதாவதொன்று மட்டுமே போதுமன்றோ. ஒவ்வொரு வேளைக்கு ஒவ்வொன்று

என்று உபயோகிக்கவேண்டிய அவசியமில்லையல்லவா. அதிலும் ஆண் மக்களைக் காட்டிலும் நாம் மெலிந்த தேகமுடையவர்களாதலால் நமக்கு இவ்விரண்டுமின்றிக் குங்குமம் ஏற்பட்டது.

கண்களுக்கு இனிமை தரக் கூடியதும் சிவந்த நிறமுள்ளதுமாகிய குங்குமம் மஞ்சள், சுண்ணாம்பு, வெங்காரம் முதலிய வஸ்துக்களின் சேர்க்கையால் செய்யப்படுகிறது. புருவ மத்தியிலிருக்கும் பாகத்தில் அணிவதன் காரணம் எல்லாவற்றிற்கும் பிரதானமான மூளைக்கு மிகுந்த நன்மையைக் கொடுக்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். உதாரணமாக, தக்ஷிணாமூர்த்தி யோகத்தை வர்ணிப்பதில் கண்களின் பார்வை புருவ மத்தியிற்சென்று லயித்திருப்பதாய்ப் பெரியோர்கள் சொல்லக் கேட்கிறோமன்றோ. குழந்தைகளுக்கு ஜலதோஷம் ஏற்பட்டால் "அக்ஷதை மஞ்சள்" அரைத்துப்பற்றுப்போடுவது பலருக்குத்தெரிந்திருக்கலாம். அதில்சேரும்வஸ்துக்களே குங்குமத்திலும் சேருவதால், ஸ்னானஞ்செய்தவுடன் ஜலதோஷம் முதலிய வியாதிகள் அண்டாமலிருப்பதன் பொருட்டும் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கலாம். நமக்கு நன்மை தரக்கூடிய வஸ்துக்களைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வது இயல்பாகையால் தேவிக்கு குங்கும அர்ச்சனை எண்ணெய் ஸ்நான முறையாகிய வெள்ளிக்கிழமையில் மிகுந்த திருப்தியைக் கொடுக்கிறது என்று சொல்லுகிறோம். ஆனால் நாம் எப்பொழுதும் குங்குமம் இட்டுக்கொண்டால் அழகாயில்லை என்று கருஞ் சாந்து, சென்ட் சாந்து முதலியவைகளை அணிகிறோம். அழகை மட்டும் கருதுகிறோமேயன்றி ஆரோக்கியத்தைக் கருதுவதில்லை. இதைப்போலவே ஒவ்வொரு வழக்கங்களும் வைத்திய சாஸ்திரத்தை ஒட்டியே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவற்றை இன்னொரு சமயம் விரித்துரைக்கலாம். தவிர, உயர்தரக் கல்வி கற்றவர்களுக்குத்தான் குடும்ப நிர்வாகங்கள் நன்றாய்த் தெரியுமென்றும், அப்பள்ளிகளிற்றான் குடும்ப நிர்வாக சாஸ்திரம் என்னும் புத்தகங்களைப் பாடமாய் வைத்து நடத்துகிறார்களென்றும், அவற்றைப் படித்தால்தான் நாகரிகப்படி குடும்பத்தை நிர்வகிக்கத் தெரியுமென்றும் சொல்லுவோருமுண்டு. "டொமஸ்டிக் எகானமி" என்ற புத்தகம் படித்து விட்டதனாலேயே ஒரு பெண்ணுக்குக் குடும்ப நிர்வாகம் தெரிந்து விடுமா ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா. நம்முடைய பாட்டிமார்கள் எந்த 'டொமஸ்டிக் எகானமி' படித்தவர்கள். அவர்கள் இருந்த திடமும் சுறுசுறுப்பும் நம்மில் யாருக்கேனும் உண்டா. அடுப்புள்ளே அவர்களது கலாசாலை, மாட்டுக்கொட்டிலே ஜீவகாருண்யத்தைப் போதிக்கும் அரிய பெரிய புஸ்தகம். வந்தவர்களை உபசரிக்கும் விதமும் பிச்சை யிடுதல் கோலமிடுதல் முதலிய காரியங்களையும் சிறு பருவத்திலிருந்தே செய்து வந்தபடியாலும், ஆரோக்கியம், தர்மம் என்னும் இரண்டு இரத்தினங்களும் சிறு வயதிலிருந்தே பிரகாசிக்க, பூரண ஆரோக்கியமுள்ளவர்களாகவும் பிறரால் புகழ்ப்பெற்றவர்களாகவுமிருக்கிறார்கள். அவர்களுக்குச் சமையற்காரனாவது தாதியாவது கிடையாது. இதனால் சமையற்காரர்களையும் தாதிகளையும் தூஷிப்பதாக எண்ணக் கூடாது. சமையற்காரர்கள் கூடாதென்று சொல்லவில்லை. பலவீனமாய் இருப்பவர்களுக்கு ஆட்கள் அவசியந்தான் என்றாலும் நாம் ஒன்றையும் கவனியாமல் அவர்களிஷ்டப்படி விடுவது கூடாது. நமது தேக ஆரோக்கியத்தைப்பற்றி நமக்கிருக்கும் அக்கரை பிறருக்கிருக்குமா. ஆதலால் ஒவ்வொன்றையும் நாமே நேரில் கவனித்துக் கொள்ளுவதுதான் ஆரோக்கியத்துக்கு முக்கிய [illegible].

207609

எனக்குத் தெரிந்த என் சிநேகிதர்களுக்கே காரீயம் பூசப்பெற்ற அடுக்குகளிலும் ஈயம் அழிந்துபோன பாத்திரங்களிலும் ஏதோ அவசரத்தில் அவனுக்குத் தோன்றியபடி சமைத்துப் போட்டு, அதாவது ஈயமே விஷமாகமாறி, கைப்பிடிப்பு கால்பிடிப்பு முதலிய வியாதிகள் உண்டாகியிருக்கிறது. நாம் சமையல் செய்வதானால் கற்சட்டிகளிலும் வெள்ளீயப் பாத்திரங்களிலும் செய்கிறோமே யன்றி அடுக்குகளை அதிகமாய் அடுப்பில் வைப்பதில்லை. கற்சட்டியிலும் மண் சட்டியிலும் சமைத்தல் மிக அகௌரவமென்று எண்ணுவோர் பலர். அவைகள் அழகாய்த் தோன்றாவிடினும் அழகாய்த் தோன்றும் வெண்கல பித்தளைப் பாத்திரங்களைவிட ஆரோக்கியத்துக்கு மிகவும் சிலாக்கியமானவைகளே. ஆகையால் ஒரு குடும்பத்தின் ஆரோக்கியத்துக்குப் பெண்களே முக்கிய காரணமாயிருக்கிறபடியால் நாம் ஒவ்வொருவரும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவேண்டிய வழிகளிலேயே நடந்து, நோயுற்ற வாழ்வுடனிருந்து இம்மையிலும் மறுமையிலும் நன்மையே தரக்கூடிய நற்கருமங்களைச் செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுவோம்.

நூர்ஜஹான் அல்லது பாரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(85-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினாறாவது அத்தியாயம்.

அக்பர் சக்கரவர்த்தியினது கிருபையால் அப்சர ஸ்திரீகளை யொத்த இந்து மகமதிய இராஜ கன்னிகைகளை மனைவிகளாய் இளவரசன் சலீம் அடைந்திருந்த போதிலும், சந்துஷ்டியில்லாது தனது ராக்ஷஸ விஷயவாசனையைத் திருப்தி செய்யும் பொருட்டு, விலாஸ புவனத்தில் அவன் செய்து வந்த அக்கிரமங்கள் முன்னும் கூறப்பட்டுள்ளன. இதுவுமன்றி மெஹருந்நிஸாவையும் மனைவியாகக் கொள்ளவேண்டுமென அவாக் கொண்டிருந்தான். அயாஸின் கிருகத்தில் அவளைத் தரிசித்தது முதற்கொண்டு அவளது ஞாபகமாகவே யிருந்தனன். அழகு மிக்க மெஹர் இராஜ புத்திரனுக்காகவே நிர்மாணிக்கப் பட்டுள்ளாளெனவும், அவளை யடையாவிடில் தானெடுத்த ஜன்மம் வீணேயெனவு மெண்ணி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனன். சலீமிடம் ஊழியஞ் செய்து வந்த ஓர் கிழவி இருந்தனள். அவளது கரத்தில் சில மோகராக்களைக் கொடுத்துத் தன் மனதை வெளியிட்ட மாத்திரத்தில், அவளும் இளவரசனது காரியத்திற் பிரவேசிக்கச் சித்தமாயினள். உடனே பின் வருமாறு ஓர் நிருபமெழுதி முடித்தனன்.

"சுந்தரி!

எல்லோர் மனதையு மயக்கும் உன் முகத்தைத் தரிசித்தது முதலாய் என் நேத்திரங்களுக்கு முன் வேறு யாதொன்றுந் தோன்றாது உன் மூர்த்தியே நிற்கின்றது, நானெங்கு திரும்பினாலும் உன் ரூபத்தையே காண்கின்றேன். ஆயினும் பலனென்ன? இவ்வேழை சலீம் பித்தம் பிடித்துட்கார்ந்திருக்கின்றனன். மின்னல் பளபளவெனப் பிரகாசித்து ஒருவர் கண்ணிலும் அகப்படா திருக்கும் வண்ணம் நீயும் உன் பிரத்யக்ஷ முகத்தைக் காண்பியாதிருக்கின்றாய். நேத்திரங்களுக்கு இவ்வல்லமையைக் கொடுப்பது மன்றி என் மனதையு மபகரித்துச் சென்று விட்டதால் நான் கூடிய சீக்கிரத்தில் பிரேதமாவேன் என்பதிற் சந்தேகமில்லை. பிராணதானத்தைவிட வேறு புண்ணியமுமுண்டோ? கூடிய சீக்கிரத்தில் இவண் போந்து, உன் அதராமிர்த சஞ்சீவினியால் என்னை உயிர்ப்பித்துப் பிராணதானத்தாற் கிடைக்கும் புண்ணியத்தைச் சம்பாதிப்பாய். புத்தி சாதுரியமுள்ள உனக்கு அதிகமா யெழுதுவது அனாவசியமே.

இப்படிக்கு,

உன் பிரேமைக்குப் பாத்திரனான

சலீம்.

இவ்வண்ணம் நிருபத்தை யெழுதி முடித்து, அதை அக்கிழவியின் ஸ்வாதீனப்படுத்தினன். இக்கைய நீசகாரியங்களைச் செய்து தன் வயிற்றை வளர்த்து வந்த அக்கிழவியும் நிருபத்தைப் பெற்று அயாஸ் பெக்கின் வீட்டை நோக்கி அவசரமாக நடந்தனள்.

ஈச்வரன் உலகோருக்குச் சௌந்தரிய மின்னதெனக் காட்டும் பொருட்டுத் தன் சாதுரியம் முழுவதையும் உபயோகித்து மெஹருந்நிஸாவை நிர்மாணித்துள்ளானென முன்னமே கூறப்பட்டுள்ளது. மற்றும் சாரதா தேவியின் கிருபாகடாக்ஷமும் அவளிடம் பூர்ணமாய் நிறைந்திருந்ததென்றால் பிறகு கேட்பானேன்! இவ்வளவு அழகு மிக்க வனிதையை யடைய வேண்டுமென சாமானிய ஜனங்களும் மனதிலெண்ணும்பொழுது, பாரதகண்டத்துப் பாதுஷாவின் புத்திரன் அவளைக் கண்டு மயங்குவது சகஜமே. புருஷர்கள் சௌந்தரியமிக்க ஸ்திரீகளைக் கண்டு மயங்குவதில் ஆச்சரியமென்? ஸ்திரீகளே ஸ்திரீகளைக் கண்டு மோகிப்பதென்றால், சௌந்தரியத்திற்கு ஈடு ஏதேனுமுண்டா? மெஹருடனிருந்த சிநேகிதைகள் அவளுடைய சகவாசத்தை விட்டு ஒரு க்ஷணமேனும் பிரியாதிருந்தார்கள். பக்தர்கள் தமது தேவதைகளை யாராதித்து, எப்பொழுதும் பஜனைசெய்து கொண்டிருப்பது போல், மெஹருடைய தருண சகிகள் சதா சர்வதா அவளுடைய சகவாசத்திலிருந்து விநோதமாகக் காலத்தைக் கழித்து வந்தார்கள். மெஹரும் தன் மித்திரிகளின் விநோத பாஷணைகளைக்கேட்டு மிக்க ஆனந்தமாயிருந்தனள். வேறொருவரும் சமீபமில்லாத சமயத்தில் ஏகாந்தமாயுட்கார்ந்திருந்து அரசகுமாரனையே யோசித்திருப்பாள். இப்பிரம்மாண்ட ஜகத்தில் இராஜ அரண்மனையே சர்வ சுகத்திற்கும் இருப்பிடம், ராஜ புத்திரனே பாக்கியத்திற்கதிபதி என்று அவளது மித்திரிகள் அவளிடம் பகர்ந்து வந்திருப்பதாலும், வாஸ்தவத்தில் ராஜ புத்திரனது மனம் தன்னை நாடியிருப்பதாலும், அவளடைந்த ஆனந்தத்திற்களவில்லாதிருந்தது.

கொஞ்ச நேரத்திற்குள் இளவரசனாலனுப்பப்பட்ட வயது முதிர்ந்த அக்கிழவியும் அயாஸ் பெக்கின் வீட்டையடைந்தாள். இவள் இவ்வீட்டிற்கு இப்பொழுது முதன் முதலாக வந்தவளல்ல. தனது கெட்ட தொழில் கைகூடும்வரை தன்னை யாவரும் சமுசயிக்காதிருக்கும் பொருட்டு, அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களை விற்பவள்போல் கையிலொரு மூட்டையுடன் வருவது வழக்கம். இவளிடமிருந்த அத்தர்கள் மிகவும் மேன்மையாயிருந்ததால் மெஹர் இவளது அத்தர்களை அடிக்கடி வாங்குவதுண்டு. கிழவி கண்ணிற்பட்ட மாத்திரத்தில் மெஹர் தன் சயனத்தை விட்டெழுந்து, அவளை எதிர் நோக்கிச் சென்றழைத்து வந்து தன் சமீபத்திலுட்காரும்படி செய்தனள். பிறகு அக்கிழவி தன் முகத்திலுள்ள வியர்வையைத் தன் வஸ்திரத்தால் துடைத்

துக்கொண்டு, கொஞ்சம் இளைப்பாறியபின், “என்ன அம்மா? இன்றென்ன புதிய அத்தர்கள் கொண்டு வந்திருக்கின்றீர்? மூட்டையை அவிழ்த்துக் காட்டுங்கள்” என மேஹர் வினவவே, அக்கிழவியும், “புதிதான தொன்றுமில்லை. இன்று குழந்தைகள் விரும்பும் விளையாட்டு சாமான்கள் சில கொணர்ந்துள்ளேன்” எனப் பதிலளித்துக்கொண்டே மூட்டையையவிழ்த்தாள்.

மேஹருல் நிஸா யாவற்றையும் பார்த்தபின், “இவைகள் யாதொன்றிலும் இன்று என் மனம் நாடவில்லை. எதைப் பார்த்தாலும் வெறுப்பாகவே இருக்கின்றது” எனவே, அக்கிழவி அவளது முகத்தை அன்புடன் தடவிக்கொடுத்து, “ஏன்? இப்படி வெறுக்கக் காரணமென்ன?” என வினவினள்.

மேஹர்:—“ஒன்றுமில்லை. இப்பொழுது கொஞ்சம் நாட்களாய் என்னையறியாது வெறுப்புண்டாகின்றது”

கிழவி:—“உன் தந்தை அயாஸ்பெக் உன் விவாக விஷயமாய் யாதொரு ஏற்பாடுஞ் செய்து வருவதாகக் காணவில்லையே!”

விவாகம் என்ற வார்த்தை இவளது காதில் விழுந்த மாத்திரத்தில், லஜ்ஜையால் சிவப்புற்ற முகத்தைத் தொங்கவிட்டுக் கொள்ளவே, அக்கிழவியும் மேஹரது முகத்திலுண்டான வேறுபாட்டைக் கவனித்து வந்தனள். தான் கொணர்ந்துள்ள நிருபத்தைக் கொடுக்க இதுவே சரியான சமயமெனக் கண்டு, ‘குழந்தாய் மேஹர்! இன்று உனக்காக ஓர் அபூர்வமான வஸ்து கொணர்ந்துள்ளேன். நீயதைப் பார்ப்பாயாகில் எனக்கு அளவில்லாத வெகுமதி கொடாதிராய். எனக்கும், உனக்கும், மற்றும் உனது குடும்பத்திற்கும் அதனாலேயே பாக்கியம் உதயமாகப் போகிறது” என்றனள்.

கிழவியின் வார்த்தையைக் கேட்டு வந்த மேஹர் அந்த அபூர்வ வஸ்து யாதென அறியும் பொருட்டு அவாக்கொண்டனள். கிழவியோ பத்துப்பதினேழு முடிகளுடன், ஒரு கந்தைத் துணியில் அந்நிருபத்தைக் கட்டித் தன்னிடுப்பில் பத்திரமாய் வைத்திருந்தனள். கிழவி அவ்வஸ்துவைக் குறித்து வர்ணித்து முடிந்தவுடன், மேஹர் “அதைக் காண்பியுங்கள். பார்க்கலாம்” என்றனள். அப்பொழுது கபடமுள்ள அக்கிழவியும் மேஹரின் கேள்விக்கு உத்தரமுரையாது, அவளது நிர்மல முக கமலத்தை உற்று நோக்கியவளாயிருந்தனள். களங்கமற்ற மேஹர் கிழவியின் கபடத்தை யறியாது, அவள் தன்னைப் பரிகஸிப்பதாக எண்ணி, திடீரென மஞ்சத்தை விட்டெழுந்து நின்று, கோபத்தாற் கண்கள் சிவக்க, “அம்மா! போதுமுமது பரிகாசம்! ஆக்கிரமாய்க் கேட்கும்பொழுது பேசாதிருப்பது அழகல்ல. சங்கதியைச் சொல்லாமல் என்னாசையைப் பங்கஞ் செய்வதால், என் தலை வலிக்க ஆரம்பித்து விட்டது. நான் போய்ப் படுத்துக் கொள்ளுகின்றேன். போய் வாருங்கள்” என்றனள்.

மேஹரின் கோபத்தைக் கண்ட கிழவி, இன்னுமப்படியே பேசாது கிழிந்த துணியில் பதினேழு முடிகளிட்டு வைத்திருந்த இளவரசனது நிருபத்தை அவளது கரத்திற் சமர்ப்பித்தனள்.

அந்நிருபத்தைக் கையில் வாங்கிய மாத்திரத்தில், மேஹரது மனதில் பற்பல எண்ணங்களுதித்தன. நிருபத்தைப் பிரித்து வாசித்தபின், இளவரசனது மூர்த்தியைத் தன்னிருதயமாகிய ஆலயத்திற் பிராணப் பிரதிஷ்டை செய்தனள். மனோ ராஜ்யத்தில், தில்லி சக்ரவர்த்தியாக விருக்கும் ஜஹாங்கீரின் பட்டஇராணியாகிய தான் அவனது அங்காசனத்தில் வீற்றிருப்பதாகக் கண்டனள். ஆனந்த சாகரத்திலாழ்ந்து தனக்கு வந்துள்ள பிரேமபத்திரத்தைப் பன்முறை படித்தனள். அவளது நேத்திரங்களுக்கு முன் திவ்வியப்பிரகாசம் ஜ்வலித்தது. தன் தந்தையின் சிறிய வீடு மறைந்து, அவ்விடத்தில் ஓர் பிரம்மாண்டமான அரண்மனை நிர்மாணிக்கப்பட, அவளெதிரில் இளவரசன் ஜஹாங்கீரின் மூர்த்தி தென்பட்டது. அத்தருணம் தருணி மேஹரது ஜ்வலிக்கும் சௌந்தரியத்தைக் கண்ணுற்ற கிழவியும் ஆச்சரியமடைந்தனள். கொஞ்சநேரமப்படியே யிருந்தபின், மேஹரது கரத்தைப் பிடித்து, “நான் கொணர்ந்த வஸ்து அபூர்வமானதன்றோ? எப்படி உன்னைக் குதூகலிக்கச் செய்தேன் பார்த்தாயா! சரி, இதற்கு உத்தரமேது?” என்று அவள் காதோடு காதாய் மெதுவாக வினவ, மேஹர் திடுக்கிட்டாள். தன் மனதில் நிர்மாணிக்கப்பட்டு வந்த இராஜ்யம் மறைய, உடனே தன் ஞாபகத்திற்கு வந்தனள். மிக்க நேரம் கிழவியுடன் பேசாமலிருந்ததற்காகத் தன்னை க்ஷமிக்கும்படி அவளைக் கேட்டுக்கொண்டு, நிருபத்தை இடுப்பில் பத்திரப் படுத்தினள். நிருபத்தின் பதிலைப் பற்றி கிழவி மறுபடியுங் கேட்கவே, கொஞ்ச நேரம் ஒரு விரலைத் தன் அதரத்தில் வைத்துப் பேசாதிருந்தபின், “அம்மா! என்ன பதிலெழுதுவேன்! எனக்கோ லஜ்ஜையாயிருக்கிறது. என்ன சொல்லுவேனம்மா! நீங்கள் என்னிடங் காட்டியுள்ள உபகாரத்திற்கு நானென்ன கைம்மாறு செய்யப் போகின்றேனோ? என் பஞ்சப் பிராணனையுங் கொடுத்தபோதிலும் இதற்கு ஈடாகாதே!” என்றனள்.

கிழவி:—குழந்தாய்! போதும் உன் உபசாரம். சீக்கிரம் பதிலெழுதிக் கொடு.”

“அம்மா! கோபம் வேண்டாம். இன்றிருந்து பத்தாவது நாள் நான் யமுனா நதியில் படகிற் செல்லுவதாக உத்தேசித்துள்ளேன். அன்று என் பதிலை எதிர் பார்க்கலாம். இளவரசருக்கு என் சலாம் கூறுவதுமன்றி, அவரது நாமத்தை நானெப்பொழுதும் ஜபித்துக் கொண்டிருப்பதாகவும் பகரும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்” என மேஹர் மொழிந்து, அக்கிழவியிடம் இரண்டு மோஹராக்களை கொடுத்து அவளை யனுப்பினள்; அக்கிழவியும் அவளை ஆசீர்வதித்து, இளவரசனது விலாஸபவனத்தை நோக்கி நடந்தனள்.

(தொடரும்.)

காரணமற்றுண்டாகும் வெறுப்பு.

(PREJUDICE.)

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்)

“Happy are we if, in all we do during the course of our career, we have not to answer for one death; for the bitter word, the cruel neglect, the light injurious observation may be the cause of death” என்று மேனாட்டு கவிஞர் ஒருவர் தாம் எழுதியுள்ள முகவுரை யொன்றில் கூறியுள்ளார். நாம் செய்யும் அநேக செயல்கள் நாமறியாதபடியே பிறருக்குத் இன்னல் விளைப்பனவாக இருக்கின்றன. நமது குணமானது தன் சக்தியினால் பிறருக்கு சுகதுக்கத்தை யளிக்கின்றது. சாதாரணமாக மனிதருக்கு ஒருவரிடம் உண்டாகும் விருப்பு வெறுப்பானது காரணம் பற்றியே ஏற்படுவது சகஜம். ஒருவர் தீயகுணம் பற்றியோ அல்லது அவர் நடக்கும் விதம் தமக்கு ஒத்துவாராமையாலோ

பிறரிடம் வெறுப்பு உண்டாகிறது. அவ்வாறே நம்மிடம் பிறரடையும் இன்பதுன்பமும் நமது விருப்பு வெறுப்பைப் பொருத்ததாக இருக்கின்றது. காரணமில்லாமலே உண்டாகும் வெறுப்புக்கு (Prejudice) எதை முகாந்திரமாகக் கூறலாம்? காரணம் பற்றி உண்டாகும் விருப்பு வெறுப்புகளுக்கு ஆக்ஷேப சமாதானங்களும், மனச்சாட்சியுமிருக்கும். தர்மநியாய வழியைப் பின்பற்றி இருதய பூர்வமாக உண்டாவன காரணத்துடன் ஏற்படும் விருப்பு வெறுப்புகள். அவற்றினால் உண்டாகும் சாதக பாதகங்கள் பெரும்பாலும் அனைவரும் ஒத்துக் கொள்ளக் கூடிய விதமாகவே யிருக்கும். காரணமின்றி உண்டாகும் விருப்பு வெறுப்புகளானது எல்லையைக் கடந்தது, நியாயத்திற்குட்படாதது, நன்மை தீமையைப் பகுத்தறியும் சக்தியை யிழந்தது. அதனால் ஏற்படும் சாதக பாதகங்களும் எல்லையற்றதே. எக்குணமும் தம் வழியில் தடங்கலற்றிருந்தால் பிரகாசிப்பது போல, இக்குணமும் அதன் வழியில் செல்ல இடைஞ்சல்களற்றிருந்தால் தனது சக்தியனைத்தையும் செலுத்த சாமர்த்தியம் வாய்ந்துள்ளது. உலகில தர்ம சாஸ்திர விதிப்படி தீயவை யெனக் கூறப்படும் குணங்களினால் உண்டாகும் கேடுகளைவிட தன் வழிப்படி வெளிக்கிளம்ப சமயம் வாய்த்துள்ள காரணமின்றி உண்டாகும் வெறுப்பினால் நேரும் கஷ்ட நிஷ்டூரங்கள் சிறிதளவும் குறைவானதன்று. மற்ற தீய குணங்களுள்ளவனே, எவ்வளவு முட்டாளாகவும், மூர்க்கனாகவுமிருந்த போதிலும், ஒரு காலத்தில் தான் செய்தவைகளுக்கு பச்சாத்தாபப் படவும், தன் மனசாட்சியை உணரவும் கற்றுக்கொள்வான். இக்குணம் உடையோர் நியாய உணர்ச்சி சிறிது குறைந்தவராயிருந்தால் போதும், தம் தவறுகளுக்கு பச்சாத்தாபப் படவும், தம் மனசாட்சியை யறியவும் தெரிந்து கொள்ளார். தம்மையே ஏமாற்றிக்கொள்வதில் இவர்களைவிடப் பெருந்த மூடர் உலகிலிரார். மிக்க கடோரமான விஷமுள்ள கொடிய அரவங்கள் கணக்கற்று உலகில் உலவிய போதிலும் அதனால் உண்டாகும் உயிர்ச்சேதம் குறைவாக இருப்பதைப்போல் இக்குணமும் நியாயவுணர்ச்சியற்ற சொற்ப மனிதரிடமே காணப்படுகிறது. மேலும் தம் வெறுப்பைச் செலுத்த முடியாவிடின் அத்துடன் அடங்கி விடுகிறது. அவ்வளவு வரையில் அதனால் ஏற்படும் இன்னல்களுங்குறைவானதே. அதையோர் துர்க்குணமாகவாவது, அதனால் மனிதன் இழிவானவனெனவாவது கருதப் படுவதில்லை. ஆனால் அவ்வரம்பு மீறி வெளிக்கிளம்பியதானால் அதற்கீடாக எவ்வகை தீயகுணத்தையும் உவமைகூற முடியாது.

இக்குணத்தைக் காலம் சென்ற பண்டித நடேசசாஸ்திரியாரவர்கள் தாமெழுதி வெளியிட்டுள்ள "மாமி கொலுவிருக்கை" என்னும புத்தகத்தில வெகு அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அதில மாமியான மகாச்வேதை தனக்கு ஏதோ பிடிக்காத காரணத்தால் தன் வெறுப்பிற் கிலக்காகிய தன் மருமகள் கௌரியெனும இளம் பெண்ணின் வாழ்க்கையை நாச முறுத்தி, அவளது ஆசையாவலாதிகள் அனைத்தும் அகன்றுபோக அவளைத் துன்பத்திலாழ்த்தி, ஜீவியத்தில இன்ப மற்றவளாய், மனவேக்கத்தினால் உயிரிழக்கச செய்த கொடுமையை நோக்கின் இதினும் தீயவையான குணங்கள் உலகிலுள்ளனவோ வெனச் சங்கை உண்டாகின்றது.

இவ்வகையாக ஒருவர் முகத்தில் விழித்த வேளையோ, அல்லது ஜனனகால விசேஷமோ, தம் இஷ்டத்தைச் செலுத்தச் சக்தி வாய்ந்த மனிதரிடம் அவர் வெறுப்பிற்காளாகும் மனிதனது கஷ்டங்கள் மிகக்கொடுமையானதாம். உலகில் மனிதரைச் சரீர கஷ்டத்தைவிட மனக்

கஷ்டங்களே மிகவும் பாதிப்பனவாகும். ஒரு பிரியமான பார்வைக்கும் உள்ளத்திருந்தெழும் அன்பான ஒருசொல்லுக்கும் மனிதர் தம் சரீரத்தைச் செருப்பாக உழைக்கச் சித்தமாயிருப்பர். இக்காரணமில்லாதேற்படும் வெறுப்பினாலுண்டாகும் துன்பங்கள் மிகுதியும் மனதைத் துன்புறுத்துவனவாம். விரிந்த மனதுடையவனும் இஷ்டத்தைச் செலுத்த சக்திவாய்ந்தவனும், அகன்ற உலகில் அனுபவங்களைப் பெறுபவனுமான புருஷனுக்கு இக்குணமிருப்பினும், அதனால் அவன் வெறுப்பவனது நன்மைகள் குறைவு படுவதேயன்றித் துன்பங்கள் அதிகரிக்கமாட்டாது. இன்னும் தனக்கு ஏதோ பிடிக்காத அம்மனிதனை மட்டுமே அவன் வெறுப்பானேயன்றி அம்மனிதனைச் சேர்ந்த அவ்வர்க்கத்தையே வெறுக்கமாட்டான். ஆனால் ஸ்திரீகள் விஷயத்தில் அவ்வாறன்று. தன் மனதிற்கு ஏதோ ஏற்காத கால விசேஷத்தாலோ அல்லது முகத்தில் விழித்த வேளை பிடிக்காததினாலோ, இஷ்டத்தைச் செலுத்த சக்தி வாய்ந்த ஸ்திரீயிடம் அவள் வெறுப்பிற் கிலக்காகத் தென்படும் ஸ்திரீ அனுபவிக்கும் மனோ கஷ்டங்கள் அளவிறந்ததாம். தான் வெறுக்கும் ஸ்திரீயினது பந்துக்கள், கணவன், குழந்தைகள் தனக்குப் புதல்வனைப் போல் கிட்டினபந்துவாகவோ, புதல்வனாகவோ யிருந்தாலுமே அவர்களை இவர்கள் வெறுக்கின்றனர். இவர்கள் மற்றவரிடம் மிக நல்லவராகவும், ஒரு விதத்திலும் குற்றம் கூற முடியாதவராகவுமிருப்பார். இவர் அப்பிரியத்திற் கிலக்காகியவரிடம் மாத்திரம் இவர்கள் மனது சிறிதும் தயையின்றி யிருக்கும். அதனை யனுபவித்தவரன்றி பிறருக்கு தெரியக்கூடிய விதமாகவுமிராது. அத்துர்ப்பாக்கியசாலிகளோ மற்றவரிடம் எவ்வளவோ நல்லவராக விருப்பவர் தம் அதிர்ஷ்டக் குறைவினாலேயே தம்மை வெறுப்பவரை யறிந்து, ஒரு வழியிலும் அவர்களைத் திருப்தி செய்விக்கத் தெரியாதவர்களாய் தம் ஜீவியத்தை வெறுத்து, உற்சாகம் குன்றி, ஏக்கமுற்ற மனத்தினராய்த் தம் காலத்தைத் தள்ளுகின்றனர். இவர்கள் தம்மை வெறுப்பவரைத் திருப்தி செய்விக்கப் புரியும் செய்கைகள் யாவையும் அவர்கள் அலட்சியம் செய்வதுடனிராமல், குற்றமாகவே கொண்டு இவர்களிடம் இன்னும் அதிகமாகத் தம் வெறுப்பைக் காட்டுகின்றனர். அதனால் அவர்கள் அனுதாபத்தை வேண்டும் இத்துர்ப்பாக்கியசாலிகள் மன நம்பிக்கை யற்று, அவர்களையும் வெறுக்கத் தொடங்குகின்றனர். அத்துடன் நிற்காமல் அவர்கள் யாரிடம் அதிகப்பிரியம் செலுத்துகிறார்களோ அவரிடமும் தாம் வெறுப்புக் கொள்ளுகின்றனர். தாம் எவ்வளவோ மனப் பூர்வமாக நற்காரியங்கள் செய்திருப்பினும் அவைகளை யசட்டைசெய்து, அவர்பிரியம் பாராட்டுபவர் செய்யும் சிறு செய்கைகளை உயர்த்தி அவர்கள் புகழுகையில், இவ்வதிர்ஷ்ட ஹீனர்கள் மனதில் அழுக்காறு உண்டாகி உள்ளம் புழுங்க நிம்மதியை யிழக்கிறார்கள். ஆகவே இக்காரணமில்லாதுண்டாகும் வெறுப்பானது அஃதையுடையவரை மட்டும் கெடுப்பதோடல்லாமல், அதற்கிலக்காகியவர் மனதையும் பாலில் புரையிட்ட மோர்த்திவலைபோல் கெடுத்து விடுகிறது. அதற்கிடம் கொடாமல் இவற்றிலெல்லாம் ஒன்றுமில்லையென மனதை சாந்தப்படுத்திக் கொள்ள மிகுந்த தைரியசாலிகளுக்கும், வயதும் அனுபவமும் முதிர்ந்தவருக்கும் சாத்தியமேயன்றி உலக வாழ்க்கை யின்பத்தை எதிர் பார்க்கும் இளம் வயதினரால் கூடுமானதன்று.

பகைமைக்கு அடிவேருகிய வெறுப்பானது விருத்தியடைவதினாலேயே பகைமையாக முதிருகின்றது. சத்துருக்களிடமும் பகைமை பாராட்டாது இருப்பதே வேசிகளின் தன்மை. அப்படி யிருக்கக் காரணமின்றி தமக்கு ஒரு

துன்பமும் செய்யாது கால விசேஷத்தால் தமக்குப்பிடிக்காத ஒரு மானிடரைத் துன்புறுத்துதல் பகுத்தறிவுள்ள மனிதன் செய்யும் செய்கையல்ல. அவனுக்கு ஏற்படும் தண்டனையையும் ஈசனே விதிக்கவேண்டும். தம்மிடம் இக்குணம் இருப்பதை யுணராது தாம் நியாயப்படியே நடப்பதாகத் தம்மை ஏமாற்றிக் கொள்பவர் இன்னும் தம் மனதையே விசாரணை செய்து தாமறியாதபடியே தம்மிடமிருந்து வரும் இக்குணத்தை யுணர்ந்து, அதை விவேகத்தினால் வளர விடாமல் தடுத்து முடிவில் மனதினின்றும் அகற்றி விடவேண்டும். அதனால் அவர் பிறருக்குச் செய்யும் நன்மையை விட தம் ஆன்மாவுக்கே நன்மையைத் தேடியவராவர். பகைமை பாராட்டாது இருத்தலினாலேயே மனிதன் சிறந்தவனாகிறான். பகைமைக்கு முக்கிய காரணம் தமக்கு இணங்கி வாராதவிடத்து உண்டாகும் வெறுப்பு. காரணத்துடன் உண்டாகும் வெறுப்பையே பாராட்டுதல் உயர்ந்த செய்கையன்று. அப்படி யிருக்கக் கால வித்தியாசத்தினால் காரணமின்றி உண்டாகும் வெறுப்பை வளர விடுதல் பாபமாகும். காரணமாய் ஏற்படும் பகைமையைச் செலுத்தினாலும் அதனால் மனிதன் அகாரியம் செய்தவனாக மாட்டான். பதிலுக்கு பதில் செய்யாதிருத்தல் இன்னும் விசேஷமாயினும் சில சமயம் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்ய வேண்டியது அவசியமாக நேரிடும். ஆனால் காரணமின்றித் தமக்கிருக்கும் செல்வாக்கினால், தம் மனதிற்கு ஏற்காத தோஷத்திற்காக ஒருவரைத் துன்புறுத்துதல் மிகக் கொடிதான பாதகமாகும்.

மிருகங்களும் தம் இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்கின்றன. பகுத்தறிவுள்ள மனிதர் தமக்குப் பிடிப்பதே நியாயம், தம் இஷ்டமே சட்டமெனக் காரியங்கள் செய்வதானால், இவர்களுக்கும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாசமிருக்கின்றது? மனிதனை மானிடத் தன்மையைக் குறிக்கும் விருப்பு வெறுப்புகளை அற்ற அற்ற அவன் தெய்வீக சுபாவமுள்ளவனாகிறான். மனிதன் அடையவேண்டியதும், அறிய வேண்டியதும் பரம்பொருளே என மதங்கள் முறையிடுகின்றன. தெய்வத் தன்மையைத் தம்மிடம் விருத்திசெய்து கொள்ள வேண்டியே கடவுள் மானிடருக்குப் பகுத்தறிவை அளித்திருக்கிறார். அப்பகுத்தறிவை விருப்பு வெறுப்புகளினால் மனிதனிழக்கலாகாது. "அரிதரிது மானிடராதலரிது." ஆகையால் நியாய உணர்ச்சியைத் தெரிவிக்கும் பகுத்தறிவையும், மனச் சாட்சியையும் மனிதர் தம் விருப்பு வெறுப்புகளினால் போக்காமல், எவரிடமும் வித்தியாசமின்றித் தம் கடமையைச் செலுத்தி தம்பிறவியைப் பயனுள்ளதாகச் செய்யப் பாடுபடுவாராக.

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

ஸ்ரீமான் S. R. அனந்தநாராயணய்யர்.

(90-ம் பக்கத் தொடர்ச்சி.)

இருபதாம் அத்தியாயம்.

நாகின் என்னும் மாகாணம் மேற்குத் திக்கிலிருக்கின்றது. அது மஞ்சியிலுள்ள மிகச் சிறந்த விசாலமான மாகாணங்களிலொன்று. அங்கு வியாபாரம் விசேஷமாக நடக்கின்றது. அந்நாட்டார் விக்கிரகாராதனைக் காரர்கள். அவர்களிடம் காகித நாணயந் தவிர வேறு நாணயமில்லை. அவர்கள் பொன், வெள்ளி கலந்த பீதாம்பரங்களைச் செய்து அவற்றின் வியாபாரத்தினால் பெருத்த பணக்காரராகி

யிருக்கின்றனர். வியாபாரச் சரக்குகளின்மேல் சுங்கம் விதிக்கப்படுவதினால், அந்நாட்டில் சக்கரவர்த்திக்கு விசேஷமான வரும்படி கிடைக்கின்றது. அந்நாட்டில் தானிய விளைவும் அதிகம். அங்கு காட்டு மிருகங்களும் வீட்டு மிருகங்களும் காட்டுப் பறவைகளும் வீட்டுப் பறவைகளும் கணக்கில்லாமல் இருக்கின்றன.

ஸைன்பூ வென்பது மஞ்சி மாகாணத்திலுள்ள சேர்த்தியான மற்றொரு பெரிய பட்டணம். பன்னிரண்டு வேறு பட்டணங்கள் அதன் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன. அங்கு பட்டு வஸ்திரங்களும் பீதாம்பரங்களும் செய்யப்படுகின்றன. வேட்டை மிருகங்களும் பட்சிகளும், மற்றும் ஒரு பிரசித்தமான பட்டணத்திற்கு அங்கங்களான வேறு சகல வஸ்துக்களும் அங்குண்டு. அந்நகர், நாற்புறமும் ஏரிகளாற் சூழப்பட்டு வடக்குப் பக்கத்தில் மாத்திரம் வாயிலுள்ளதாய், வெகு பலமாகக் கட்டப்பட்டிருக்கின்றது. அவ்வாயிலின் வழியாக அவ்வூராருக்கு வேண்டிய தின்பண்டங்கள் கப்பல்களில் வந்து கொண்டிருந்ததினால் அவ்வூரானது மங்கிநாடு பிடிபட்டபொழுது தார்த்தார சேனைகளால் மூன்று வருஷ காலம் முற்றுகை போடப்பட்டிருந்தும் அவர்களுக்குப் பிடிபடவில்லை. அதைக்கேட்டுக் குப்ளேகான் மிகவும் துக்கித்தார். அப்பொழுது அவரது சபையிலிருந்த நிக்கோலோ மாபியோ ஆகிய இருவரும் அரசனிடஞ்சென்று மேனாட்டாரது யந்திரங்களைப்போல் முன்னூறு அந்தர் கனமுள்ள கல்லைத் தூக்கி யெறிந்து மனிதர்களையும் வீடுகளையும் அழிக்கத்தக்க சில யந்திரங்களைச் செய்வதாகச் சொன்னார்கள். அரசன் அதற்குச் சம்மதித்து, மூன்று நெஸ்டோரியக் கிறிஸ்தவ தச்சர்களைக் கொண்டு, சிலநாட்களுக்குள் மூன்று யந்திரங்களைச் செய்வித்து அவைகளைப் பரீட்சித்துக் கப்பலின் மூலமாய்த் தம் சேனையிடம் அனுப்பினார். சைனிகர்கள் அவ்வியந்திரங்களை ஸையான்பூ நகரத்தினெதிரே நிறுத்தி அவற்றின் மூலமாய்ப் பெருங்கற்களை அவ்வூரினுள்ளெறிந்தனர். அவ்வாறு எறியப்பட்ட முதலாவது கல் விழுந்த வேகத்தினால், ஒரு வீட்டின் பெரும்பாகத்தை அழித்து விட்டது. அதைக்கண்ட அந்நகரத்தார் ஆச்சரியமடைந்து மஞ்சி மாகாணத்திலிருந்த மற்றை நகரவாசிகளைப் போலவே தாங்களும் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்படிந்தனர். இதனால் இந்நூலாசிரியரது தகப்பனும் சிற்றப்பனுமான வெனிஸ்ஸார் இருவருக்கும் பெருங்கீர்த்தியுண்டாயிற்று.

ஸியான்பூவினின்று தென்கிழக்கில் பதினைந்து மைலுக்கப்பால் ஸிங்கி யென்னும் நகருளது. அது மிகப் பெரிய பட்டணமல்லாவிடினும், உலகத்திலுள்ள நதிகளிலெல்லாம் பெரிதான கியாங் நதியின் மேலிருப்பதினால், அங்கு கணக்கற்ற கப்பல்கள் தங்குகின்றன.

இந்த கியாங் நதியானது சில விடங்களில் பத்துமைலும், எட்டுமைலும், மீந்த விடங்களில் ஆறுமைல் அகலமுள்ளதாகவும், உற்பத்தி ஸ்தானத்திலிருந்து கடலில் சங்கமமாகும்வரை நூறு நாட் பயணத்துக்கு மேற்பட்ட நீளமுள்ளதாகவுமிருக்கின்றது. வேறு நாடுகளின் வழியே யோடிவரும் கணக்கற்ற உபநதிகள் இதில் வந்து விழுகின்றன. இவ்வுபநதிகளனைத்தும் கப்பல் போக்கு வரவு செய்வதற்கு யோக்கியமானவைகளே. இவ்வாறு இந்நதி மிகப் பெரிதாகி விடுவதினால் இதன் வழியாக விலைமதிக்க முடியாத வியாபாரச் சரக்குகள் ஏறியிறங்குகின்றன. இது பதினாறு மாகாணங்களின் வழியே செல்லுகின்றது. இதன் கரையோரமாக ஆங்காங்கு சுமார் வேறு இருநூறு நகரங்களிருக்கின்றன.

இந்நதியின் வழியாய்ச் செல்லும் வியாபாரச் சரக்குகளில் விசேஷமானது உப்பு. அந்நதியை யனுசரித்துள்ள எல்லா நகரங்களிலும் விலையாகின்றது. இவைபவரான மார்க்கோ ஒருகால் விங்கி பட்டணத்தில் ஏக காலத்தில் ஐயாயிரம் கப்பல்கள் இருக்கக் கண்டார். இந்நதியோரமாயிருக்கும் வேறு நகரங்களில் இன்னும் அதிகமான கப்பல்கள் உண்டு.

இக்கப்பல்களெல்லாம் மேற் பக்கம் மூடப் பெற்று, ஒரே பாய் மரமும் ஒரே பாயுமுள்ளனவாய், சாமானியமானவை சுமார் நாலாயிரம் அல்லது அதற்குக் கொஞ்சம் மேற்பட்ட வெனிஷியன் கண்டாரி பாரத்தையும் (1—கண்டாரி=3 மணு) சில கலங்கள் பன்னீராயிரம் கண்டாரியுங் கூடக்கொண்டு செல்லக் கூடியவை.

இந்நாட்டார் தங்களது கப்பல்களின் பாய் மரங்களையும் பாய்களையுங் கட்டுவதற்குச் சணல் கயிறுகளையும் கப்பல்களை நீரிலிழுக்கவும், கரையோரமாக நிறுத்தவும் பிரம்பினாற் றிரிக்கப்பட்ட வடங்களை யுபயோகிக்கின்றனர். இவர்கள் பதினைந்து அடி நீளமுள்ள பிரம்புகளைத் தலை முதல் அடிவரை மிகச் சிறியவையாகக் கிழித்து, அவைகளின் நுனிகளைச் சேர்த்து நீண்ட கயிறுகளாகத் திரிப்பார்கள். அக்கயிறுகளிற் சில முன்னூறு பாதம் (1 பாதம்=ஆறு அடி) நீளங் கூட இருக்கும். இக்கயிறுகள் சணற் கயிறுகளைப்போல் பலமாக விருக்கின்றன.

ஒவ்வொரு கப்பலிலும், அதை நீரிலிழுக்கவும் கரை சேர்க்கவும், பத்து அல்லது பன்னிரண்டு குதிரைகளிருக்கும்.

இந்நதியின் கரையோரத்தில் பல விடங்களில் கற்பாறைகளும் காடுகளும் இருக்கின்றன. அவற்றின் உச்சியில் அந்நாட்டாரது விக்கிரகங்களின் ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; அங்குள்ள பள்ளத்தாக்குகளிலும் வேறு ஸ்தலங்களிலும் ஜனங்கள் வசித்து வருகின்றனர்.

லாயங்கி யென்பது இதே நதியின் மேல் தென்கிழக்காக விருக்கும் மற்றொரு சிறிய நகரம். அந்நகரத்திற்கு வருஷா வருஷம் வருகின்ற ஏராளமான அரிசியும் வேறு தானியங்களும் வெகுவாகக் கம்பலுவுக்கே ஏற்றுமதியாகின்றன. கம்பலுவுக்கும் மங்கிக்கும் மத்தியில் ஏரிகளும் நதிகளும் அவைகளின் இடையிடையே கூப்ளேகானால் வெட்டப்பட்ட ஒரு கால் வாயுமிருப்பதினால் இச்சரக்குகள் கம்பலுவுக்குச் செல்லுகையில் கடல் மார்க்கமாகச் செல்லவேண்டிய அவசியமிருப்பதில்லை. அந்தக் கால்வாய் பார்வைக்கு வெகு அழகாகவும் அற்புதமாகவுமிருப்பதன்றி வெகு நீளமுமுள்ளது. அதனால் அதன் கரையோரமிருக்கும் நகரங்களுக்கு விசேஷமான லாபமுண்டாகின்றது. மேற் சொல்லிய நதியோரமாகவும் வாய்க்காலோரமாகவும், கூப்ளேகான், விசாலமான பெரிய பாதைகள் போடுவித்திருக்கிறார். இந்நதியின் மத்தியிலிருக்கும் தீவில் கட்டப்பட்டுள்ள ஒரு பெரிய கோயிலிலும் மடத்திலும் விக்கிரகாராதனைக்காரரைச் சேர்ந்த சந்நியாசிகள் இருநூறு பெயர்கள் இருக்கின்றனர்.

விங்கன்பூ வென்பது மங்கியிலுள்ள மற்றொரு பட்டணம். அங்கு வியாபாரச் சரக்குகள் அதிகமாகவுண்டு. வேட்டைக்கான எல்லா விதக் காட்டு மிருகங்களும் பறவைகளும், சாப்பாட்டுக்கு வேண்டிய சகல சாமான்களும் அங்கு ஏராளமாகக் கிடைக்கின்றன. 1274-ம் வருஷத்தில் அவ்வூருக்கு அதிபதியாக நியமிக்கப்பட்ட மார்ஸாகிஸ் என்னும் நெஸ்டோரியனால் கட்டப்பட்ட இரண்டு நெஸ்டோரியக் கிறிஸ்தவக் கோவில்கள் அங்குண்டு.

விங்பென்பூவிலிருந்து தென் கிழக்காக மூன்று நாட்பயணத்திலுள்ள விக்கிரகாராதனைக்காரர் நிறைந்த அனேகம் பட்டணங்களுக்கும் கோட்டைகளுக்குமப்பால் சகலசாமான்களும் நிறைந்த டின்குவிகுவியென்னும் பெரியதும் அழகுமுள்ள நகரமிருக்கின்றது.

தார்த்தாரிய சேனாதிபதியான பையன்சின்லான் என்பவன் மங்கி மாகாணத்தைக் கைப்பற்றியபொழுது அவன், இரண்டு மதில்களாற் சூழப்பட்டுள்ள இந்நகரைப் பிடித்து வருமாறு அலானி வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவர்களில் அனேகரை அனுப்பினான். அப்பொழுது இந்நகரத்தார் கோட்டை உட்சுவரின் பின்புறமோடிச்சென்று ஒளிந்து கொண்டனர். அலானிகள் வெளிச்சுவரைக் கடந்து உட்சென்று, அங்கு அளவில்லாத சாராயமிருக்கக் கண்டு, தங்களுக்குண்டான களைப்புத்தீருமாறு அதை மிக மிஞ்சிக் குடிக்கத் தலைப்பட்டனர். அக்குடியினால் அவர்கள் மதிமயங்கிக் கிடக்கவும், அதைக் கண்ட இந்நகரத்தார், இராக்காலத்தில் அவர்களைத் திடீரெனத் தாக்கி, ஒருவன் விடாமல் எல்லாரையும் கத்திக்கிரையாக்கினர். இதைக் கேட்ட பையன் வேறொரு பெருத்த சேனையை இந்நகரத்தின் மீது அனுப்பினான். அது சிறிது நேரத்திற்கெல்லாம் இந்நகரைப் பிடித்து அங்கிருந்த ஜனங்கள் எல்லாரையும் ஒருவர் தவறாமல் கத்திக்கிரையாக்கிப் பழி வாங்கியது.

சங்குவியென்பது இருபது மைல் சுற்றளவுள்ள பெரிதும் கீர்த்தியுமான வேறொரு பட்டணம். அங்கு திரளானஜனங்களும் பணக்காரரான வியாபாரிகளும், சலியாது உழைக்கும் தொழிலாளிகளும், அனேக வைத்தியர்களும், மாந்திரீகர்களும், ஞானிகள் என்று சொல்லப்படும் தத்துவ சாஸ்திரிகளும் இருக்கின்றனர். இந்நகரத்தைச் சேர்ந்த மலைகளில் ருபார்ப் என்னும் கிழங்கும் இஞ்சியும் வெகுவாகவிளைகின்றன. இந்நகரிலும் இதற்குக் கீழ்ப்பட்ட வேறு பதினாறு நகரங்களிலும் பொருந்த வியாபாரமும் விநோதமான அனேகம் கைத்தொழில்களும் நடை பெறுகின்றன. இங்கு பல விதமான பட்டு வஸ்திரங்கள் நெய்யப்படுகின்றன.

விங்க்கி யென்றால் பூலோக நகரம் என்று பெயர்.

இந்நாட்டில் குவின்ஸே யென்று வேறொரு நகரமுண்டு. அது தெய்வலோக நகரமாம்.

விங்குவியிலிருந்து ஒருநாட் பயணத்தில் வாகியூ வென்னும் பட்டண மிருக்கின்றது. அங்கும் இந்நாட்டில் பொதுவாக எல்லா நகரங்களிலுமிருப்பது போலவே ஏராளமான பட்டு வியாபாரிகளும் தேர்ந்த தொழிலாளிகளும் மற்றைய சாமான்களை விற்கும் வேறு அனேக வியாபாரிகளும் இருக்கின்றார்கள்.

பனி பெய்ததினால் பெற்ற பாக்கியம்.

(ஒரு சிறு கதை).

(ஸ்ரீமான் ஜனரத்னம் எழுதியது)

சூரியன் மலைவாயில் விழுந்து ஒரு ஜாமத்திற்கு மேலிருக்கும். காரிருள் சூழ்ந்து எதிரிலிருக்கும் உருவம் தெரியாமலிருந்தது. மார்கழி மாதக் குளிரின் கடுமை சகிக்க முடியவில்லை. நெடுகப் பனி நிரம்பியிருந்ததினால் பிரயாணம் செய்பவர்கள் சாலை எதுவென்று தெரிந்து கொள்வதும் அரிதாயிருந்தது.

இச்சமயம் வீராசாமி வெகு சிரமப்பட்டுத் தன் குதிரையைச் சாலை வழியே நடத்திக் கொண்டு உடுமலைப்பேட்டையை நோக்கி

விரைவாய்ச் சென்று கொண்டிருந்தார். மனிதனுக் கேற்படும் கஷ்டங்களை வர்ணிக்க முடியுமா? வெகு காலமாகக் கியாதி பெற்றிருந்த குடும்பத்தைச் சேர்ந்த நமது வீராசாமி அனுபவித்த கஷ்டங்களை நினைக்கின் கேவலம்! மனிதப் பிரயத்தனத்தில் பிரபஞ்ச விவகாரம் நடைபெறுகின்றதென்று எண்ணவும் முடியுமா? செல்வச் சீமானாகப் பெருமையுடன் வாழ்ந்திருக்க வேண்டிய வீராசாமி கால வித்தியாசத்தினால் நேர்ந்த காரியத்தின் பயனாகச் சொந்தவூரைவிட்டு அன்னிய நாட்டிற்கு ஓடவும் நேர்ந்ததல்லவா? பதியின் பால் பரம விசுவாசம் வைத்த அழகிய சுந்தரியை வீட்டில் விட்டு அன்னிய நாட்டில் பரதையாகத் தவிக்கும் கதி ஏற்பட்டதும் ஆச்சரியமே. இரண்டு மூன்று வருஷங்களாகத் தன் சொந்தவூரில் தலை காட்டாமல் ஒளிந்திருந்து தற்சமயம் சர்வ ஜாக்கிரதையாக வீட்டிற்கு ஒரு முறை செல்லத் துணிந்த நமது பிரயாணிக்கு இருளும் பனியும் பிரமாதமன்று. மேலும் தன் சிற்றப்பன் மகனாகிய சுப்பண்ணனுக்கு முன்னதாகவே தான் வரும் விஷயம் தெரிவித்திருப்பதால், வீராசாமி யாதொரு கவலையின்றி சந்தோஷமாக ஊரை நோக்கிக் குதிரையை வேகமாக நடத்தினார்.

நெடுந்தூரத்தில் சிறு விளக்கு மினுமினுப் பூச்சிபோல காணுவதாகத் தோன்றியது. அப்பனியில் விளக்கொளி தெரிவதும் அசாத்தியமே. ஆயினும், இவர் மனதில் தன் சொந்தவூரை நெருங்கிய சந்தோஷமும், தனது மனைவியைக் காணப்போகும் களிப்பும், மேலே மூண்டு நிற்க, அவருக்கு வெளிச்சம் தெரிவது போலிருந்தது. ஆஹா !!! அந்நாள் முழுதும் எவ்வளவு தூரம் பிரயாணம் செய்திருக்கிறார். மூன்று தினங்களுக்கு முன் புதுச்சேரியில் கப்பலிலிருந்து இறங்கி வெகுப் பிரயாசைப்பட்டு இவ்வளவு தூரம் பிரயாணம் செய்வது கஷ்டமாயிருந்தது. "சீச்சீ !! இப்போதுதான் வெள்ளியந் தோட்டம் நெருங்கினாப் போலிருக்கிறது. ஆம்! அதோ தெரிகிறது சத்திரம். இது துரைகள் இறங்கும் பங்களா. இன்னும் அரை மைல் சென்றால் எனது சகோதரன் வீடு சேரலாம். அங்கு தங்கி உணவு அருந்திப் பிறகு அவனுடன் விஷயங்கள் பேசிவிட்டு என் காதலி எங்கிருக்கிறாள் என்று தெரிந்துகொண்டு விரைவிற் செல்லவேண்டும்" என யோசனை செய்துகொண்டே நமது வீராசாமி குதிரையைத் தட்டிவிட்டார். ஐயோ பாவம்! அக்குதிரையும் எவ்வளவு வேகமாக ஓடும்! எவ்வளவு மைல் பிரயாணம் செய்யும்! நல்ல வேளையாக இக்குதிரைக்கும் 300-ரூபாய் கண் மூடித்தனமாகக் கொடுத்தாரே !

பனி நன்றாகக் கவிந்திருந்த போதிலும் வீராசாமி தன் குதிரையை வேகமாகவே நடத்திக்கொண்டு சென்றார். பக்கத்தில் ஜன்னலிலிருந்து வெளிச்சம் தெரிந்தது. வீட்டிற்குள் ஜனங்கள் சந்தோஷமாகப் பேசுவதும் கூச்சலிடுவதும் செவியில் விழுந்தது. அவர்கள் சுகமாக விருந்து சாப்பிடுவது போலிருந்தது. ஏதோ சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டாடுவது போலுமிருந்தது. யாரோ ஒரு சீமானின் கலியாணம் நிச்சயமானதைப் பற்றி அவ்விருந்து சில சிநேகிதர்கள் கொண்டாடுவது போலும்! பக்ஷணங்களின் வாசனை பனி பெய்தபோதிலும் நமது வீராசாமியின் நாசியைத் துளைத்தது. யாருக்குக் கலியாணமாயிருக்கலாம் என்ற யோசனை ஒருபுறம் மேற்பட்ட போதிலும், இவருக்கு இந்த வாசனை பெரும் ஆசையைக் கிளப்பி விட்டது. காலை முதல் சாப்பாடின்றிப் பிரயாணம் செய்தவராதலின் சற்றும் பொறுக்க முடியாதபடி பசி பொங்கி எழுந்தது.

"ஆம்! முதலில் தம்பி வீட்டிற்குச் சென்று சாப்பிடுவது அவசியம்! கடவுளே! தம்பி வீட்

டிலிருக்கவேண்டுமே! புதுச்சேரியிலிருந்து கடிதம் எழுதியிருந்தேனே! எனது ஏராளமான நிலங்களை யெல்லாம் என் மனைவியால் கவனிக்க முடியுமா? நல்ல வேளையாக இவன் உதவியாக இருந்து உழைத்து வருகிறானே" என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டு குதிரையின் மேல் சற்று குனிந்து படுத்தவண்ணம் குதிரையைத் தட்டிக்கொடுத்து அதட்டினார். அந்த வீதி பழைய ஞாபகங்களை மூட்டியது. அவைகளை யெல்லாம் அடக்கிக்கொண்டு "அதோ! அந்தப் பெரும் ஆலமரத்தைக் கடந்து திரும்பினால் என் தம்பி வீடு சேர்ந்தோம்" என்ற ஆவலுடன் சென்றார்.

இதோ வீடு வந்து விட்டது. பழைய வீடுகள் போலின்றி தற்கால பங்களா மாதிரியாக முன்னால் தோட்டமும் வீடு உள்ளிட்டுமிருந்தது. வீராசாமி குதிரையினின்றும் களிப்புடன் குதித்தார். இச்சப்தம்கேட்டு தோட்டத்தின் மூலையிலிருந்த கருப்பன் ஓடிவந்து யாரென்று கவனிக்க அவனுக்கு ஆச்சரியமும் சந்தோஷமும் தாங்க முடியவில்லை. மூன்று வருஷமாக மறைந்திருந்த பெரிய எஜமானைக் கண்ட கருப்பன் அந்த இருட்டிலேயே கீழே விழுந்து நமஸ்கரித்தான். "பிறகு பேசிக்கொள்ளலாம். குதிரையைக் கொண்டுபோய்த் தீனிபோடு" என்று அவனிடம் சொல்லிவிட்டுப் படிக்கட்டுகளின் மேல் தாவி நடந்தார். மூடியிருந்த கதவைத் தன் கைத்தடியினால் தட்டினார்.

மாடியில் மாத்திரம் விளக்கொளி காணப்பட்டது. ஒரு ஜன்னற்கதவு திறக்கப்பட்டது. ஒரு தலை வெளியே எட்டிப் பார்த்தது. "யாரவன் இவ்வளவு தைரியமாகத் தட்டுவது?" என்று கோபத்துடனும் சலிப்புடனும் கேட்ட சொற்கள் காதில் விழுந்தன. "நான்தான். உள்ளே வருவதற்கு ஆவலுள்ள ஒருவன்" என்று விடை பகர்ந்தார் வீராசாமி. "யாரு! சே ! வீராசாமி அண்ணா !" என்று சொல்லிக் கொண்டே அத்தலை உள்ளே இழுக்கப்பட்டது. "ஆஹா ! தம்பி சுப்பண்ணன்தான் !! நல்ல வேளை! ஆயினும், நான் திரும்பி வந்ததில் அவன் சந்தோஷமடைவதாகக் காணப்படவில்லையே" என்று யோசித்தார் வீராசாமி.

கதவு திறக்கப்பட்டது. ஒரு வேலையாள் ஆச்சரியத்துடன் நிற்பதைப் பார்த்தார். உடனே வீராசாமி உள்ளே நுழைந்து மாடியிலிருக்கும் தம்பியைப் பார்க்க மாடிப்படிகளைத் தாவி ஏறினார். மாடியில் வெகு அழகாக நாற்காலிகளும் சோபாக்களும் போடப்பட்டிருந்தன. இவை யெல்லாம் இவருக்கு ஆச்சரியமாக விருந்தன. இவர் வருவதைக் கண்ட சுப்பண்ணன் எதிர் வந்து ஆலிங்கனம் செய்து கொள்வதா என்று யோசித்து நின்று கொண்டிருந்தான். இருவரும் ஒருவரை யொருவர் சில விநாடிகள் வெறித்துப் பார்த்த வண்ணம் நின்றார்கள்.

"வீரண்ணா! வாருங்கள்! உங்கள் கடிதத்திலிருந்து இன்றைக்கு நீங்கள் வருவதாக எண்ணவேயில்லை" என்று முணுமுணுத்தான் சுப்பண்ணன்.

"ஆம் நான் தான்! சுப்பண்ணா! நமது வீடும் ஊரும் பலவகையில் மாறுபட்டிருக்கின்றன" என்று சொல்லிக் கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்தார். சுற்றிலும் ஒரு முறை பார்த்தார். தன் தம்பி முகத்தை நோக்கினார்.

"ஏதோ கலியாண உற்சவத்திற்கு ஏற்பாடுகள் நடக்கிறது போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு பலதட்டுகளில் வைத்துள்ள பழங்கள், வெற்றிலை பாக்கு, கற்கண்டு, பக்ஷணங்கள், பூமாலைகள் முதலியவற்றை நோக்கினார். உடனே எழுந்து ஒரு தட்டிலுள்ள லட்டு, ஜிலேபி முதலிய பக்ஷணங்களை யெடுத்துத் தின்ன ஆரம்பித்தார். ஒரு வேலையாள் ஒரு

தட்டில் வாழையிலையில் பொங்கல், அல்வா முதலிய பலகாரங்களை யெடுத்துக் கொண்டு வைத்தான். "பலே! எனக்கு உபசாரம் இவ்வளவு மேன்மையாக யிருப்பது பற்றி சந்தோஷம்! எனக்குப் பசி வெகு அதிகம். முதலில் சாப்பிட்டு விட்டுப் பிறகு என் கதையைச் சொல்கிறேன்" என்று கைகளைக் கழுவிக் கொண்டு போஜனம் செய்யப்புகுந்தார். "அய்யா! தாங்கள் வந்ததைப்பற்றி எனக்கு வெகு சந்தோஷம்" என்று சொல்லிக்கொண்டு சுப்பண்ணன் உட்கார்ந்தான். "ஆயினும் இன்னும் இரண்டு தினங்களுக்குப் பிறகு வந்திருக்கலாம்" என்று முணுமுணுத்தான்.

வீரசாமிக்கு ஒன்றும் விளங்கவில்லை. "தம்பி? அப்படிச் சொல்லாதே! எப்பொழுது வந்தாலும் நான் திரும்பி வந்ததில் சந்தோஷம் குறையாது என்று சொல். ஏதோ உனக்குக் கலியாணம் நடப்பதற்கு ஏற்பாடாயிருக்கிறது போலும்! எனக்கும் சந்தோஷமே!" என்றார். பேசிக்கொண்டே இவர் நிதானமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். "தம்பி! நான் இங்கிருப்பதில் உனக்கு அதிருப்தியாக யிருப்பதால் நான் போஜனம் செய்து விட்டு இப்போதே கிராமத்திற்குப் புறப்படுகிறேன். ஒரு நல்ல குதிரை மாத்திரம் கொடு" என்று கேட்டார்.

சுப்பண்ணனும் அடிக்கடி கடியாரத்தைப் பார்த்துக் கொண்டே தலையசைத்துக் கொண்டு இருந்தான்.

"ஆம்! நீங்கள் புறப்படுமுன் அவர்கள் வந்தாலும் வந்து விடுவார்கள்" என்று முணுமுணுத்தான். பிறகு "இந்தப் பனியில் இவனுக்கு வழி தெரியாது! இரவு முழுதும் எங்காவது அலைந்து திரிவான். பொழுது விடிந்து ஒரு ஜாமத்திற்குள் நாம் மோட்டாரில் வெகு தூரம் சென்று விடுவோம்" என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

"தம்பி! நீ கவலைப்படாதே! உன் விருந்தினர்களும், மணப் பெண்ணும் வருமுன் நான் இவ்வீட்டைவிட்டு விலகிவிடுவேன். ஆயினும் இதென்ன புதுமாதிரி, மணக் கோலம்!! ஆங்கிலேய தினுசாக ஏற்பாடுகள் போலும்" என்று சொன்னார். எழுந்து கைகளைக் கழுவிவிட்டுச் சில பழங்கள் சாப்பிட்டார். வெள்ளி கூஜாவிலிருந்து பால் பருகினார். இதற்குள் சுப்பண்ணன் கருப்பனைக் கூவி, குதிரையைத் தயாராக வைத்திருக்கும்படி உத்திரவளித்தான். வீரசாமியும் எழுந்து குதிரைச் சவாரிசெய்வதற்கு உடுத்துக் கொண்டார். "ஆஹா! இன்றேனும் சுகமாக நித்திரை செய்யலாம் என்றெண்ணினேன். மறுபடியும் குதிரைமேல் உட்கார்ந்து செல்லவேண்டும். இந்தப் பெரும்பனி! பாழும்பனி! வழிதெரியவில்லை. இன்றிரவு கிராமத்திற்குச் செல்ல முடியாது. ஊர்க்கோடியிலுள்ள சாவடியில் தங்கிவிட்டு அதிகாலையில் பனி குறைந்தவுடன் செல்லவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே அங்குமிங்கும் நடந்தார். ஒன்றும் யோசனை தோன்றவில்லை. தனது சட்டை ஜேபியில் சுருட்டு இருக்கிறதா வென்று தடவிப்பார்த்தார். மறுபடியும் தம்பியை நோக்கி, "தம்பி! இந்தப் பாழும் பனியில் உனது மணமனைவியும் விருந்தினர்களும் வழி தப்பிப்போகாமல் வருவார்களா?" என்று வினவினார்.

"அதைப் பற்றி சந்தேகமில்லை. அவர்கள் இத்தருணம் பாதி வழி தூரம் வந்திருப்பார்கள். ஏன்! ஒரு வேளை வீட்டின் சமீபம் வந்திருந்தாலும் இருக்கலாம்" என்று மறுபடியும் கடியாரத்தை நோக்கினான்.

"சரி, தம்பி! நான் இருப்பது உனக்குக் கசப்பாக இருப்பதால் நான் செல்கிறேன்" என்று வீரசாமி எழுந்து ஒரு போர்வையை எடுத்துத் தலையில் சுற்றிக்கொண்டு, பாழும்

பனியைத் தூஷித்துக் கொண்டே கீழே இறங்கினார். வாயிற்படியைக் கடந்து தாழ்வாரத்திற் சென்றவுடன் சுப்பண்ணன் கதவைச் சாற்றிக் கொண்டான்.

"ஆஹா! என்ன ஆச்சரியம்! நமது தம்பியும் இப்படி இருப்பானா? ஏன் இருக்கக் கூடாது? ஒரு வேளை நம்மைக் கண்டு அவன் புது மனைவியும் விருந்தினர்களும் வெட்கப்படலாம். வாஸ்தவம்! உண்மை எப்படியிருந்த போதிலும் தன்மேல் அபவாதம் ஏற்பட்டு மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஊரைவிட்டு ஓடியவனைத் தங்கள் சகாவாக ஒப்புக் கொள்வார்களா?" என்று பலவாறு யோசித்து நிற்க, கருப்பன் குதிரையைக் கொணர்ந்து நிறுத்தினான். அக்குதிரையும் பிடிபடாமல் இருந்தது. புறப்படுவதற்கு ஆவலுடன் இருப்பதுபோல் தோன்றியது. "என்ன விந்தை! நான்தான் சீக்கிரம் செல்லவேண்டும். இந்தக் குதிரைக்கும் எவ்வளவு அறிவு! இதுவும் என்னுடன் நாள் முழுதும் பிரயாணம் செய்திருந்தாலும் இந்த வீட்டைவிட்டுப் புறப்பட ஆவலுடையதாக யிருக்கிறது" என்று வீரசாமி ஆச்சரியப்பட்டார்.

"நண்பனே! உன் உதவியை இன்னும் விரும்புகிறேன். என்னைத் தூக்கிச் செல்லவேண்டும்" என்று குதிரையுடன் பேசிக்கொண்டே வண்ணம் அதன் மீது ஏறி உட்கார்ந்தார். "பாழும்பனி பெய்வதால் வழி எவ்விதம் கண்டு பிடிப்பது!" என்று சொல்லிக்கொண்டு லகானைக் கருப்பனிடமிருந்து வாங்குமுன் குதிரையும் நடக்க ஆரம்பித்தது. "எஜமானே கவலைப் படாதீங்க. இந்தப் பாழும்பனி நாசமாப்போக! பரவாயில்லிங்க! குதிரைக்கு வழி தெரியும். உங்களை கொண்டுபோய் சேர்த்து விடும்" என்று கருப்பன் கூறிய வார்த்தைகள் நன்றாகச் செவியில் விழுமுன் குதிரை வெகு தூரம் வந்து விட்டது.

"பலே! இக்குதிரைக்கு வழி தெரியும் போலிருக்கிறதே! நான் ஒரு பக்கம் திருப்பினால் முரண்டு கொண்டு அதன் வழியே செல்கிறதே! இது என்ன ஆச்சரியம்" என்று குதிரையைத் தடவிப் பார்த்தார். "சரிதான், இது நான் வந்த குதிரையல்ல. சுப்பண்ணன் வழக்கமாகச் செல்லும் குதிரை! ஆஹா! அதுதான் கருப்பன் சொன்னான் குதிரைக்கு வழிதெரியுமென்று! பலே! தினந்தோறும் சுப்பண்ணன் சென்ற பழக்கம். அப்பா! இப்பொழுது சுப்பண்ணன் சிநேகிதர்களும், மணப் பெண்ணும் யாவரென்று கண்டு பிடிக்கலாம்" என்று எண்ணினார்.

குதிரையும் வேகமாக நடந்து கொண்டிருந்தது. பனி கவிந்து மூடியிருந்த போதிலும் குதிரை சாவதானமாக மரங்களையும் வயல்களையும் தாண்டி நடந்தது. முதலில் குதிரையைச் சற்று அடக்கி நடத்த வீரசாமி பிரயாசப்பட்டார். ஆனால் என்ன செய்தும் குதிரை தன் வழியே செல்வதைக் கண்டு அதனிஷ்டமே செல்லட்டுமென்று லகானைக் குதிரையின் மீது போட்டுவிட்டு யோசனையிலாழ்ந்திருந்தார்.

கொஞ்ச தூரம் சென்றவுடன் ஒரு தோப்பில் குதிரை நின்றது. பிறகு மெதுவாக நடந்தது. 'சரி! சீக்கிரம் நாம் இறங்க வேண்டும் போலும்!' என்று எண்ணினார். தோட்டத்தின் ஒரு புறம் இருந்த ஒரு சிறு குடிசை வாயிலில் குதிரை நின்றது. உடனே வீரசாமி கீழே யிறங்கி என்ன செய்வதென விழித்திருக்கும் சமயம் அக்குடிசையிலிருந்து ஒரு ஆள் ஒரு சிறு கைலாந்தருடன் வெளியே வந்தான். "எசமானே! இந்தப்பாழும் பனி கொட்டுவதால் புறப்படத் தாமதமாயிற்று. மோட்டார் வண்டியில் ஏதோ பிசகென்று அவரும் ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறார்" என்

ளுன். வீராசாமி தயங்கி நிற்க அந்த ஆள் யஜமான் கோபித்திருக்கிறார் என்று எண்ணி, "எசமானே மன்னிக்கணும்; அம்மணியிடம் செல்லுங்கள். தங்களைப் பார்த்தவுடன் சந்தோஷம் அடைவார்கள்" என்று வழக்கம்போல யஜமானன் கோபத்தை ஆற்ற அம்மணியைப் பற்றிச் சொன்னான். வீராசாமியும் வாய் திறவாமல் தலை யசைத்துக் கையால் வழி காட்டிச் செல்லும்படி சைகை செய்தார்.

பிரயாணியும் அந்த ஆள் முன்னே வழி காட்டிச் செல்லப் பின்னால் மெதுவாக நடந்து சென்றார். நல்ல வேளையாக இந்த ஆள் கிடைத்தது அதிர்ஷ்டமே. பாழும் பனி மூடியிருப்பதில் எதிரிலுள்ள மரமும் கட்டடமும் தெரியவில்லை. வீராசாமிக்கு ஆச்சரியம் அதிகமாயிற்று. வழியில் மாடுகள் தண்ணீர் குடிக்கும் கருங்கல் தொட்டி யிருப்பதைக் கண்டார். "இது முன் நான் புதுவகையாக வெட்டுவித்த தொட்டி மாதிரி இருக்கிறதே! ஒருவேளை இது நமது வீடுதானோ!" என்று தவித்துக்கொண்டே நடந்தார்.

வீட்டின் முன் புறம் பலர் பேசிக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. ஆயினும் அந்த வழி செல்லாமல் அந்த ஆள் பின் புறம் சென்று ஒரு சிறு கதவைத் திறந்து "எசமானே உள்ளே செல்லுங்கள்" என்றான். வீராசாமி உள்ளே சென்று கதவைச் சாற்றி விட்டு அங்கு மிங்கும் உற்றுப்பார்த்தார். ஆ! என்ன ஆச்சரியம்! தன் சொந்த வீடுதான். இது இரண்டாங்கட்டு முற்றம். இதோ கூடத்தில் ஒருபுறம் தன் மனைவியின் அறை. ஆஹா! இதுவும் ஒரு அதிர்ஷ்டம் தான்! ஆயினும்—சுப்பண்ணன் குதிரையும் மணப் பெண்ணும் விருந்தினரும்—இந்த எண்ணங்கள் அவர் மனதைக் குழப்பின.

'இருக்கட்டும்! இன்னும் பார்ப்போம்!' என்று வீராசாமி மெதுவாகத் தன் மனைவியின் அறைக் கதவைத் திறந்தார். ஆஹா! மூன்று வருஷங்களுக்கு முன் நடந்த விஷயங்கள் அவர் மனதில் ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றின. கதவு மெதுவாகத் திறந்தவுடன் இவர் உள்ளே நுழைந்தார். ஆஹா! அதோ தன் மனைவி வெகு கவலையுடன் ஒரு மூலைத் திண்டில் சாய்ந்த வண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருப்பது போல் காணப்பட்டாள். இவர் வருவதைக் கண்டு சந்தோஷம் காட்டவில்லை எழுந்திருக்கவுமில்லை. இது என்ன அதிர்ஷ்டம் என்று வருந்தினார் வீராசாமி. ஆயினும் அடுத்த நிமிஷம் அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள். உடனே தடாலென்று எழுந்து "ஆ! என் நாதன்" என்று அலறிக்கொண்டு வீராசாமி மீது பாய்ந்து அவரை அணைத்த வண்ணம் மூர்ச்சையாயினள்.

இனி அதிகமாகச் சொல்வதற்கு இல்லை. வீராசாமி தன் கற்பு மிகுந்த காதலியின் களைப்பை நீக்கிய பின் அவளுடன் பேசிக் கொண்டிருந்தார். விஷயம் அப்போதுதான் அவருக்கு விளங்கியது. மூன்று வருஷமாக இவரைப் பற்றி சமாசாரம் தெரியாமலிருக்கவே இவர் இறந்து விட்டதாக ஊரெங்கும் பிரஸ்தாபித்து விட்டு, சுப்பண்ணன் வீராசாமியின் மனைவியையும் பலாத்காரமாக பயமுறுத்தித் தன்னை மணம் செய்து கொள்ள நிர்ப்பந்தப்படுத்துவதாகவும் தெரிய வந்தது. சுப்பண்ணன் [illegible] நிலபுலங்களைப் பார்த்து வருவதாகவும், அந்நிலங்கள் தனக்குச் சொந்த மென்று சுப்பண்ணன் வாதிப்பதாகவும் அறிந்தார். மேலும் அன்றிரவு மோட்டாரில் பிரயாணம் செய்ய ஏற்பாடாயிருந்த விதமும் அறிந்தார்.

"சரி! நாம் இனி இங்கிருக்க வேண்டாம்! எனக்கு வேண்டிய செல்வம் நீ யொன்று தான். நாம் இனிப் புறப்பட்டுச் செல்வோம். அவன் ஏற்படுத்தியிருந்த மோட்டாரில் நாம் செல்வோம்"

என்று தன் மனைவியைத் தேற்றினார் வீராசாமி. அரை மணி நேரத்திற் கெல்லாம் அத்தனி வீட்டிலிருந்து ஒரு மோட்டார் வண்டி வெகு வேகமாகச் சென்றது. நமது வீராசாமியும் அவர் மனைவியும் ஆனந்தக் கடலில் அமிழ்ந்திருந்தனர். அவர்கள் முன் இருந்த மூட்டையில் ஏராளமான பணமும், பலவகை நகைகளும் இருந்தன என்று அவர்கள் சம்பாஷணையிலிருந்து அறிந்து கொள்ளலாம். வண்டி ஓட்டுபவனும் தனக்கு ஆயிரம் ரூபாய் வரும்படி கிடைப்பதை உத்தேசித்து வெகுவேகமாக ஓட்டினான். வீராசாமியும் அவர் மனைவியும் புதுச்சேரி சென்று அங்கு வசிப்பதாகவும், பிறகு பினாங்கு செல்வதாகவும் பேசிக்கொண்டு மகிழ்ந்திருந்தார்கள்.

சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் 'சுதேசமித்திரன்' பேபரில் சுப்பண்ணன் என்பவன் மீது கேஸ் ஏற்பட்டதாகவும், தன் அண்ணன் மனைவியை எங்கோ ஒளித்து விட்டதாகவோ, கொன்று விட்டதாகவோ அவன் மேல் போலீஸ் சந்தேகமிருப்பதாகவும் ஒரு நிருபர் எழுதியிருந்தார்.

ஆஹா! கடவுளது செய்கையை யார் தான் கண்டறிய முடியும்!!!

கண்களைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளுங்கள்.

(ஸ்ரீமதி P. மங்களாபாயி)

கல்வியறிவு பரவப்பரவ ஜனங்களுடைய பார்வை (திருஷ்டி) கெட்டுக்கொண்டு வருகிறது. படிப்பானது கல்வியின் ஓர் முக்கிய அங்கமாயிருப்பதனாலும், புஸ்தகங்களின் எழுத்து சிறிதாகிக்கொண்டு வருவதனால் அதிகமாக உற்றுப் பார்க்கவேண்டியதனாலும், அதனால் பார்வை (மழுங்குகிறது) மந்தமாகிறது. கண் வைத்தியர்கள் மாணாக்கர்களுடைய கண்களைப் பரீக்ஷிக்கும்பொழுது, பார்வை மழுங்கினவர்களுடைய தொகை மேல் வகுப்புகளில் படிப்பவர்களிற்றான் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் காணப்படுகிறது. கண்களைக் காப்பாற்றுவது எப்படி என்பது மாணாக்கர்களுக்கும், பல உபாத்தியாயர்களுக்கும் தெரிவதில்லை. இவ்விஷயத்தைப் பற்றிய நியமங்களை அலட்சியப்படுத்தப்படுகிறது.

திருஷ்டியானது ஈசுவரனால் அளிக்கப்பட்ட ஓர் விலையில்லாப் பரிசாகும். அதைக் காப்பாற்றுவது நமது பவித்திரமான கடமையாகும். பார்வை மழுங்கும் வரையில் நமக்கு அதன் மகத்துவம் தெரிவதில்லை. முதல் முதற் கொண்டே சில நியமங்களைத் தவறாமல் நடத்திக் கொண்டால் திருஷ்டி கெடாமலிருப்பதற்கு உதவியாயிருக்கும். ஆகலால் சில அவசியமான யோசனைகளை இவ்விடத்தில் சொல்கிறேன்.

பளபளப்பான பொருள்களை அதிக நேரம் பார்க்கலாகாது. இந்த நியமத்தைச் சிறுவர்கள் எப்பொழுதும் அலட்சியப்படுத்துகிறார்கள். இருளிலிருந்து ஒரு மிக்க அதிக வெளிச்சத்தில் வருவதும் நல்லதல்ல.

படிக்கும்பொழுது விளக்கினிடம் முதுகைத் திருப்பிக்கொண்டு உட்காரவேண்டும். விளக்கின் பிரகாசம் கண்களின் பேரில் விழாவண்ணம் புஸ்தகத்தின் பேரில் மாத்திரம் விழும்படி உட்காரவேண்டும். தனக்குப் பின்புறத்தில் இடது பக்கமாக விளக்கை வைப்பது உத்தமம்.

படிக்கும்பொழுது முதுகில் கூன் வரும்படி உட்காரலாகாது, நிமிர்ந்து உட்காரவேண்டும். படுத்துக்கொண்டு படிப்பது நலமன்று.

கண்களின்பேரில் பிரகாசம் விழும் வண்ணம் படிக்கலாகாது.

வண்டி போய்க் கொண்டிருக்கும் பொழுது படிக்கும் வழக்கம் அநேகருக்கு இருக்கிறது. இவ்வழக்கம் அபாயகரமானது வண்டியில் போய்க்கொண்டிருக்கும்பொழுது மனதை ரஞ்சிக்கச்செய்ய வேறு வழிகள் எத்தனையோ இருக்கின்றன. அந்த நேரத்தை சம்பாஷிப்பதில் கழிக்கவேண்டும். வண்டி போய்க்கொண்டிருக்கும் பொழுது மெல்லிய எழுத்துக்களையுடைய புஸ்தகத்தை படிப்பதினால் கண்கள் மிகவும் கெடுகின்றன.

மந்தமான வெளிச்சத்தில் படிக்கலாகாது. போதுமான வெளிச்சமில்லாவிடில் புஸ்தகத்தைக் கண்களுக்கருகில் பிடிக்கவேண்டியதாயிருக்கின்றது. அதனால் திருஷ்டி மந்தப்படுகிறது.

அதிக நேரம் படிக்கவேண்டியதாயிருந்தால் இடைவிடாமல் புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கலாகாது. நடுநடுவில் தூரத்திலிருக்கும் ஏதாவது வஸ்துக்களைப் பார்க்கவேண்டும். இவ்வாறு செய்தால் கண்களுக்குச் சிரம பரிகாரமுண்டாய், அதிகத் தொந்தரவில்லாமலிருக்கும்.

படிக்கும்பொழுது புஸ்தகத்தைக் கண்களுக்கு அதிக சமீபத்தில் பிடித்துக்கொள்ளவும் கூடாது. கண்களுக்குத் தொந்தரவு உண்டாகும்படி அதிக தூரத்திலும் பிடித்துக்கொள்ளலாகாது. சாதாரணமாய்ப் புஸ்தகத்தை 12-முதல் 14-அங்குல தூரத்தில் பிடித்துக்கொள்ள வேண்டும்.

மிகவும் மெல்லிய எழுத்துக்களையுடைய புஸ்தகங்களைப் படிப்பதனால் கண்கள் சீக்கிரத்தில் கெடுகின்றன. இத்தகைய புஸ்தகங்கள் படிக்காமலிருப்பது நலம்.

பார்வை மழுங்கினால் கண்களுக்குக் கண்ணாடி தேவையாயிருக்கின்றது. சாதாரணமாய் புருஷர்களுக்கு 45-வயதிற்குப்பிறகும், ஸ்திரீகளுக்கு 40 வயதிற்குப் பிறகும் கண்களுக்குக் கண்ணாடிக்குவெள்ளெழுத்துக் கண்ணாடி என்பார்கள். சிலர் கண்ணாடி தேவையில்லாமலிருக்கும் பொழுது ஆசைக்காக உபயோகிக்கின்றனர். சிலர் தேவையாயிருந்தும் அதை அணிய வெட்கப்படுகின்றனர். இவ்விருதிறத்தாரும் கஷ்டமடைகின்றனர். காரணமின்றிக் கண்ணாடி உபயோகிக்கக் கூடாது. தேவையாயிருந்தால் அதை வாங்கவும் தாமதிக்கலாகாது. கண்கள் சரியாகத் தெரியாமல் போனதும் சிலர் வீட்டில் யாராவது உபயோகித்துக்கொண்டிருக்கும் கண்ணாடி தனக்கு சரியாயிருக்கின்றதோவென்று பார்க்கின்றனர். அது சரியாயிருப்பதாகத் தோன்றி விட்டால் அதை வைத்துக் கொண்டே காரியத்தை நடத்திக்கொண்டு போகின்றனர். இவ்வாறு செய்வது நல்லதன்று. காரணம், இதனால் கண்கள் கெடுகின்றன.

கண்களின் அமைப்பு எப்படி இருக்கின்றதென்பது தெரிந்தால் கண்களைப்பற்றி எப்படிக் கவலை எடுத்துக் கொள்வதென்பதை அறிவது எளிதாயிருக்கும். கண்களின் அமைப்பில் சிருஷ்டிகர்த்தாவின் வல்லமை காணப்படுகிறது. ஆனால் கண்களின் அமைப்பைப்பற்றி வர்ணிப்பது நல்ல வல்லமையுள்ள டாக்டரால் முடிகிற காரியமேயன்றி என்னைப் போன்றவர்களுக்கு சாத்தியமல்ல. மேலே செய்திருக்கும் யோசனைகளைத் தழுவி நடந்தால் சாதாரணமாக மனிதர்களுக்கு அதிக நன்மையும் லாபமும் உண்டாகுமென்று நம்புகிறேன்.

(மனோரஞ்சன் சஞ்சிகையிலிருந்து.)

கருப்பியின் மகிமை.

(மொழி பெயர்ப்பு)

சகோதரி வி. பாலம்மாள்.

நடுப்பகல் சுமார் ஒரு மணி இருக்கலாம். கதிரவன் தனது பரிபூரண ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். கோடை வெய்யிலின் வேகம் சகிக்க வியலாததாகவிருந்தது. நீருண்ட மேகத்திலிருந்து பொழியும் நீர்போல தேகத்தினின்றும் வியர்வை தாரை தாரையாக வழிந்தோடியது. சூரியனை எதிர்ப்பவர் ஒருவருமே காணப்படவில்லை. வருணன் படிப்பணத்தின் மீதுள்ள ஆர்வத்தால் தொலை தூரம் சக்கியூட்சென்று விட்டான்போலும். வாயுதேவனை தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டிருந்து. பிராணிகளை இத்துயரத்தினின்றும் காப்பாற்றுவார் இல்லை. எதிர்த்துப் போர் புரிவார் இல்லாமையால் கதிரவன் கொடுங்குணங்கொண்டு வெளியிற் புறப்படுவோரின் நெற்றியைச் சுட்டுக் காலுக்குச் சூடுபோட்டுத் திக்கற்று வரும் பலமற்றவருமான வழிப்போக்கர் மீது தன் பராக்கிரமத்தை, தன் சாமர்த்தியத்தை, காண்பித்துக் கொண்டிருந்தான். தெருக்கள் சிலவற்றில் ஜன நடமாட்டமே இல்லாமலிருந்தது. அதி கஷ்டத்தையும் பொறுக்கக்கூடிய கழுதைகள்கூட இவ்வெப்பந் தாங்கமாட்டாது ஆங்காங்கு மரத்தடியிலும் குட்டிச்சுவர் நிழலிலும் தூங்கி விழுந்து கொண்டிருந்தன.

இச்சமயத்தில் அவசர காரியத்தின் பொருட்டு நான் திருச்சி ஆண்டார் வீதியின் வழியே சென்று கொண்டிருந்தேன். வெய்யிலின் கொடுமையால் வெந்து வேசாறி நெஞ்சுகாய்ந்து தாகத்தால் நா வறண்டு இனி ஓர் அடியும் எடுத்து வைக்க முடியாதவனாகச் சற்று இளைட்

பார வெண்ணினேன். சமீபத்திலிருந்த வீட்டின் முன் புறத்தில் வேப்பமரமொன்று தழைந்து நின்றது. அதனடியிற் போட்டிருந்த மேடையின்மீது உட்கார்ந்து இளைப்பாறலானேன். வீட்டிற்குள் சந்தடி சிறிதும் இருக்கவில்லை. தெருக்கதவு பாதி திறந்தபடி இருந்தது. நான் உட்கார்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் முன் புறத்திலுள்ள சிறு அறையில் ஏதோ ஒரு குழந்தை அழும் சத்தம் கேட்டது. அவ்விளங்குழவி வீறிட்டு வீறிட்டு வெகு நேரம் அழுதுகொண்டே இருந்தது. அதை கவனிப்பார் இல்லாமலிருந்தது. வேறு மனிதர்களின் நடமாட்டம் இல்லாதிருந்ததால் நான் மேடை விட்டெழுந்து தெருவாயிலின் வழியே உள்ளே நோக்கினேன். நடுக்கூடத்தில் ஒரு கிழவி படுத்திருந்தாள். எதிரிலிருந்த சமையலறையில் அழகிய பெண் ஒருத்தி நெய் ஜாடியில் கையைவிட்டுக் கீழும் மேலும் நெய் சிந்திய வண்ணம் நெய்யை அள்ளி அள்ளி எடுத்துக் கொண்டிருந்தாள். சிறு ஸ்டௌ ஒன்று எரிந்துகொண்டிருந்தது அதன் மீதுள்ள காப்பிக்கெட்டியில் வெந்நீர் தள தளவெனக் கொதித்துக் கொண்டிருந்தது. அடுப்பிற்கருகில் பால் பாத்திரம். பூனை ஒன்று அங்குமிங்கும் ஓடிக்கொண்டு இஷ்டமான பொருளில் வாய் வைத்து ருசி பார்த்து வந்தது. அப்பெண் நெய்யை எடுத்துத் தட்டில் வைத்திருக்கும்மாவிலிட்டுப் பிசைந்து கண் மூடித்திறப்பதற்குள் விழுங்கி விட்டாள். இதற்கிடையே கூடத்தில் படுத்துக் கிடந்த கிழம் கண் விழித்துக் கூவிப்பேசலானாள்.

கிழவி:—அடி பத்மா! நம்மாத்தில் குழந்தை அழுகுரல் ஏது?

பத்மா:—அதோ அந்த எதிர் வீட்டிற்குப் புதிதாகக்குடித்தனம்வந்திருக்கிறாளே சரோஜா. அவள் குழந்தை. யாரோ சினேகிதாள் வீட்டில் பார்டி கொடுக்கிறாளாம். அதற்காக அவள் புருஷனுடன் சென்றிருக்கிறாள். வெய்யிலின் அதிகம். இளங் குழந்தையை எடுத்துப்போனால் அசௌகரியமாகவுமிருக்கும் என்று குழந்தையை வழி நடையறையில் விட்டுப்போனாள். காலை பத்து மணிக்கே சென்றாள். இன்னம் வரக்காணோம்.

கிழவி:—அதாரடி அது. சரோஜா! நன்றாயிருக்கு. லக்ஷ்மி, சரஸ்வதி, காவேரி, ஒருபேரும் கிடையாதா? அவள் எதற்காக இந்த வெய்யில் வேளையில் கைக் குழந்தையை விட்டுச் சென்றாள்?

பத்மா:—இந்த கர்நாடகங்களுடன் யார் பேசுவது? அவள் விருந்து சாப்பிடப் போயிருக்கிறாள். சரோஜினி என்ற பெயரை சரோஜா என்று அழைப்பது வழக்கம். பூனை தன் குட்டியைக் கௌவிக்கொண்டு ஓடுவதுபோல செல்லுமிடங்களுக்கெல்லாம் கைக் குழந்தையை எடுத்துச் சென்றால் நன்றாயிருக்குமா? அதுவும் இன்று நடக்கும் விருந்துக்கு பாமா, கோதா, நீலா, சந்திரகாந்தா, புஷ்பலதா, சரசாங்கி, கனகா, சம்பகா எல்லோரும் வந்திருப்பார்களே. ஒவ்வொருத்தி உடம்பிலுள்ள நகை நட்டுக்களும் ஆயிரக்கணக்கிலிருக்குமே. இந்த மாதிரி பெரிய மனுஷாள் வரும் இடத்தில் இளங் குழந்தை யொன்று வீச்சு வீச்சு என்று அழுதால் நன்றாயிருக்குமோ. அதெல்லாம் உங்கள் காலத்தில் வழக்கம்! கையிலொன்று வாயிலொன்றாகக் குழந்தைகளைக் கூட அழைத்துச் செல்வது. இப்போது அப்படிச் செய்தால் எல்லோரும் கைகொட்டிப் பரிசிப்பார்கள்.

சற்று ஓய்ந்திருந்திருந்த குழந்தை மீண்டும் அழத் தொடங்கிற்று. இந்தப் பரிதாபம் சகிக்க மாட்டாது "ஏது எப்படியானாலும் சரி. குழந்தை அலறுகிறது. கொஞ்சம் பால் எடுத்துக் குழந்தைக்குப் போட்டுவிடு" என்று கிழவி மொழிந்தாள்.

பத்மா:—இப்பொழுது பால் ஏது? வேளைக்கு ஒரு சேர் பால் வேண்டுமே அதற்கு. அதென்ன குழந்தையப்பா, பிரம்ம ராக்ஷஸக் குழந்தை! இம்மாதிரி பெரு வயிறு படைத்த குழந்தைகளை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இளங் குழந்தை இப்படியிருந்தால் வயது வந்தால் குண்டோதரன்தான். ஒரு நாழிக்கு முன்புதான் பால் புகட்டினேன். திரும்ப எங்கிருந்து கொண்டு வருவேன். வீட்டிலிருக்கும் பால் எனக்குக் காப்பிக்கே போதும் போறாததாக விருக்கிறது.

கிழவி:—சரி, காப்பி இழவு இருக்கே இருக்கு. ஒருவேளை இன்று இல்லாவிட்டா லென்ன? வெய்யில் தறுவாயில் குளிர மோர்விட்டுச் சாப்பிடக் கூடாதோ! இருக்கும் பாலை குழந்தைக்குக் கொடு. தூக்கத்திலிருந்து எழுந்ததாலும் பசியினாலும் கதறுகிறது பார்!

"உனக்கென்ன பாட்டி. நீ ஒரு மூலையில் விழுந்து கிட. ஏதோ ஒரு துணைக்காக இருவென்றால் பேசாது கிடப்பதில்லை. மாமியார் அதிகாரம் ஒருவாறு தொலைந்ததென்றால் நீ அதற்கு பதிலாக ஆரம்பிக்கிறாயோ. அம்மாளுக்கு நீ செய்யும் குருட்டதிகாரத்தை எழுதினால் அப்போது தெரியும் உன் பாடு. எனக்கு காப்பி இல்லாவிட்டால் தலைவலி வந்துவிடும். நான் ஏன் ஒரு வேளையாவது இல்லாமல் இருக்கவேண்டும்? அதற்கென்ன கேடு. அதன் தாய் இப்பொழுதோ சற்று நேரத்திலோ வரப்போகிறாள். வந்தால் பால் கொடுக்கிறாள். நீ உன் வாயை அடைத்துக் கொண்டிரு" என்று பத்மாள் தன் பாட்டியை அதட்டிவிட்டு அவசர அவசரமாகக் காப்பி காய்ச்சி மடமடவென்று குடித்தாள். பால் பாத்திரத்திலுள்ள மிகுதியைப் பூனைக்குட்டி குடித்துவிட்டது. காப்பிப் பாத்திரங்களை அப்படியே எறிந்துவிட்டு ரிப்பன், பிரஷ், தைலபுட்டி, புஷ்பக் கூடை இவைகளை எடுத்துக்கொண்டு தெருக்கதவை மூடிவிட்டு தலைவாரிப் பின்னிக்கொள்ளும் பொருட்டு பத்மாள் பக்கத்து வீடு சென்றாள். நான் மரத்தடியில் ஒதுங்கி நின்றதையும் அவள் கவனிக்கவில்லை. வயது காலத்தில் தன்னை யாரும் லக்ஷியம் செய்வதில்லை என்றும், பெண் வீட்டில் சோறு தின்பதைக் காட்டிலும் தெருவில் பிச்சை யெடுக்கலாமென்றும், பெண்ணின் தாக்ஷிணியத்திற்காகப் பேத்தி வீட்டில் இருக்கவேண்டியிருக்கிறதென்றும், இந்தக் காலத்துப் பெண்கள் சிலருக்குக் குடும்பக் காரியத்திற்கு பதிலாக கூத்தாடித்தனமே இருக்கிறதென்றும், இதெல்லாம் இந்தக் காலத்துப் புருஷர் கொடுக்கும் இடந்தானென்றும், சிறு வயதுள்ள பெண் வீட்டில் அரை நாழிகையும் தங்காது அயல் வீட்டோடு கிடந்தால் ஊரார் என்ன நினைப்பார்களென்றும், ஓடுகாலி வீடு மறந்தாளென இது ஓடிவிடுகிறதென்றும், 'வாலிக்கு வாலி சினேகம், சூலிக்கு சூலி சினேகம்' என்றபடி இந்தப் பெண்ணுக்கு ஏற்றதுபோல இளங் குழந்தையை வீட்டில் விட்டுச்செல்லும் சினேகிதி ஒருத்தி ஏற்பட்டாள் என்றும் இவ்வாறெல்லாம் முணுமுணுத்துவிட்டு மீண்டும் முக்காடிட்டுப் படுத்துவிட்டாள்கிழவி. குழந்தை அழுதழுது களைத்து வாயை மூடிக்கொண்டது.

மணி மூன்று அடித்தது. ஆங்காங்கு சில ஜனங்கள் நடமாடவாரம்பித்ததால் சூரிய வெப்பம் தணிந்திருப்பதாக அறிந்து நான் எழுந்தேன். அச்சமயம் தெருவில் இவ்வீட்டிற்கெதிரில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதன சப்தம்கேட்டு பக்கத்து வீட்டிலிருந்த பத்மாள் தன் வீட்டிற்கு வந்தாள். வண்டியின்

நின்றும் நடுத்தர வயதுள்ள தம்பதிகள் இறங்கினார்கள். ஆடவன் எதிர் வீட்டிற்குச் சென்றான். பெண் பிள்ளை மட்டும் பத்மாவின் வீட்டிற்குள் நுழைந்தாள். வாயிலில் நின்றிருந்த பத்மா "என் சரோஜா இத்தனை நேரங் கழித்து வந்தாய்? மணி நாலு அடிக்கப் போகிறதே" என்றாள். "என்ன செய்யட்டு! ஓரிடத்திற்குப் போனால் எளிதில் வரமுடிகிறதா. சுலோசனாவை உனக்குத் தெரியாதா. கூடை கூடையாக ரோஜா மல்லிகை இவைகளை வாங்கி வைத்துக்கொண்டு எல்லோரையும் பின்னிக்கொள்ளச் செய்தாள். அங்கு வந்திருந்த தம்பதிகளெல்லாம் சங்கீதப் பிரியர்கள் ஆனதினாலே பாமாவும் ரோஜாவும் வீணை வாசித்தார்கள். பொழுதுபோனதே தெரியவில்லை. இதற்குள் மணி இரண்டடித்து விட்டது. சுலோசனாவும் அவள் புருஷனும் காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டுமென்று பிடிவாதம் செய்தார்கள். என்னவோ! அவர்களைப்போல் சினேகப்பிரியர்களைக் கண்டதே இல்லை. காப்பி சாப்பிட்டுவிட்டு அவர்களிடம் உத்திரவுபெற்று வர இத்தனை நேரமாயிற்று. அது கிடக்கட்டும். குழந்தை ரொம்ப அழுததோ?" என சரோஜா வினவினாள்.

"நன்றாயிருக்கு. அழவுமில்லை ஒன்றுமில்லை. என்ன இருந்தாலும் இவ்வளவு சாதுவான குழந்தை வேறு இராது. நீ கொடுத்துவிட்டுப் போன பாலைப் புகட்டிப் படுக்க வைத்தேன். இதுவரை கப் சிப் என்று கூடச் சொல்லவில்லை. தூக்கம்விட்டு இன்னம் எழுந்ததோ இல்லையோ. வா பார்ப்போம்" என்று பத்மா சரோஜாவை உள்ளழைத்துச் சென்றாள். கூடத்திலிருந்த கிழவி இவ்விருவர்களும் இன்னமும் வீண் பேச்சுப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டுசகியாதவளாக "போடியம்மா! முந்தி குழந்தையை எடுத்துப் பால் கொடு. அழுது அழுது தொண்டைவரண்டு கிடக்குமே. அப்புறம் அவாள் வீட்டுக் காப்பியின் ருசியைப் பற்றியும் அதற்காக அவர்கள் செய்த உபசாரத்தைப் பற்றியும் பேசலாம் போ. குழந்தையைப் பாரு" என்று அதட்டினாள். சரோஜா தன் பேச்சை நிறுத்திக்கொண்டு அறைக்குள் சென்று குழந்தையைத் தூக்கி எடுத்தாள். அது ஜில்லென்றும் கற்பாறைபோல் பளுவாகவுமிருந்தது. குழந்தையைத் தூக்கமாட்டாது தூக்கி எடுத்துக்கொண்டு கிழவியிடம் காட்டினாள். "அடடா! குழந்தைக்குப்பிராணன்போய் விட்டதே. குழந்தையைப் பட்டினிபோட்டுக் கொன்று விட்டாயே" என்று கிழவி கூச்சலிட்டாள். இச்சந்தடியில் சரோஜாவின் புருஷனும் அங்கு வந்து சேர்ந்தார். வைத்தியரை வரவழைத்துக் காட்டினார்கள். நெடுநேரமாக ஆகாரமின்மையாலும் அழுததாலும் குழந்தை இறந்துபோய் ஒரு மணி நேரமாயிற்றென்று டாக்டர் சொல்லிவிட்டுச்சென்றார். "ஆகா! காப்பியின் மகிமைதான் என்ன? இக்குழந்தைக்கு ஏற்பட்ட மரணமே காப்பியின் மகிமையாலேயே அன்றோ. இது வன்றோ காப்பிக்கு ஏற்பட்டுள்ள மகிமையாகும்" என்று சிந்தித்தவண்ணம் நான் என் காரியத்தின் நிமித்தம் என் வழியைப் பிடித்து நடந்தேன். "காப்பியின் மகிமை களைத் தோங்குக."

"School Folk."

சுபம்!

நவராத்திரி.

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்.)

குழந்தை ருக்மிணி தன் தோழிமாராகிய அடுத்தகத்து ஜானகி, கமலம் இவர்களுடன் உடைந்த பிங்கான் பொம்மை, மரப்பாச்சிகள், சிறிய கற்கள் இவைகளை வைத்துக்கொண்டு ஒன்றொன்றாய் நிறுத்தி வைப்பதும் எடுப்பதுமாய் உற்சாகத்துடன் விளையாடிக்கொண்டிருந்தாள். மயிலாபூர் கிழண்டை மாட வீதியில் ஹைகோர்ட் வக்கீல் கோபால ஐயர் கச்சேரியிலிருந்து வீடுவந்து உடைகளை மாற்றிவிட்டுக் குழந்தை விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து நின்றிருந்தார். வெகுநாட்கள் கழித்து இந்தப்பெண் குழந்தை ஒன்றுதான் பிறந்திருந்தது. மனைவி பொன்னம்மாள் எஜமானருக்குப் பலகாரமும் குளிர்ந்த ஜலமும் கொண்டு வந்து கூடத்தில் மஞ்சற் பலகையின் மீது வைத்து அவரை அழைத்ததும் அவரும் காலை போஜனத்திற்குப் பிறகு ஒன்றும் அருந்தாமையால் பரபரப்புடன் புசிக்க வாரம்பித்தார். அவர் பசி பாதி தணியும்வரையில் மௌனமாயிருந்து பிறகு பொன்னம்மாள் பேச வாரம்பித்தாள்.

பொன்னம்மாள்:—"காலமே ரொம்ப அவசரமாய்ச் சாப்பிட்டுப் போனீர்களே! இருந்து சாப்பிட வில்லையே. பண்ணியிருந்த கறி வகைகள் எல்லாம் அப்படியே இலையில் எறிந்து கிடந்தன. ஆகையால் இப்பொழுது நல்ல பசியாய் இருக்கும். தோசை உங்களுக்குப் பிடிக்குமே என்று வார்த்து வைத்திருந்தேன். அடுப்பில் ஜலம் பொங்குகிறது. பால்காரன் வந்ததும் காப்பி தயார் செய்து தருகிறேன். அது அருந்திய பிறகு கிளப்புக்குப் போகலாமே" என்றாள். ஏனெனில் வழக்கம்போல் பலகாரம் சாப்பிட்டதும் கிளப்புக்குச்சென்று விடுவாரோ என்று எண்ணி காப்பிக்காகக் காத்திருப்பதிற்குள் தான் பேசவேண்டியவைகளைப்பேசிவிடலாம் என்ற எண்ணத்தினால் பொன்னம்மாள் இன்று காப்பிக்கு ஏற்பாடு செய்திருந்தாள். கோபாலய்யரும் காப்பி சாப்பிட்டால் களைப்புக் கொஞ்சம் தெளியும் என்று ஊஞ்சலை மெள்ள ஆட்டிக்கொண்டு உட்கார்ந்தார்.

கோபாலய்யர் :—காலையில் ஸீனியர் வக்கீல் வீடுபோய் வருவதற்குள் மணி பத்தாகிவிட்டது. முதல் கேஸானபடியால் ஒன்றும் சாப்பிட முடியவில்லை. எப்பொழுதும் ஸீனியர் வீடு போவதானால் நம்முடைய காரியங்கள் கெட்டு விடுகின்றன. ஒரு தடவையில் ஆகும் காரியத்திற்கு நான்கு தடவை போய் அலையவேண்டி யிருக்கிறது.

பொன்:—ஸீனியர் என்ன? நீங்களே பேசமாட்டீர்களா? நீங்கள்தானே எல்லாம் படித்து அவர்களுக்குச் சொல்லுகிறீர்கள்?

கோபா:—அது நீயும் நானும் சொன்னால் எப்படி. கக்ஷிக்காரனன்றோ தீர்மானிக்கவேண்டும். அவர்களுக்கு நாம் எப்படி உழைத்தாலும் பெரிய வக்கீலிடம்தான் பிரமை. நாம்

உடம்பு அசௌக்கியமானால் தடவை ஒன்றுக்கு இருபது ரூபாய் வீதம் கொடுத்து மேல் நாட்டு வைத்தியரை அழைத்துப் பார்த்தால் பிழைத்து விடுவோம் என்று எண்ணுவது போல !

பொன்:—அது எப்படியோ போகட்டும் வருகிற வியாழக்கிழமை நவராத்திரி ஆரம்பம்.

கோபா:—நாளது வியாழக்கிழமையா? இன்னும் ஒரு மாதம் இருக்கு என்றல்லவோ எண்ணினேன்.

பொன்:—பாருங்கள். உங்களுக்கு இப்பொழுது நடப்பது புரட்டாசி மாதம், நாளை அமாவாசை ஆனதும் நவராத்திரி என்றுகூட ஞாபகமில்லை. இந்தத் தடவையெப்படியிருந்தாலும் நவராத்திரி பூஜை செய்யவேண்டும். இந்த ஒன்பது நாளும் பூஜை செய்தால் எவ்வளவோ புண்ணியம் என்று சொல்லுகிறார்கள். நானும் நாலைந்து வருஷமாய் சொல்லிக்கொண்டு வருகிறேன். நீங்களும் இடம் கொடாமல் இருந்து வருகிறீர்கள். இந்தத் தடவை என்னசொன்னாலும் கேட்க மாட்டேன்.' சுப்பு சாஸ்திரிகள் நன்றாய் படித்தவர். பூஜாக்கிரமமெல்லாம் அவருக்கு சரியாய்த் தெரியும். லலிதா ஸகஸ்ர நாமம் அவருக்கு மனப்பாடமாய்த் தெரியும். அவரைக்கொண்டு பூஜை செய்யச்சொல்லப்போகிறேன். இச்சுபகாரியத்தைவேண்டாமென்று தடுக்கவேண்டாம்.

கோபா:—(புன்னகையுடன்) சாஸ்திரியார் தற்காலம் வரும்படிக்காகப் பூஜை ஏற்பாடு செய்து விட்டாரா ?

பொன்:—(சிறிது கோபமாய்) அவரை ஒன்றும் பழிக்கவேண்டாம். ஜட்ஜி கணேசய்யர் வீட்டில் அவரைக்கூப்பிடுகிறார்களாம். வேதபாராயணத்துடன் பிரமாதமாக தேவி பூஜை நடத்தப்போகிறார்களாம். தினம்பிராமணர்களுக்கு சாப்பாடும் முடிவில் ஒவ்வொருவருக்கும் ஒரு பவுன் தக்ஷிணையுமாம். அவர் என்னவோ என் பிறந்தகத்தில் நவராத்திரி நடக்கும்போது பூஜைசெய்தவரானபடியால் அந்த விச்வாஸம் கொண்டு வருவதாய்ச் சொன்னாரே ஒழிய வேறொன்றுமில்லை.

கோபா:—நான் ஆக்ஷேபம்செய்வதாய்க் கோபங் கொள்ளாதே. எங்காத்தில் ஆடம்பரமான பூஜைகள் வழக்கம் கிடையாது. என்தகப்பனார் தானே பூஜை செய்து இராமாயணம் பாராயணம் செய்வார். புதிய வழக்கம் இப்பொழுது என்னத்திற்கு. நீ வேண்டுமானால் இராமாயணம் வாசி உனக்குத்தான் உன் கப்பா நல்ல வித்தைகள் கற்பித்து வைத்திருக்கிறார். அந்தரங்கமாய் உள்ளன்போடு செய்யும் பூஜையைவிட இவர்கள் ஆடம்பர பூஜை ஒன்றும் பயனில்லை. எல்லாரும் செய்கிறார்கள், நாமும் செய்யாவிட்டால் அகௌரவம் என்றுதானே கவலை கொள்கிறாய். அவர்களெல்லாம் தெரியாதவர்கள். தெரிந்தும் நாம் ஏன் அவர்களைப் பின்பற்ற வேண்டும் ?

பொன்:—(மிகுந்த கோபத்துடன்) எங்காத்தில் வழக்கமில்லை என்ற இதே வார்த்தைதான் எப்பொழுதும் கூறுகிறீர்கள். உங்காத்தில் இல்லாவிட்டால் எங்காத்து வழக்கமாய்த்தான் இருக்கட்டுமே. எங்களம்மாள் எவ்வளவோ சிரத்தையுடன் நவராத்திரிக்கு ஒரு மாதம் முன்பே பண்டங்கள் தயார் செய்து மடியுடன் பெரிது பெரிதாய் அப்பளங்களும் தயாரித்து வைப்பாள். பத்து நாளும் வீடு கலியாணம்பட்ட பாடுதான் படும். நவராத்திரி மத்தியில் ஆத்தில் ஒன்றும் இடிக்கப் புடைக்கக் கூடாதென்று அரிசி, பருப்பு இன்னும் தேவையான மாவுகளை முன்பே தயாரித்து விடுவாள். இரண்டு வேளை பூஜையும் பிராமண போஜனமும் பார்த்தால் பாபம் தலையும். அப்படிக்கெல்லாம் செய்ய வேண்டுமென்கிறேனா ? ஏதோ குருவிக்குத் தகுந்த இராமேச்வரம் என பூஜையும் வடைபாயஸ நிவேதனமும் செய்யலாமென்று ஆசை. நானென்ன சிலரைப்போல் வைர அட்டிகைவேணும், வைர வளையல்கள் வேணும் என்று கேட்கிறேனா ? மோட்டார் வண்டி வாங்கச் சொல்லுகிறேனா ? ஏதோ தெய்வகாரியம், குடும்பத்துக்கு க்ஷேமம், போர வழிக்கு உண்டு என்றுதானே கேட்கிறேன். இதற்கு இவ்வளவு ஆக்ஷேபம் செய்கிறீர்கள். நமக்கிருப்பதெல்லாம் ஒருகுழந்தை. உடைந்த பொம்மைகள் வைத்துக்கொண்டு விளையாடுகிறது. நல்லதாய்க் கொஞ்சம் பொம்மைகள் வாங்கிக் கொலு ஒன்று வைத்தால் சந்தோஷமாய்க் குழந்தை அழைத்து விட்டு வருவாள். புண்ணிய காலத்தில் சுமங்கலிகளுக்கு மஞ்சள் குங்குமம் கொடுத்தால் ஐச்வரிய விருத்தி. உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. வழக்கமில்லை என்றீர்களே. தலைமை கிராப் செய்து கொள்வதும், கால் சட்டை, மேஜோடு, அணிவதும் உங்காத்து வழக்கமா ? உங்கப்பா செய்தாரா ? நல்ல காரியங்களுக்கு வழக்கமென்பதுண்டோ ? இனிமேல் தான் வழக்கமாகட்டுமே. உங்கள் முன்னோர்களெல்லாம் வழக்கமாய் காப்பி சாப்பிட்டு வந்தார்களா ? நமக்குக் காப்பி இல்லாமல் ஒரு நேரம் முடியவில்லையே.

கோ:—(குலுங்க நகைத்து) இதற்காக இப்பொழுது காப்பி போடாமல் நிறுத்தி விடாதே. அம்மன் கொலுவிலிருக்கும்போது வீட்டில் இடிக்கப் புடைக்கக் கூடாதென்றாயே. அது எதற்காக வென்று தெரியுமா? மஹிஷாசுரனை வதம் செய்ய தேவியானவள் சர்வேச்வரனைக்குறித்து தபஸ் செய்யும்போது எங்கும் சாந்தமாயும் காயானுகூலமான நற்காரியங்களும் செய்யவேண்டும் என்பதேயாம். ஆகையால் கணவனைக்கோபிப்பதும், இரைந்து பேசுவதும் கூட தப்பிதமே. மன அமைதியுடன் தேவியை ஆராதிக்கவேண்டும்.

பொ:—எவ்வளவோ ஆவலாய் நான் கூறியும் நீங்கள் ஒன்றையும் மனதில் வாங்காமல் விளையாட்டாகவே பேசுகிறீர்கள். குடும்பஸ்திரீக்கு குடும்ப சம்ரக்ஷணையும் தெய்வ ஆராதனையும், பெரியோர்களைப் பேணுவதுந்தான் முக்கியமாய்க் கூறியிருக்கிறது. எப்போதாயினும் உங்கள் மனதிற்கு விரோதமாய்ப் பேசி இருக்கிறேனா ? இது ஒன்றுமட்டும் நிறைவேற்றி விடுங்கள். உங்களுக்கும் க்ஷேமமான காரியந்தானே இது. வீட்டை மனதிற்கும்கண்களுக்கும் ரம்மியமாய் அலங்கரித்துத் தீபங்கள் ஏற்றி வைப்பதும் எங்கும் ஊதுவர்த்தி, பன்னீர், நறுமலர்களின் நறுமணம் வீசுவதும் மனதிற்கும், தேகத்திற்கும் ஆரோக்கியமே. எல்லாவற்றையும் உத்தேசித்துதான் பூஜை என்று நம்மவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் நிமித்தம் வீட்டை சுத்திசெய்து அழகிய கோலமிட்டு மங்களமான தீபங்கள் ஏற்றி உள்ளும் புறமும் சுத்தியாகும் என்றுதான். இதுதான் மேல் நாட்டாருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம். அவர்கள் ஒவ்வொரு காரியமும் சுயநலத்தின் பொருட்டே செய்து கொள்கிறார்கள். தங்களை அலங்கரித்துக் கொள்வதும், தங்கள் சந்தோஷத்தையே முதன்மையாய்க்கொண்டு ஒவ்வொன்றையும் செய்கிறார்கள். நாமோவெனில் அழகிய ஆடை ஆபரணங்கள் பூணுவது கணவனைத்

திருப்தி செய்வதற்காகவும், யாவரும் க்ஷேமமாயும் இகம்-பரம் இரண்டிற்கும் சாதகமாயும் இவ்வொன்றையுஞ் செய்கிறோம். தினமும் சுத்தமாய் ஸ்நாநம் செய்து தினந்தோறும் வஸ்திரங்களைத் தோய்த்து உலர்த்தி உடுத்திக்கொண்டு சிறிது நேரமாயினும் பல விடங்களில் மனதை அலைய விடாமல் நிறுத்தித் தெய்வத்தை ஆராதிக்க விரும்புகிறோம். இது தேகசௌக்கியத்திற்குப் போகிற வழிக்கும் சாதகமாகிறது. பெரியவர்கள் வீட்டில் பூஜை, தெய்வம் என்று ஆராதித்தால்தான் குழந்தைகளுக்கு அது வழக்கமாகி தெய்வ பக்தியும், சிரத்தையும் உண்டாகிறது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று கேட்டதில்லையா?

கோ:—ஆமாம்! உங்கம்மாள் செய்தாள் என்று தானே நீயும் நவராத்திரி கொண்டாடவேண்டுமென்கிறாய். அது நல்ல வழக்கந்தான். உன் பெண்ணும் அவள் கணவனிடம் நவராத்திரி கொண்டாடவேண்டுமென விரும்புவாள். ஏதோ உடைந்த பொம்மைகளைக்கொண்டு அவள் சந்தோஷமாய் விளையாடிக் கொண்டிருக்கிறாள். தெளிவான மனதைக்கலக்கி நம்மைப் போல் பேராசைபிடித்து எதிலும் மனவமைதியுறாமல் இருக்க நாம் இப்பொழுதே வழி தேடுகிறோம். இவைகள் நன்றாயில்லை. விலையுயர்ந்த பொம்மை எதிர் வீட்டிலுள்ளது போலும் அடுத்தகத்து கமலத்தைவிட உயர்வாயும் கொலுவைக்கவேண்டுமென்ற பேராசையை உண்டு பண்ணி விடுகிறோம். பொறாமையும், போட்டியும் விளைக்கத்தொடங்குகிறது. (இச்சமயத்தில் குழந்தை ருக்மிணி உடைந்த பொம்மைகளை எறிந்துவிட்டு ஓடி வருகிறாள். 'அப்பா! அப்பா!! அப்பா!!! எனக்கு இந்தப் பழயபொம்மைகள் வேண்டாம். புது பொம்மை நிறைய வாங்கிக்கொடு. அம்மா உன்னை கேக்கசொன்னா. உம், உம். ஏந்திரு. எனக்குக் கொலுவைக்கவேணும். ஜானகி அப்பா அவளுக்குப் பேசா பொம்மை வாங்கித்தரப் போரா! வா, வா," என்று கையைப் பிடித்திழுத்தாள். கோபாலய்யர் பெண்ணைத் தூக்கி மடியில் வைத்து முத்தமிட்டு, "ஏனம்மா! பழய பொம்மை வேண்டாமா? உனக்கு எல்லாம் புதிதாகத் தானே வேணும். புது அம்மா வேண்டாமா? பழய அம்மா வேண்டாமே" என குழந்தை 'இல்லே, இல்லே, அம்மா தான் வேண்டும். புதிசு வேண்டா' மென்று மடியை விட்டிறங்கி அம்மாவைக் கட்டிக்கொண்டது. இருவரும் நகைத்தார்கள். ஐயரும் இனி தமது காரியம் பலிக்காதென்று கண்டு நவராத்திரி பூஜைக்கும், கொலுவிற்கும் அநுமதிதந்து மறுநாள் நல்ல பொம்மைகள் வாங்கி வருவதாய்ச் சொல்ல, இச்சங்கதியை ஜானகிக்குச் சொல்ல குழந்தை வாசலுக்கு ஓடி விட்டது.

பால்காரன் பால் கறந்து வர, பொன்னம்மாள் கம் என்று வாசனையுடன் காப்பி தயாரித்துக் கணவனுக்குக் கொடுத்தாள். கோபாலய்யர் கிளப்புக்குப் புறப்பட்டு சென்றார்.

நவராத்திரி பூஜையும், கொலுவும் விமரிசையாய் நடந்தேறியது. சுப்பு சாஸ்திரிகளுக்கு இரண்டு வீராகனில் பட்டுக்கரை சோமனும் பத்து ரூபாயும் விஜயதசமி அன்று போளி, ஆமவடை சாப்பாட்டுடன் கொடுக்கப்பட்டது. அவரும் 'அம்மாளைப்போல் நீயும் நல்ல மனதுடன் தெய்வ காரியத்தில் சிரத்தையுடன் இருக்கிறாய். சீக்கிரம் கற்பகத்தின் கிருபையில் ஆண் குழந்தை ஒன்று வம்ச விருத்திக்கு உண்டாக வேண்டும்' என்று ஆசீர்வதித்து ஜட்ஜ் வீட்டிற்கு மேல் வரும்படி தனக்கு கிடைத்து விட்டதென்று உள்ளங்களித்து வீடுபோய்ச் சேர்ந்தார்.

பெண் பாலர்.

(ஸ்ரீமான் டி. ஆர். ராஜகோபாலன்)

"கணவனுக்கினியளாய் மிருதுபாஷியாய் மிக்க கமலநிகர் ரூபவதியாய்க்
காய்சின மிலாளுமாய் நோய் பழியில்லாததோர் கால்வழியில் வந்தவளுமாய்
பணமிக்க நாணமடமச்சம் பயிர்ப்பென்ன வருமினிய மார்க்கவதியாய்
மாமிமார்க்கிதஞ் செய்பவளுமாய் வாசல் வரும் விருந்தோம்புபவளாய்
இணையின் மகிழ் நன்சொல்வழி நிற்பவளுமாய் வந்தியென் பெயரிலாதவளுமாய்
அணியிழை பொருந்தி யுண்டாயினவள் கற்புடையளாம்......'

"பெண் மக்கள் எந்நிலைமையிலிருக்கிறார்களோ அந்நிலைமையிலேயே தேசமும் இருக்கும்."

"எத்தேசத்தில் பெண் பாலர் வியாபாரப் பண்டங்கள்போலும், அடிமைகளாகவும், ஆண் பாலரின் பாசங்களைத் தணிப்பதற்கான பிராணி அல்லது கருவிகளெனவும் கருதப்பட்டு, அவர்களுக்கு இயல்பான உரிமையும், சிறப்பும், மரியாதையும் மறுத்து, அடக்கி, இகழப்பட்டு வருகின்றனரோ, அத்தேசம் அதிசீக்கிரத்தில் க்ஷீணித்துப்போம்."

"ஒவ்வொருவரும் அவரவர்க்கான கடமைகளை யறிந்து செய்வதினின்றே சுதந்தரம், சமத்வம், சகோதரத்வம் என்பன உண்டாகி, உயர வளர்ந்து, செழிப்புடன் பரவுவன. உரிமை, கடமை, இவைகளிரண்டுக்கும் இடைவிடாது நிகழும் கொடும்போரின் விவரம், பலன்களின் திரட்சியே, வாழ்க்கை நாடகமென்பது. அவ்விரண்டும் வஸ்துவும் சாயையும்போல் ஒன்றையொன்று பற்றித் தொடர்வன."

"மிதமீறிய தற்பொழிவினின்றுண்டாவது உரிமை. இவ்வுரிமை மாந்தர்க்குள் பகையைப் பெருக்கி, பேதங்களை விருத்தித்து, ஒற்றுமையை யழிப்பதாகும். கடமை என்பதோ மானிடராசியின் உயர்வையும், ஒற்றுமையையும் பிரஸ்தாபிப்பது. உரிமைக்குத் துணையுந் தூண்டுகோலுமாவது முரட்டுப்பலம் ஒன்றே. கடமைக்கு ஆதாரமும் பக்கபலமுமானவை மனோவன்மையுந் தெளிவும், நெஞ்சக்கனிவுமாம்; ஒற்றுமை, இணக்கம், ஒத்துழைப்புக்குக் காரணம் கடமையைப் பற்றிய அறிவே; அதாவது ஒவ்வொருவரும் அவரவர் கடமையை யுணர்ந்து கடைப்பிடித்து ஒழுகுதலினால், நீ நான், மேல் கீழ், பெருமை சிறுமை என்ற வரம்புகள் சிறுகிக் குறுகி மழுங்கி மறையும். உரிமையின் குணாதிசயம் தாநலம் பாராட்டலேயாம்; கடமையின் போக்கும், லக்ஷியமும் யாதெனில் நிஷ்காமப்பணியும், ஆத்மசுகப் பரித்தியாகமுமாம். புலனிச்சைகளால் வளர்க்கப்பட்டு, செருக்கு, ஆத்திரங்களால் பெருத்துத் தடித்து, வில், வாள், துப்பாக்கி, பீரங்கி, கோட்டை கொத்தளங்களால் காக்கப்பட்டு, சுயசுகபோகங்களிலேயே யுழன்று தத்தளிப்பது உரிமையின் குணாதிசயம். கடமையோவெனில், தீர்ந்து, தெளிந்த மனத்தினின்றும், கனிந்த உள்ளத்தினின்றும் உற்பத்தியாகி, அன்பு, தயாளத்துவம், சீர்மை, இணக்கம், தியாகம் என்பவைகளால் போஷிக்கப்பட்டு மேலோங்கி வளர்ந்து, நாலாபக்கங்களிலும் வியாபிக்குங் குணமுடைத்தாம்."

"கடமையறிவு கிழடைந்து, உரிமையைப் பற்றி விபரீதக் கொள்கை மேம்படவே, குழப்பமும் கலகமும் அதிகரிக்கும்." பல நூற்றாண்டுகளாகத் தம் உரிமையை இழந்து அவதிப்

பட்ட பெண் மக்கள் இப்பொழுது தலைக் கிளம்பி, உலகமெங்கும் கலகமெழுப்பி வருதல் நியாயமேயானாலும், புதிய சாதனம் பெற்றவர் அல்லது பெற முயற்சிப்பவர்கள், பற்பலப் பிரேமைகளுக்குட்பட்டுச் சித்தங்கலங்கி, ஒழுங்கு தவறி அல்லற்படுதல்போல், பெண் பாலர் தற்கால பொருளும் பொருத்தமுமற்ற லோகாயுத லக்ஷியங்களால் கவரப்பட்டுச் சுய மேன்மையையும், இனிமையையும், கடமைகளையும் கைவிட்டுச் சீர்கெடலாலும், இது இயற்கைக்கு முரணுதலாலும் வியாசம் எழுதலானோம்.

பெண்களே! பெண்மையாகிய வானத்தில் நிகரற்றுப் பிரகாசிக்கும் அகலிகை, தமயந்தி, கண்ணகி, மணிமேகலை, சந்திரமதி, மண்டோதரி, சீதை, சகுந்தலை, சாவித்திரி, அந்திகான், ஆல்செஸ்திஸ், பெனெலோப் முதலான மாது சிரோமணிகள் உதித்து வளர்ந்த இவ்வுலகில் அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு என்பவைகளை இயன்றவரையிலும் ஒழித்து, அல்லது அடக்கி வருதல் ஸ்திரீ தர்மமல்லவென்பதை அறிமின்! ரோஜா மலர்ந்த இடத்தில் எருக்கம் பூ பெருகுவதும்; அடக்கவொடுக்கங்களிருக்க வேண்டிய இடத்தில் டாம்பீகமும் துணிவும்; அன்பும் இனிமையும் கூடிக்கலந்து வளரவேண்டிய இல்லத்தில் அசிரத்தையும் கடுகடுப்பும் முணுமுணுப்பும் கிளம்பிப் பெருகுவதும்; பகுத்தறிவும் நல்லொழுக்கமும் வெளியாகவேண்டிய வூற்றினின்று போலிக்கல்வி மமதையும் மிதமீறிய நடையும் பகட்டும் நிலவுதலும்; விசுவாசத்திற்குப் பதிலாகத் துரோகம் பிரபலமாவதும் பரிதபிக்கத் தக்க விஷயங்களன்றோ! கிரகத்தில் தீபம்போல் ஒளிக்கவேண்டிய தாய் இடுகாட்டுப் பிடாரியாக மாறுதல் வியப்பன்றோ?

உயிர் நூல், உளநூற்களை யொட்டியவரையிலும் ஆண், பெண்களுக்குள் அதிக வித்தியாசமில்லை; பெண்ணிடம் ஆண்மையும், ஆணிடம் பெண்மையும் உள; ஆண் பாலரிடமுள்ள சக்திகளிற் பெரும் பான்மையும் பெண்களிடமுமுள; அதாவது, புலன்களின் போக்கு, உணர்ச்சி, மனப் பயிற்சி, விவேகம், ஞானம் முதலானவைகளை யொட்டியவரையிலும் யாதொரு பேதமுமில்லை. இக்கொள்கைகளையுடைத்தாய், மயித்திரேயி, ஔவை, பாரதி, ஜோன் ஆப் ஆர்க், மேரியா தெரேஸா, அகல்யா பாய் முதலானவர்களை உதாரிப்பார் ஓர் சாரார்.

“ ....
நோய்கொண்டாலுங் கொளலா நாறுவயதன
விருத்த
பேய்கொண்டாலுங் கொளலாம் பெண்கொள
லாகாதே;’

“ தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையால் வருங்
காமமில்லை யெனிற் கருங்கேடனு
நாமமில்லை நரகமுமில்லையே ”

எனப் பெண் பாலரைத் தூஷிப்பாருமுளர். முன்னதிலுள்ள சில மெய் விஷயங்களையும், பின்னதில் பூரித்து நிற்கும் பொய்மையையும் இவ்விடத்தில் விரிக்கின் இவ்வியாசம் பெருகும். இன்னமும், ஆதிகால முதல், பெண் நிலைமைக்குண்டான மாறுதல்களையும், அவர்கள் ஒரு சமயத்தில், கடவுளின் சிலாவிக்கிரகம் போல் ஆண் மக்களால் சிலாகித்துத் தொழப்பட்டதையும், வேறு சமயங்களில் மண் கட்டிகளுக்குங் கீழாகப் பாவிக்கப்பட்டு, உதைத்து மிதித்துத் தள்ளப்பட்டதையும் விஸ்தரிக்கும் சரித்திர விஷயங்களையும், அநுராகம், மணம், இல்வாழ்க்கையில் உண்டாகும் கொடூரங்களின் காரணம் முதலானவைகளையும் வேறு சமயத்தில் வெளியிடுவோம். இவ்விருபாலரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவரானாலும், அதாவது, மன இருதயங்களின் அமைப்பு, போக்கு, ஈச்வர ஞானம் முதலானவைகளைப் பொருத்த

வரையிலும் அவர்கள் சமமுள்ளவர் போலத் தோன்றினும், உடலமைப்பிலும், அம்மன இருதயங்களினின்று, அகோசரமாய் வெளிப்படும் குணவொழுக்கங்களிலும் அவ்விருபாலருக்குள் மிக்க தெளிவான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஆனால், அப்பேதங்கள் பரஸ்பர அன்பு, இணக்கம், இன்பமாகியவைகளை அபிவிருத்தி செய்யக் கூடிய சக்தி பொருந்தியனவேயல்லாது விரோதத்தையும், பிரிவையும் விளைவிப்பதல்ல. வாழ்க்கை நாடகத்தை அவ்விருவரும் ஒவ்வோர் விதத்திலும், இறுதியில ஐக்கியமும் ஆனந்தமுமே உண்டாகும்படிக்கு ஆடி வருகிறார்கள். இவ்விஷயங்களையே நன்கு எழுதி இச்சிறு கட்டுரையை முடிப்போம்.

ராஜ்யத்தின் சிறப்பு குடும்பத்தினின்றும், குடும்பத்தின் மேன்மை பெற்றோர்களிடமிருந்தும், இவர்களுள் சீர்மை என்பது தாயிடமிருந்துமே உண்டாகி எங்கும் வூடுருவிப்பாய்ந்து அங்கம் எதானாலும் அவ்வதற்காக முறை, ஒழுங்கு, ஒழுக்கம், லக்ஷியம் என்பனவாதிகளை மீறி நடப்பின், காலாவிர்த்தியில் அவைகள் சிதைந்துபோம். இன்னமும், ஒருவர்க்கான ஆதர்சம், நெறி, அறமாகியவைகளை விடுத்து, பரதர்மங்களையும் அந்நிய நெறிகளையும் கைக்கொண்டு உஜ்ஜீவிக்கக் கருதுபவர்கள் சுய வன்மையையும், உயர்வையும் இழந்து, தொத்துப் பிராணிகளுக்குங் கீழாவார்கள்.

ஆண் பெண்களுள் எவர் மிக்க மேலானவர் எனவுசாவுதல் ரோஜா, மல்லிகை, கடல், ஆறு, மலை, வனம், சிங்கம், மான், தாமரை, அல்லி, ஆதித்தன், திங்கள் முதலானவைகளுக்குள் எது அதி சிறப்புடைத்து எனக் கேட்பதை ஒத்துளது. இவ்வுதாரணங்களொவ்வொன்றும் ஏனையவைகளுக்குக் காரணமாகவும், சார்பாகவும், உபயோகமுற்றதாகவுமுள. அன்னையை விடப் பிதா மிகவும் பிரதானமா? சகோதரனை விடச் சகோதரி பெரும் புகழ்ச்சிக்குரியவளா? என வினவிக்கொண்டிருப்பதில் பயனென்? ஆணும் பெண்ணுமில்லாது குடும்பமும், சங்கமும், ராஜ்யமுமில்லை. இவர்களுள் ஒருவரிடமில்லாத அரிய பெரிய குணாதிசயங்கள் மற்றவரிடமிருக்கின்றன. மனிதன் செயற்கையாளன்; உலகாதிகளின் தாரதம்யங்களை ஆராய்ந்து, பரீக்ஷித்துத் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தறிபவன்; பாதுகாத்து ரக்ஷித்தற்கான சக்தி பொருந்தியவன்; உண்டு பண்ணுதற்கும், ஆழ விசாரித்தறிதற்குமான புத்தி வளப்பமும், மன வலிமையும் நிரம்பியவன்; நன்மை பயப்பவைகளைச் சோதித்துப் பார்த்துப் பரப்புவதற்கும், தர்மஸ்தாபனத்திற்குமான மார்க்கங்களை ஆய்ந்தோய்ந்து அறிந்து, இடையில் தோன்றும் தடைகளையும் இடுக்கண்களையும் எதிர்த்து அடக்குவதற்குமான மூளையும் தேகபுஷ்டியும் உடையவன். பெண்ணோ பொருள், விஷயங்களின் தாரதம்மியங்களைத் தன் சுயவறிவு, அல்லது மதியூகத்தினால் கிரகித்து, மனிதன் செய்யும் பிரமமாண்ட காரியங்களில், ஆங்காங்கு அவ்வப்போது காணப்படும் குற்றங் குறைகளை எடுத்துக் கூறி, ஒழுங்கு படுத்தி, இல்லத்திலும், வெளியிலும் சமாதானம், இனிமை, சீர், ஆனந்தம் என்பனவாதிகளை அபிவிருத்தித்து நிரப்புவதற்கும், நன்மை, நேர்த்தி, மேன்மை, நேர்மையானவைகளைக் கண்ணுற்ற மாத்திரத்தில் புகழ்ந்து, அவைகளினிமித்தம் உழைப்பவர்களைத் தைரியப்படுத்தி, எழுப்பி, மேற்செல்லத் தூண்டுதற்கும் வேண்டிய குணம் மிக்கவள். பொறுமையும், அன்பும், தயாளத்துவமும், ஆத்மார்ப்பணமுமே அவர்களுடைய ஆதாரமாகவும், சிரோபூஷணங்களாகவும் விளங்குவன. இவ்விரு திறக் குணாதிசயங்களின் இணக்கமே இன்பத்தின் விளைநிலமாகவும், பரோபகாரத்தின் ஆணிவேராகவும், இல்லறத்தின்

அஸ்திவாரமாகவும், முக்தியின் விதையாகவும் உள்ளது.

சோம்பல், தரித்திரம், அவிவேகம், காமக் குரோதங்களின் நிரக்ஷியான காரிருளை நீக்கும் ஒளியே கற்பு என்பது. தேகவசக்தத்தையும், மனச் சோர்வையும் அப்புறப்படுத்தி, பலம், ஆரோக்கியம், வீரியம், இன்பம் என்பவைகளைப் பரப்புவது விநயமே. பரஸ்பர அன்பு அல்லது விசுவாசம் என்பது வன்சொல், இகழ்ச்சி, பொறுமை, வருத்தம், ஏக்கம், பிணி, வறுமையாகியவைகளை நசிப்பிப்பதாகும். பேரலைகளாலும் சண்டமாருதத்தினாலும் தாக்கப்பட்டுக் கலங்கும் மரக்கலத்திற்கு எவ்வாறு தீபஸ்தம்பம் உதவுகின்றதோ, அவ்வாறே, வெளியில் ஆசாபாசங்களாலும், அவலக்கவலைகளாலும், ஐயம் தோல்வி துவேஷம் பழிச்சொற்களாலும் பாதிக்கப்பட்டு அலப்புறும் மனிதனுக்கு உதவுபவள் பெண்ணே. க்ஷேமம், அமைதி, நம்பிக்கையாகியவைகளை யளிக்கும் அரண்களுக்கும் மேலாக விளங்குபவள் பெண்ணன்றோ? தூஷணையாகிய விஷ அம்பைக் கற்பினால் தகித்து, புண்ணடைந்த நெஞ்சை யாழினுமினிய மொழிகளால் ஆற்றுவித்து இனித்திருக்கச் செய்வது நற்பெண்ணன்றோ?

எண்ணிறந்த நன்மைகளும், சுகபோகங்களும் ஜனித்து, வளர்ந்து, பெருகி, உறையும் இடமே இல்லம் என்பது. சண்டை சச்சரவுகளும், வாக்கு வாதங்களும், பிணக்கமும் கிரகத்துள்ளும் நிலவத்தலைப்படுமாயின், இதற்கும் வெளியிடங்களுக்குமுள்ள வித்தியாசம் யாதோ? அலர்ந்த முகமும், ஆனந்தக் கண்ணும், கனிந்த உள்ளமும், கோதில் மனமும், தெளிந்த விவேகமும், ரம்மிய வொழுக்கங்களுமுடைய மனைவியாளுக்கு அவளுடைய கணவன் அளிக்கும் பிரதி பலனோ என்னே? நானாவித இன்னல்கள், தூர்ச்சம்பவங்களினின்று காப்பாற்றி, இல்லறத்தை ஒத்த மனத்துடன் நடாத்த உதவுதலேயாம்.

பெண்கள் கல்வி கற்பது ஆண் மக்களுடன் தர்க்கிப்பதற்காவது, அல்லது தற்புகழ்ச்சிக்காவது, அல்லது மனிதனுக்கு எதிரியாக நின்று, தம் சுபாவங்களை அடக்குவதற்காவதல்ல. பிறக்கும் குழந்தைகளைச் சரிவரப் பரிபாலித்து, தம் கொழுநர்க்குச் சிரத்தையையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உறுதியையும் அளித்தற்கேயல்லாது வேறெதற்குமல்ல. இக்கருத்து, நோக்கம், ஆதர்சத்தை நிறைவேற்றாத, அல்லது நிறைவேற்றக் கூடாத படிப்பு கல்வியாமோ? "நாவல்"களையும் தினவர்த்தமானப் பத்திரிகைகளையும் வாசித்து, படித்தாளென நாமம் பூண்டு, பலருடனும் பலவிதத்தில் பழகி, அநேகத் தூர்க்கிருத்தியங்களைச்செய்து, படாதபட்டு, அபக்கியாதிக்கிலக்காகி, மண்ணுலகினர் நிந்திக்க, விண்ணுலகர் திகைத்தற்கான இழிய பரிதாப நிலைமைக்குட்படுதலோ பெண்மை? தமக்கு இயல்பான கடமைகளை மறந்து நடப்பவர்களுக்கும், தூற்றி அகற்றி வருபவர்களுக்கும் உரிமை ஏது, எங்குளதோ?

சுதந்தரமும் சமத்வமும் பெண் பாலர்க்கும் அவசியமானாலும், எத்தகையக் கட்டுப்பாடும் அச்சமுமில்லாது, தன்னுடைய தூர்ப்பலமும், பூரிய எண்ணமும், சலன புத்தியும் பூரித்துள்ள மனப்போக்கைத் தொடர்ந்து, அவமானம், அவமரியாதை, அகௌரவச் சொற்கள் நிறைந்த படுகுழியிலமுழ்ந்தி மடிதற்காக அவைகள் விரும்பப்படுவனவல்ல. யதார்த்தத்தில், இவ்வுலக வாழ்க்கையை யொட்டிய வரையிலும், சுதந்தரம், சமத்வம் என்பது பொருளும், ஆதாரமுமற்ற வார்த்தைகளாம். ஸ்திரீகளின் பெருமுட்.

பிள்ளைகளின் முதற் குரு மாதா. பிள்ளைகளின் வளர்ச்சியும் முன்னேற்றமும் அவர்களுடைய தாயின் குண நடத்தைகளைப் பொருத்தன. குழந்தைகள் தன் ஆதீனத்திலிருக்கையில், இம்மை மறுமைகளுக்கான கல்வியையும் வழிகளையும் அவர்களுக்குப் போதிக்காது அவமே இருந்துவிடின், அல்லது குழந்தைகளின் துஷ்டப்போக்குகளையே அநுசரித்து, கண்டிக்கவேண்டியபொழுது கண்டிக்காது, தவறுகையில் திருத்தி உயர்த்தாது இருந்துவிடின், பின் பிதாவினாலும், தீர்க்க வித்வர்களாலும் அப்பிள்ளைகளை நல்வழியில் திருப்பி பிறத்துவதற்கு முடியாது. பெற்றோர்களின் அநாக்கிரதை, அலக்ஷியம், பாராமுகத்தினால் எவ்வளவு பிள்ளைகள் போலி மனிதராய், விலங்குகளுக்குங் கடையாய் மாறி விடுகின்றனர்! ஒவ்வொரு ஜீவனும் அவ்வவன் முற்பவத்தில் இழைத்த கர்மங்களின் தொகுதியான விதிக்குத் தக்கபடி, அதாவது நல்லூழாயின் மேன்மேல் வளர்ந்து உய்யவும், இழவூழானால் தளர்வுறு முயற்சிகளாலும், நல் லப்பியாசங்களாலும் இன்னலிடர்களை வென்று மேலெழும்பவும் அநுகூலிக்கக் கூடிய தாய் தந்தையரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் பிறக்கின்றது. இதையறிந்து தக்கபடி சகாயிக்காது, குரங்கின் கைப் பூமாலைபோல் அக்குழந்தைகளை நடை பிணங்களாக்கிய பின், "பிள்ளையின் தலையெழுத்து, விதி, பிராரப்தம் இவ்விதம் போலும்!" என ஓலமிடுதல் தகுதியோ?

தேச சரிதம், சரீர சாஸ்திரம், தர்ம அறிவு, சுகாதார விளக்கம், உணவுப்பயிற்சி முதலியவைகளைப் புகட்டும் புத்தகங்களைப் படிக்க வேண்டியது பெண்பாலர்க்கும் அத்தியாவசியமேயாம். அவைகளைப் பெற்று அநுபவித்தற்கான உரிமையும், சுதந்தரமும் பெண்களுக்கு முளவென்ற விஷயத்தை எவரும் மறுக்கமுடியாது.

மன இருதயங்களின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் பிரதானமாவது அன்பு. இன்னல்களைக் குறைத்து, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்றவைகளால் மூடப்பட்ட மனத்தைத் தெளிவித்து, நன்னெறியிற் புகுத்தி, யாவர்க்கும் இன்பம் பயப்பதும் பயக்கக்கூடியதும் அன்பேயாம். பிறவிக் கடலிலகப்பட்டு, நல்வினை தீவினைகளான அலைகளால் அலைக்கப்பட்டு, அவித்தையாகிய நீர்ப்பாம்பினால் கடியுண்டு, ஆசையாகிய விஷம் பெருகிப் பரவி, செற்றம், ஆணவம், கொலை, களவு, போர், குடி, காமங்களான கடுஞ்சுழற் காற்றில் அகப்பட்டு மயங்கி, இறுதியில் துயரமாகிய பாறையில் மோதி அவஸ்தைப்படும் புன்மாக்களை அவ்விபத்துக்களினின்று விடுத்து நன்மை யெய்துதற்கு உதவுவன ஞானமும் அறமுமாம். ஞானத்தின் பயனும், அறங்களுக்கெல்லாம் தலைமையுமாக ஒளிப்பது அன்பே. இத்தகைய அன்பைப்போற்றி, இவ்வுலகெங்கும் பரப்புதல் பெண்ணின் குணாதிசயமாம்.

வாழ்க்கையின் கஷ்ட நிஷ்டூரங்களை அதிகரிப்பது தற்சிந்தனையாகும். அக்கொடூரங்களைக் குறைப்பது பரோபகார சிந்தனையே. முன்னது மனிதனிடம்மேம்பட்டு நிற்கின்றது. பின்னது பெண்ணிடம் பரிணமித்திருக்கின்றது. இவ்வுலக வாழ்க்கையின் நன்பயனும், முக்திக்கேதுவுமாக வுள்ளவை தியாகசிந்தையும், அன்பும், இரக்கமும், ஒத்துழைப்புமேயாம். இவைகளைப் பெறுமிடம் பள்ளிக்கூடமல்ல; கற்பிப்பவர்கள் முனிவர்களல்லர்; சாதனங்கள் புத்தகங்களல்ல. ஆனால் இல்லமும் அன்னையும், இவற்றினின்று எழும்பும் இனிய வார்த்தையும் அன்புமிக்க செயற்களும் நல்லெண்ணங்களுமேயாம். தேசாபிமானமும், ஒற்றுமையும் இல்லத்தினின்றே உதித்துப் பரவுவன வென்பதைக் கிரேக்கர்கள், ரோமர்

கள், க்ஷத்திரியர்களின் சரிதங்கள் நிரூபிக்கின்றன.

"மாதர்களுக்குச் சுதந்தரம் அழகல்ல; சமத்துவம் தேவையல்ல; கல்வி நிஷ்பிரயோஜனமானது; மனம், இருதயம், அறிவு, உணர்ச்சி, ஆன்மா என்றவைகளை உடைத்தாயிராத ஜடப்பொருள்கள்; பிள்ளைபெறும் இயந்திரங்கள்; ஆடவரின் அடிமைகள்," எனச் சாதிப்பதாகக் கொள்ளக்கூடாது. மேற் காட்டியபடி கடமைகளை யொட்டிய வரையிலும் பெண்களுக்கானவைகளே சிலாகிக்கத் தக்கவை, மாண்புற்றவை என்ற உண்மையை 'யஜமானர்,' 'கர்த்தா,' 'ஆரியர்,' 'நாயகர்,' எனத் தற்புகழ்ச்சி செய்து மீசை முறுக்கித் தோள் தட்டித் தங்கலம் பாராட்டி வரும் ஆண்கள் முதலிலறிய வேண்டும். இகபர சாதனங்களைப் பலிதத்தில் பரிபூரணமாகப் பெற்று நீடூழி வாழ்தற்கே ஆண், பெண் என வகுக்கப்பட்டுள. நுரையீரலும், இதயமும், இன்னுமனைய தேகவுறுப்புக்களும் அவ்வதற்கான தொழிலை நிறைத்தி, சுதந்தரம், சமத்துவம், உயர்வு, தாழ்வு என்பவைகளைப் பற்றித் தர்க்கிக்கத் தலைப்படுமாயின், சரீரத்தின் கதி யாதாகுமோ?

சாஸ்திரியாரது கடிதம்.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

"சிரஞ்சீவியாயிருக்கக் கடவது. உனது கடிதம் சிராவண அமாவாசையன்று கிடைத்தது. கடைசியாக நீ என்னைப் பற்றி நினைக்க இவ்வளவாவது புத்தி வந்ததே யென்று இந்த விருத்தாப்பியத்தில் எனக்கு அதிக ஆனந்தமுண்டாகின்றது.

எங்கள் ஜன்மம் முழுவதும் இப்படியே கழித்தாய் விட்டது. அநேக உத்தியோகங்களைச் செய்து அநுபவமுண்டாய் விட்டிருக்கிறது. பற்பல கஷ்டங்களையும் பார்த்தாய் விட்டது—இக்கஷ்டங்களெல்லாம், இத்துக்கமெல்லாம் யாருக்காக? உனக்காகத்தான்! நாங்கள் குழந்தைகளாயிருந்து தருணர்களானோம், தருணர்களாயிருந்து கிழவர்களானோம்—இவைகளெல்லா மெதற்காக? உனக்காகவே! இக்காலத்துப் பிள்ளைகளைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. இனி இந்த தேசத்தின் கதி யென்னவாமோ—அந்தக் கிருஷ்ண பரமாத்மாவுக்குத்தான் தெரியும்!

எங்கள் காலத்தில் இப்படி யிருக்கவில்லை. நான் பால்யமாயிருக்கும்பொழுது தேசம் விருத்தாப்பிய அவஸ்தையிலிருந்தது. ஆனால் நான் விருத்தாப்பியமடைய தேசம் தருணமாய்க் கொண்டே வருகிறது. காலமும் மாறி விட்டது. கலியுகம்! இது கலியுகத்தின் கொடுமையடா. வேறொன்றுமில்லை!

நாங்கள் பால்யர்களாயிருந்தபொழுது கிழவர்கள் கிழவர்களாகவே இருந்தார்கள். புத்திசாலிகள் புத்திசாலிகளாகவே இருந்தார்கள். எவ்விதமாய்த் தற்சமயம் பாலுக்கும் நீருக்கும் வித்தியாசங் கண்டு பிடிக்க முடியாமலிருக்கிறதோ அவ்விதமாகவே நமது ஸ்திதியாகி விட்டது. கால மகிமையைத் தவிர வேறென்ன?

தர்மமே அழிந்து விட்டதென எழுதியிருக்கிறாய். அடே! நானும்பிரத்தியக்ஷமாய்த் தர்மம் நசித்து வருவதை இருநேத்திரங்களாலும் பார்த்து வருகின்றேன். ஏதாவது விவாகம், விவஸ்தை, ஜாதி, ஆசாரம், நான், நீ யென்றவித்தியாசம் ஏதாயினுமிருக்கின்றதா? சேர்ந்து வாழ்ந்து சிறந்த வலிமை யென்றல்லவா பகருகிறாய்? யார் இருக்கவேண்டாமெனச் சொல்லுகிறார்கள்? எங்கள் சிறுபிராயத்தில் நாங்களெல்லோரும் சேர்ந்திருக்கவில்லையா? தந்தை, பாட்டனார் முதலானோர் ஒருமித்திருக்கவில்லையா? அவர்களென்ன? மனுஷர்களல்லவா? அவர்களுக்கும் இரண்டு கைகள், இருகால்கள், இருகாதுகள் முதலிய பஞ்சேந்திரியங்களுமிருந்தன. அடே! ஈச்வரன் எல்லோரையும் ஒரு மாதிரியாகத்தான் வைத்திருக்கிறான். இப்பொழுது படித்து வந்த முட்டாள்களோ எல்லோரையும் சேர்ந்திருக்கச் செய்யப் போகிறார்கள்? ஈச்வரன் யாரையும் தீக்ஷிதராக்கவில்லை, யாரையும் சாஸ்திரியாக்கவில்லை என்றல்லவோ சொல்லுகிறாய்? ஆனால் நாங்கள் சாஸ்திரிகள் குலத்தில் ஜன்மமெடுத்தது வியர்த்தந்தானோ? பி.ஏ. யோ எம்.ஏ. யோவாம், ஒருவன் மூர்தா நான் நின்றுகொண்டு, மனிதர்களெல்லாம் ஒரே ஈச்வரனது பிள்ளைகளெனச் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்கு அப்பொழுது எப்படிக் கோபம் வந்தது தெரியுமா? உங்களெல்லோருந் தலை ஒரே மாதிரியாகத்தானிருக்கிறது என்று உடனே அவனுக்குப் பதிலுரைக்க வாயெடுத்தேன். ஆனால் 'சீ! முட்டாள்' என்று மன்னித்து விட்டேன். பிறகு அந்த பிரஹஸ்பதி "சர்வ ஜனங்களும் ஒரே ஒரு பரமேச்வரனது பிள்ளைகளாகையால் பேதபாவங்களை மறந்து பந்துத்துவத்துடன் வாழவேண்டும்" என்றனன். இதைச் சொல்லுவதற்குப் பிரமாதமாய் இங்கிலீஷ் படித்து விட்டா வரவேண்டும்? இந்த தத்துவம் நமது சாஸ்திரத்திலில்லையா? "அவன் சண்டாளன், நான் பிராமணன் என்ற வித்தியாசம் வேண்டாம்" என்று ஆசாரியார் அறுநூறு வருஷங்களுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறாரே! நமது உபநிஷதமோ—ஆஹா! என்ன அபூர்வ கிரந்தம்! அதிலும் "सम पश्यन् हि सर्वत्र" என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இக்காலத்துப் பிள்ளைகள் சாஸ்திரத்தைக் கவனிக்கப் போகிறார்களா? இவர்களோ ஜாதி ஒன்றே யென்றும் ஹிந்து மகமதிய ஐக்கியம் அவசிய மென்றும் சொல்லுகிறார்கள். வர்ணாச்ரம தர்மம் இருக்கிற இடங்கூடத் தெரியவில்லை. யாரும் விபூதி பூசுவதில்லை, உட்கார்ந்து காயத்திரி ஜபிப்பதில்லை. ஸ்நானங்கிடையாது, சந்தியா வந்தனம் கிடையாது. ருத்ரம், ஸெளரம், சூக்தம்முதலியவைகள் ஒரு மூலையிலிருக்கின்றன. அடே! நீங்களா ரிஷிகளது வம்சத்திற் பிறந்தவர்கள். நமக்கு முன்னோர்கள் எவ்வளவு வேதகோஷத்தைச் செய்து வந்தார்களே. ஸ்நானமோ, சந்தியோ, விபூதியோ, பூஜை புனஸ்காரமோ விக்ரகமோ, பூஜை மண்டபமோ,—ஆஹா! பூஜை பாத்திரங்கள் எவ்வளவு சுத்தமாயிருக்கும்! ஆனால் இக்காலத்துப் பிள்ளைகளுக்கு இவைகளில் ஒன்றாவது இருக்கின்றதா? என் சங்கதியிருக்கட்டும். என்னப்பாவிற்கோ—மூன்று மணி நேரமாகும் ஜபத்தை முடிக்க. ஆஹா! என்ன களங்கமற்ற ஆசாரம்! என்ன விரதம்! ஒருநாள் அவர் ஜபஞ் செய்துகொண்டு உட்கார்ந்திருந்தபொழுது வேலைக்காரி முத்தம்மாளின் பிள்ளை முற்றத்திற்குள் விழுந்ததால் அழத் தொடங்கினான். அப்பா உடனே எழுந்திருந்து அந்தப் பையனை எப்படி அடித்தார் தெரியுமா? முத்தம்மாளையும் வாயில் வந்தபடி நிந்தித்தார். பிறகு மறுபடியும் ஸ்நானஞ்செய்து வந்து ஜபஞ் செய்ய ஆரம்பித்தார். என்ன ஆசாரம்! மனுஸ்மிருதியில் அறுபது நிமிஷநேரஞ் செய்ய வேண்டிய கடன்களை மனுவே ஏற்படுத்தி வைத்திருக்கின்றார். ஆனால் அதையெல்லாம் யார் கேட்கிறார்கள்? அந்தக்கரணம் சுத்தியாயிருந்தால் சரியென்கிறீர்கள். தலையறட்டைகளே! உங்கள் அந்தக்கரணத்தைச் சுத்தியாய் வைத்துக்

சொன்னேன். இந்த லக்ஷணங்களெல்லாம் கால வித்தியாசத்தால் தானே!

எல்லா ஜாதியரும் ஒருமித்து போஜனஞ் செய்ததைப்பற்றி எழுதியிருந்தாய். சிவ, சிவ! சிவ! அடே! பிராம்மண்யம் எங்கேயடா யிருக்கிறது? எல்லோரும் ஒரு பங்தியிலல்லவா உட்கார்ந்து உண்டீர்கள்? அடே! அவ்வேளையில் நீ அங்கே ஏன்சென்றாய்? எல்லோரும் சேர்ந்திருக்க வேண்டுமாம்! ஹிந்து தர்மத்தைக் கொஞ்சமேனும் பாக்கி வைக்காதீர்கள். இவ்விதமாகப் பிரீதி போஜனஞ் செய்தால் ஸ்நேகமதிகரிக்குமென்றல்லவா சொல்லுகிறாய். ஏன்? உலகத்திலுள்ள வெல்லோரையு மழைத்துப் போஜனஞ் செய்யச் சொல்லக்கூடாதா! நமது குடும்பத்தையும் நீஷதர்து குடும்பத்தையும் பார். சமாராதனை, கலியாணம், சிரார்த்தம் முதலிய விசேஷங்களுக்கு ஒரே வீட்டில் ஒரு பங்தியிலுட்கார்ந்து நாங்கள் எவ்வளவு வருஷங்கள் சாப்பிட்டிருக்கிறோம். ஆனால் எங்களுக்குள்ளிருக்கும் மனஸ்தாபங் குறைந்தா போய்விட்டது? பிராமண சமாராதனையில் கொஞ்சப்பேர்களா சாப்பிடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளாவது ஸ்நேகமதிகரித்து வருகிறதா? அப்படித்தான் போஜனஞ் செய்தாலும் மூச்சுப்பேச்சில்லாமல் செய்யக்கூடாதா? உலகத்திலுள்ளவர்களுக்கு விளம்பரமா செய்யவேண்டும்? சமயத்துக்குத் தகுந்தபடி பெயரை மாற்றி வைத்துக்கொண்டு பேச்சு மூச்சில்லாமற் செய்தால் உன்னை யாராவது கேட்கப் போகிறார்களா? யாராவது குலங்கோத்திரத்தை விசாரிக்கப் போகிறார்களா? இதுவரை இந்த மாதிரி எவ்வளவோ நடந்திருக்கின்றன. ஆனால் யாருக்காவது வெளியில் தெரியுமா? நம்ம ராமண்ணாவின் சித்தப்பாவுக்கு கப்பி குஞ்சாலாடு செய்து கொடுத்தால்தான் நிரம்பப் பிடிக்குமாம். ஆனால் இச்சங்கதி அவர் இறந்த பிறகே வெளியில் வந்தது. நாங்கள் ஏதாவது செய்வதாயிருந்தால் பிறருக்குத் தெரியாமற் செய்து வந்தோம். ஆனால் இக்காலத்துப் பிள்ளைகளோ ஹிந்து தர்மத்தை அடியோடு அழித்து விட்டார்கள். எல்லாவற்றையும் நாலுபேரறியச் செய்கின்றார்கள்.

கிருஷ்ண பரமாத்மாவும் ஏகநாத ஸ்வாமிகளும் பள்ளன் வீட்டில் கூழுண்டதாகச் சொல்லுகிறாய். ஆமாம், வாஸ்தவமே. ஆனால் பரமாத்மா, பக்தன் இவர்களுடைய போக்கியதை உங்களிடமென்ன இருக்கிறது? முதலில் பரமாத்மாவாகவேண்டும். பக்தனாகவேண்டும். பிறகு இஷ்டப்படி செய்யவேண்டும். கிருஷ்ண பரமாத்மா தன்னிஷ்டப்படி செய்தார். அவ்வண்ணமே ஏகநாதருஞ் செய்தார். ஆனால் அவர்களுக்கு முங்களுக்குமென்ன சம்பந்தம்? அவர்கள் நமது தர்மத்தை விருத்தியாக்க வெண்ணிச் செய்தார்கள். நீங்களோ நம் தர்மம் நசிக்கச்செய்ய வேண்டுமெனச் செய்கிறீர்கள். ஈச்வரன் இவ்வளவு வர்ணாச்ரம தர்மங்களையுமெதற்காகத் தான் உண்டு செய்தாரோ? ஒரு ஈச்வரன் இவ்வுலகை சிருஷ்டிசெய்து எண்ணிறந்த ஜாதிகளை ஏற்படுத்தியிருப்பதால், இந்த ஜாதிகளை ஒன்றுபடுத்த வேண்டுமெனச் சாஸ்திரங்கள் கூறவில்லையே. வர்ணங்களுமிருக்கின்றன. வர்ணாச்ரம தர்மங்களுமிருக்கின்றன. இவ்வண்ணமே உலகம் போய்க்கொண்டிருக்கிறது. இல்லாவிடில் பிரளய காலம் வந்து விடாதோ! எல்லோரிடத்தும் அன்போடும் ஆதரவோடு மிருக்கவேண்டுமென்று சொல்லுகிறாய். யார் வேண்டாமென்கிறார்கள்? நமது வேதத்தில்—சநாதன தர்மத்தில்—ஆஹா! என்ன அபூர்வமானது நமது தர்மம்! இவ்விதமாகவே ஸ்பஷ்டமாய் ஆக்ஞாபித்திருக்கின்றதே. ஏன் ஒரு பங்தியிலுட்கார்ந்து உண்கிறீர்கள்? ஒரே பாத்திரத்தைச் சுற்றி உட்கார்ந்து எடுத்தெடுத்து உண்ணக் கூடாதா?

தனித் தனியாகப் பிளேட் எதற்கு? ஒரு சாண் தள்ளி யுட்காராது நான்கு முழதூரத் தள்ளியுட்காருவதால் தோஷமென்ன? நாம் சமையலறையி லுட்கார்ந்து வேறு ஜாதிகளைக் கூடத்திலுட்காரச் செய்து அன்னம் படைப்பதால் அவர்களுக்குண்டாகும் மானஹானியென்ன? இது நல்ல முறை தத்துவமாக நடந்து வருகிறது செய்யுங்கள், இஷ்டப்படி செய்யுங்கள்! பகவான் பகவத்கீதையிற் சொல்லியிருக்கிறபடி இதற்கே சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவதாரஞ் செய்யச் சமயம் நெருங்கிக் கொண்டே வருகிறது!

"பிராமணனெங்கே, மற்றவனெங்கே? ஒன்று ஆகாயத்தில், மற்றொன்று பாதாளத்தில்! இவர்களையோ நீங்கள் ஒன்று படுத்தப்போகிறீர்கள். அடடா! எப்படி உங்களுக்கு இந்த மூர்க்க புத்தி வந்தது. சூத்திரர்கள் ஊழியஞ் செய்யவும், பிராமணர்கள் அதிகாரத்துடன் அவர்களைக்கொண்டு ஊழியங்களைச் செய்விக்கவும்—இவ்விதமாகப் பல்லாண்டு பல்லாண்டாய் நடந்து வருகிறது. ஈச்வரனும் இவ்வண்ணமே வர்ணாச்ரம தர்மத்தை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் இவ்வர்ணாச்ரம தர்மத்தை யார் கவனிக்கின்றார்கள்? புராதன காலத்தில் இந்த ஜாதிகளை ஒன்று படுத்த முடியவில்லையோ? இப்பொழுதே நீங்கள் பிரமாதமாய் ஒன்று சேர்க்கக் கிளம்பியிருக்கிறீர்களல்லவா? அடே! நான் ஒன்று சொல்லுகிறேன், கேள். ஜாதி, ஜாதி பேதம் கொஞ்சந் தவறினால் உலகமே ஆடி விடும். உலகத்தின் அழகு குன்றி விடும். ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டையிடச் சமயங்கிடைப்பதால் ஜனங்களுடைய தைரியமும் சௌரியமும் நசித்து விடும். ஜாதியென்ன குலமென்ன என்று யாரும் விசாரிக்கமாட்டார்கள். எவன் புத்தி கூர்மையுள்ளவனாயிருக்கின்றானோ அவனே தலை மேலேறி யுட்கார்ந்து கொள்ளுவான். என்னை பெற்றவர்கள்—நீசஷுர குக்ஷிகளாயிருந்தாலென்ன—பிராமண குலத்தில் ஜனித்தவர்களுக்கு இப்பொழுது என்ன மான மரியாதை கிடைக்கின்றதோ அது போய்விடும். விச்வ தர்மம் விர்த்தியாகவேண்டும். அவசியம் விச்வ தர்மம் விர்த்தியாகித் தீரவேண்டுமென ஈச்வர ஆக்ஞையிருக்கிறது. ஆகவே ஒவ்வொருவனும் தனது தர்மத்தை முதலிற் கவனிக்கவேண்டும். சகல ஜனங்களையும் பந்துவாகக் கருதவேண்டும். ஆனால் நமது ஆஸ்தி பாஸ்திகளைப் பிறருக்குக் கொடுக்கப் போகின்றோமா? அடே! உடன் பிறந்தவனையும் உடன் பிறந்தவனெனச் சொல்லாமலிருக்கும்பொழுது பிறரது சங்கதி யெதற்கு? பேசும்பொழுது அன்புடனிருப்பதாகக் காட்டிக்கொள்ளல் வேண்டும். ஒரு நல்ல உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொள்ளல்வேண்டும். "நாமெல்லோரும் ஒன்றே, உங்களையே சதா நினைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லவேண்டும். வேண்டுமானால் கண்ணில் நீரை வருவித்துத் துக்கப்படுபவன்போற் காட்டிக்கொள்ளவேண்டும். வாயால் மாத்திரம் எல்லோரும் ஒன்றுதானெனப் பகரவேண்டும். இப்படிச் செய்தாலல்லவோ விச்வ தர்மம் விர்த்தியாகும்!

"நீ பெரிய போக்கிரி யென்பதிற் சந்தேகமில்லை. இவ்வுலகம் எப்படியா ஆரம்பித்தது? எப்படி ஆரம்பிக்கவேண்டுமோ அப்படித்தான் ஆரம்பித்தது. உன் தந்தையை யல்லவா இக்கேள்வி கேட்கின்றாய்? உனக்கு அதிகம் புத்தி வந்து விட்டதால்தான் இப்படி யெல்லாங்கேட்க ஆரம்பித்து விட்டாய். எல்லோருக்கும் முதன் முதலில் மூல புருஷனொருவனே. ஒரு வேளை ஒன்பது பேரிருந்தாலுமிருக்கலாம். ஏனெனில் நீங்கள் இப்பொழுது தலைப்பட்டு விட்டீர்களல்லவா! வியாசர் யார்? வசிஷ்டர்

யார்? வால்மீகி யார்? முழு மூடங்களே! ரிஷிகளது குலங்களைக் குறித்து யாராவது விசாரிக்கலாமா? தனக்கிஷ்டமானதைச் செய்தார். ஆனால் நீ வியாசரல்ல இஷ்டமானதைச் செய்ய. "वर्णानाम् ब्राह्मणो गुरुः", "ब्राह्मणोस्य मुखमासीत्" என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். அடே! நீ ராமலிங்க சாஸ்திரியின் புத்திரன். அண்ணு சாஸ்திரிகளின் பௌத்திரன், அப்பா சாஸ்திரிகளின் ப்ரபௌத்திரன். கொஞ்சமாவது உனது முன்னோர்களை நினைத்துப்பார். பள்ளனைத் தீண்டக் கூடாதென்றிருக்க, நீ பள்ளனைக்கட்டிக் குலாவுகின்றாய். துரைகளுடன் கை குலுக்குகின்றாய். மற்றவர்களுடன் சிரிக்கின்றாய். காலமும் இப்படியா போகவேண்டும். இந்த தர்மத்தை மறந்து குலத்தின் பெயரைக் கெடுக்காதே பள்ளனும் பிராமணனும் ஈச்வரனாலேயே சிருஷ்டிக்கப்பட்டவர்களென்பது வாஸ்தவமே. ஆனால் உன் அப்பா, உன் தாத்தா, உன் கொள்ளுத் தாத்தா இப்படி யொன்றுஞ் செய்யவில்லை யாகையால் நீயு மதைச் செய்ய வேண்டாம்.

எல்லா ஜாதியரும் ஒரு பந்தியிற் சாப்பிடுவதும், ஜாதி மாற்றி ஜாதியில் மணஞ் செய்வதும்· அடே! மூட ஜன்மமே! இந்த விவகாரமெல்லாமெதற்கு? இவைகளில்லாமல் உலகம் இதுவரை செழிக்கவில்லையா? நீ இப்பொழுது புதிது புதிதாகக் கண்டு பிடிக்கத் தலைப்பட்டு விட்டாய். உன்னைத் தூஷிப்பதிற் பலனென்ன? இங்கிலீஷ் படிப்பின் பிரதாபம்! எவ்வளவோ அபாரமான வேதத்தில் இவைகளைப் பற்றிக் கொஞ்சமாவது சொல்லியிருக்கிறதா? இந்த விவகாரங்கள் அவசியமென்றிருந்தால் நமது ரிஷிகள் ஸ்பஷ்டமாய் எழுதிவைத்திருக்கமாட்டார்களா?

"பெல்காம் காங்கிரஸில் என்ன செய்தார்கள்?" என்று கேட்கிறாய். ஸ்வராஜ்யக்கக்ஷியார் ஒத்துழையாமையைச் சேர்ந்தோர், தர்க்கரே எப்பொழுதுங் கதறுவோர், தேசத்திற்கே உழைக்க ஜன்மமெடுத்தோம் என்கிற தேச பக்தர்கள், ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்தோர், தாஸ் கக்ஷியைச் சேர்ந்த வங்காளியர், இளைய பக்ஷத்தைச் சேர்ந்த மகமதியர்கள் எல்லோரும் ஒரு பந்தியிலுட்கார்ந்து சாப்பிடவில்லையா? ஆம், ஆம், சாப்பிட்டார்கள். இதுவுமன்றி பட்டணத்தில் நாண்மாபாலிடம் னெப்பிலும் சாப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் தேச நன்மையை நாடிச் செய்தார்கள். மகாத்மா முதலிய தேசபக்தர்களாகிய அவதார புருஷர்களது யோக்கியதை உன்னிடமென்ன இருக்கின்றது? இப்படியிருந்தும் இவர்களுக்குள் வித்தியாச மேற்படவில்லையா? இக்காலத்துப் பிள்ளைகளுக்கு இதுவேன் தெரியவில்லை? அடே! சமயம் கிடைக்கும்பொழுது முடிந்தவரை வேண்டியதைச் செய்துகொள்ளவேண்டும். தர்மம், அதர்மம், பாபம், புண்ணியம் என்று சொல்லக் கூடாது. நமது காரியமாகும்வரை பார்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் சமயம் வந்தால் இல்லவேயில்லை யென்று பிடிவாதமாகச் சொல்ல பிராமண தைரியமிருக்கவேண்டும். யாராவது உலக நன்மையை நாடி எதாயினும் நற்காரியங்களைச் செய்தால் அக்கம்பக்கம் பாராது அவன்மேல் விழுந்து 'நீ தேசத்துரோகி, தர்மத்துரோகி, இராஜ்யத்துரோகி,' என்று கதற வேண்டும் இத்தகைத் திடசித்தமிருக்கவேண்டும். இதாவது உன்னிடமிருக்கிறதா? இப்படியிருக்க அந்த அவதார புருஷர்கள் என்ன செய்தார்களென்பதைப் பற்றி இப்பொழுது பிறந்த பையன்களுக்குக் கவலையேன்? அநேக ஆசீர்வாதம்!

ஆச்வலாயன கர்த்தம குலோத்பன்ன
ராமலிங்க சாஸ்திரி"

(With the kind permission of the Manager, "Manoranjan.")

ராணி பத்மினி *

(ஒரு சிறு நாடகம்).

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

இராஜ புத்திரர்களின் வீரச்செயல்கள் நமது தேச சரித்திரத்தில் வைரக் கற்களென ஒளி வீசிக் கிடக்கின்றன. அவ்வீரர்களின் மேன்மையான தைரியமும் கௌரவம் மிகுந்த குணமும், அதற்கு ஏற்றவாறு அவர்களின் மனைவியரின் சமயோசித தைரியமும் கேட்கக் கேட்க இப்படியுமுண்டோ என்று நாம் ஆச்சரியமடைவோம். 1303-ம் வருஷம் சித்தூர் பட்டணத்தை டில்லி பாட்சாவான அல்லாவுத்தீன் கடைசியாக முற்றுகையிட்டுப் பிடிக்குமுன். சித்தூர் ராணியான பத்மினி ஒரு தடவை எதிரி வசம் சிக்கிக்கொண்ட தன் கணவனை மீட்சி செய்த சாமர்த்தியத்தை இப்போது வர்ணித்துச் சொல்வோம்.

காட்சி 1.

இடம்—சித்தூர் அரண்மனை. தர்பார் மண்டபத்தில் பத்மினி ராணி வெகு யோசனை செய்பவளாய் வீற்றிருக்கிறாள்.

பத்மினி:—ஆகா! இந்த அநியாயம் எங்காவது கண்டதுண்டா, கேட்டதுண்டா? என்னைப் பிடித்த துரதிஷ்டம்தான் என்ன! பகவான் இப்படியும் சோதனை செய்வாரா? வீட்டிற்கு வந்த அதிதியை வழிகொண்டு விடச் சென்றஎன் கணவனைத் திடீரென்று சூதாகப் பிடித்துக்கொண்டனரே! 'வெளுத்ததெல்லாம் பால்' என்று எண்ணும் நமக்கு இவ்வித சூது நடக்கும் என்று கனவிலும் தோன்றவில்லையே. நான் இனி என்ன செய்வது? (சோர்ந்து விழுகிறாள், சற்று பெருமூச்செறிகிறாள்). நமது ஜனங்களையும் காப்பாற்ற ஒரே ஒரு வழிதான் உளது. அதாவது என் உயிரைத் தியாகம் செய்ய வேண்டியதுதான். அப்போதாவது அக் கொடிய சுல்தான் மனம் இளகித் திரும்புவான்.

(ஒரு ரஜபுத்ர வீரன் நுழைகிறான்.)

வீரன்:—தாயே! டில்லி சுல்தானிடமிருந்து ஒரு தூதன் வந்திருக்கிறான். ஏதோ சமாசாரம் தெரிவிக்கவேண்டுமாம்.

பத்மினி:—சரி! நமது சேனாபதியையும் மந்திரியையும் அழைத்து என்ன விஷயம் என்று கேட்டுக்கொண்டு வரும்படி சொல்.

வீரன்:—அப்படியே. (திரும்பிப் போகிறான்).

பத்மினி:—ஆகா! என்ன துணிச்சல்! ஏன்! ரஜபுத்ரர்கள் தூதனுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டார்கள் அல்லவா? இதை யறிந்தே அவன் வந்திருக்கிறான். என்ன விஷயமாயிருக்கும்? நமது கணவனுக்காக மீட்சிப் பணம் இவ்வளவு வேண்டுமென்று சொல்லி யனுப்பி யிருப்பானோ? அப்படி யிருக்காது. அவன் சொல்லி யனுப்பிய செய்தி எனக்கு ஒருவாறு விளங்குகிறது. ஆ! பகவானே! என்ன செய்வது?

(மந்திரியும் சேனாபதியும் வருகிறார்கள்).

சேனாபதி:—அரசியே! அத்தூதன் சொன்ன சொற்களைக் கேட்டவுடன் அவன் முகத்தில் படீரென்று அறையவேண்டுமென்று ஒரு சமயம் தோன்றியது. ஆனால் ரஜபுத்ரன் அவ்விதம் செய்யமாட்டான் என்று பேசாமல் இருந்தேன்.

* பாடசாலைகளில் சிறுவர்கள் நடித்துக்காட்டும்பொருட்டு இவ்விதமான சரித்திர நாடகங்களை ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T. எழுதியிருக்கிறார். பல இடங்களில் பிள்ளைகள் வெகு உத்சாகமாக நடித்துக் காட்டியிருக்கிறார்கள். பெண்பாடசாலைகளிலும் இச்சிறு நாடகம் நடித்துக்காட்டலாம்.

மந்திரி:—அம்மணி! ஒவ்வொரு ரஜபுத்ரனும் தன் உயிரைக் கொடுப்பதே எனத் தீர்மானித்துளன். கண்ணுள் ஜ்வலிக்கும் மணி போன்ற தங்களை அத்துருக்களிடம் விட்டு விட்டு நாங்கள் உயிர் வாழ்வதா?

பத்மினி:—எனக்குத் தெரியும். நான் அவ்விடம் வந்தால் என் பிராண நாதரை விடுவித்து, சித்தூர் கோட்டையை விட்டுத் திரும்பிச் செல்வான்.

மந்திரி:—ஆம்! இதே வார்த்தைகள்!

பத்மினி:—நமது நகரத்தையும் இவ்வளவு வீரர்களையும் அவர்களது மனைவி மக்களையும் என் ஒருத்தி நிமித்தம் துன்பத்திற்காளாக்க வேண்டியிருக்கிறதே!

சேனாபதி:—ராணியே! இது ஒரு துன்பமா! சுத்த வீரனுக்குத் துன்பம் கிடையாது.

பத்மினி:—(சற்று நேரம் யோசனை செய்துவிட்டு) சரி! நான் நிச்சயம் செய்து விட்டேன். மந்திரி அத்துரனிடம் நான் வருவதாகச் சொல்லும். ஆனால் எனது அந்தஸ்துக்குத்தகுந்தவாறு நூறு பல்லக்குகளுடனும் பல சேடிகளுடனும் வருவேன். நாங்கள் வரும் வழியில் ஆண் பிள்ளைகள் நடமாட்டம் இருக்கக் கூடாது என்று சுல்தானிடம் தெரிவிக்கும்படி சொல்லும். சேனாபதி! சற்று நேரம் தங்களிடம் பேசவேண்டும். இதோ திரும்பி வருகிறேன்.

(ராணி பத்மினி போகிறாள்).

மந்திரி:—இது என்ன ஆச்சரியம்! ராணி தான் வருவதாகச் சொல்லும்படி அனுப்புகிறாளே!

சேனாபதி:—சிச்சீ! இவ்வளவு தானா! நமது பௌருஷம்! நமது ராணியை அனுப்பி விட்டு நாம் சுகமாக இருப்பதா!

மந்திரி:—நமது நகரத்தையும் ஜனங்களையும் காப்பாற்றும் பொருட்டுத்தான் ராணி இவ்விதம் ஒப்புக்கொண்டாள். ஆயினும் இந்தக் கேவலமான விஷயத்தை ஒப்புக்கொண்டதை நினைக்க என் ரத்தம் கொதிக்கிறது.

சேனாபதி:—எனக்கும் அப்படித் தான் துடிக்கிறது! ஆயினும் ராணி ஏதோ யோசனை செய்திருக்கிறாள். அவ்விஷயத்தை நான் அறிந்து வருகிறேன். நீங்கள் எதற்கும் அவள் சொன்ன விதம் அத்துரனிடம் சொல்லி யனுப்புங்கள்.

(மந்திரி போகிறார்.)

என்ன செய்வதாக யோசித்திருக்கிறாள்? மகாமேதாவியான நமதுராணி இந்தக் கேவலச் செய்கைக்கு ஒப்புக்கொள்ள மாட்டாள் என்பது நிச்சயம்.

(ஒரு சேடி வருகிறாள்.)

சேடி:—ஐயா! ராணியம்மாள் தங்களை அழைத்து வரச் சொன்னார்கள்.

சேனாபதி:—சரி! இதோ வருகிறேன்.

(இருவரும் போகிறார்கள்.)—காட்சி முடிவு.

காட்சி 2.

இடம்—சித்தூருக்கு வெளியே மைதானத்தில் சுல்தான் அல்லாவுத்தீன் தங்கியிருக்கும் வீடு. வாசற்படியில் இருவர் காவலாக நிற்கின்றனர். ரஜபுத்ர வீரனாகிய ராணா பீம்சிங் கைகள் கட்டுண்ட வண்ணம் நிற்கிறான்.

பீம்சிங்:—இது என்ன அநியாயம்! மரியாதைக்காக வழிவிட்டனுப்ப வந்த என்னை இவ்விதம் அநீதியாகக் கைதியாகப் பிடித்துக்கொண்டானே! இப்படியும் நடக்குமா? தர்மயுத்தம் செய்ய முடியாமல் இவ்விதம் அக்கிரமம் நடக்குமென்று நான் கனவிலும் எண்ணவில்லையே!

(அல்லாவுத்தீன் நுழைகிறான்.)

அல்லாவுத்தீன்:—ஆம்! நானும் கனவிலும் எண்ணவில்லை! என் அதிருஷ்டத்தை என்னென்று சொல்வேன்.

பீம்சிங்:—சீ! நீ ஒரு வீரனா! தர்மத்தை மறந்து இவ்விதம் என்னைக் கைதியாகப் பிடிப்பது உனக்கு அடுக்குமா? ரஜபுத்ரனாகிய நான் உன் வார்த்தையை நம்பி நீ கேட்டுக்கொண்டபடி செய்தேன்! ஆகா! மானம் இழந்து உயிர் வாழ்வது எனக்கு நரகவேதனையாக இருக்கிறது.

அல்லாவுத்தீன்:—உன் கண்முன் இன்னும் என்ன என்ன நடக்கப் போகிறது பார்!

பீம்சிங்:—இதைவிட இன்னும் என்னவேண்டும்? என் அழகிய மனைவியைப் பார்க்க வேண்டும் எனக்கெஞ்சினாய்! கண்ணாடியில் அவள் முகத்தைப் பார்த்தால் திருப்தியடைவதாக வேண்டினாய்! அவளும் அதமனுடைய கண்களுக்கும் தன் உருவத்திற்கும் மத்தியில் சூரிய வெளிச்சம் இருப்பதால் தன் கற்பு நிலைதவறாமல் இருக்கும் என ஒப்புக்கொண்டாள். சிச்சீ! இப்படியும் அதர்மம் நடக்குமா?

அல்லாவுத்தீன்:—இன்னும் கேள். உன் அழகிய மனைவி உன்னை மீட்பதாகச் சொல்லியிருக்கிறாள்.

பீம்சிங்:—ஆகா! என்ன?

அல்லாவுத்தீன்:—எவ்விதம் என்றுகேள். நான் விரும்பியபடி அவள் என்னிடம் வருகிறாள். அவள் வந்தவுடன் உன்னை விடுதலைசெய்து உன் பட்டணத்திற்கு அனுப்பிவிடுகிறேன்.

பீம்சிங்:—ஏ! அம்தா! என் கைகளைக் கட்டியிருப்பதால் நான் சும்மா நிற்கவேண்டியிருக்கிறது. இல்லாவிடில்—

அல்லாவுத்தீன்:—பதறாதே! அவளே இஷ்டப்பட்டு வரும்போதுஉன்னால்என்ன முடியும்? ஏ! சேவக! நான் சொன்னபடி ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?

சேவகன்:—சுல்தான்! ஹுஜூர் சொல்லிய பிரகாரம் பல்லக்குகள் வரும் வழியில் ஒருவரும் இல்லை. அதோ மலையிலிருந்து பல்லக்குகள் வருகின்றன!

அல்லாவுத்தீன்:—ஏ! ரஜபுத்ர வீரனே! அதோ ராணி பத்மினி வருகிறாள். ராணிக்குள்ள அந்தஸ்துடன் நூறு பல்லக்குகளுடன் வருகிறாள். (தூரத்தில் பார்த்துக்கொண்டே நிற்கிறான். சில நிமிஷங்கள் சந்தோஷத்தில் மூழ்கி இருக்கிறான்.)

பீம்சிங்:—இதுவும் காலவிபரீதமோ! என் கண்மணி பத்மினி இப்படியும் செய்வாளா? எனக்கு நம்பிக்கை யில்லை. ஏதோ விசேஷம் இருக்கிறது.

அல்லாவுத்தீன்:—ஆம்! ஆனந்தமான விசேஷம். அதோ பல்லக்குகள் திரும்பி எனது படைவீடுகள்வழியே திரும்புகின்றன.

பீம்சிங்:—நாராயணா! என் ரத்தம் கொதிக்கிறதே!

அல்லாவுத்தீன்.—இன்னும் சில நிமிஷங்களில் உன்னைப் பல்லக்கில் திருப்பி அனுப்பி விடுவோம்! ஆகா! தன் கணவனைக் காப்பாற்ற இவ்விதம் உன்ராணி வருவது என் அதிருஷ்டமா, உன் அதிருஷ்டமா?

பீம்சிங்.—(புருவங்களை நெரித்துக் கொண்டு குதிக்கிறான்) இச்சொற்களைக் கேட்க என் காதுகளும் இருக்கின்றனவே! இச்சொற்களைச் சொல்லும் நாக்கை என் செய்வது?

அல்லாவுத்தீன்.—உன் விடுதலைநேரம் நெருங்கிவிட்டது (வெளியில்குழப்பம்பேரிரைச்சல்). ஆகா! இது என்ன? (அவசரமாக ஒருவீரன் ஓடி வருகிறான்).

வீரன்.—சுல்தான்! பல்லக்குகளினின்றும் பல சேனை வீரர்கள் குதித்து நமது படை வீடுகளை துவம்சம் செய்கிறார்கள்.

அல்லாவுத்தீன்.—ஆகா! என்ன? என்ன?

வீரன்.—காவலாட்களை விழுத்தி விட்டனர். தாங்கள் சீக்கிரம் இவ்விடத்தை விட்டுச் செல்லுங்கள்.

அல்லாவுத்தீன்:—ஆ! மகம்மத்! எங்கே சப்தர் பெக்!

(அவசரமாக வெளியே ஓடுகிறான்.)

பீம்சிங்:—ஏதோ விஷேசம் நடக்கும் என்று நினைத்தேன். என் கண்மணியும் இந்த விதம் வருவதாக ஒப்புக்கொள்வாளா?

(வெளியில் பேரிரைச்சல் கேட்கிறது. சில ராஜபுத்ர வீரர்கள் உள்ளே ஓடி வருகிறார்கள்).

ராஜபுத்ரர்கள்:—பிரபோ! சீக்கிரம்! புறப்படுங்கள்!

(அவன் கைக்கட்டுகளை தறித்து விடுகின்றனர்).

பீம்சிங்:—ஆகா! என் அதிருஷ்டமே அதிருஷ்டம்! நான் ஏதோ பலவிதமாகப் பயந்தேனே!

(ராஜபுத்ர வீரர்களுடன் வெளியே ஓடுகிறான்).

—(காட்சி முடிவு)—

பெண்மக்களுக்கும் தேசாபிமானம் வேண்டும்.

(ஸ்ரீமதி செ. ராஜம்மாள்.)

சகோதரிகளே! முற்காலத்தில் அறநல புணர்ந்த ஆன்றோர்களும் நிறை மொழிச் செல்வரும் பத்தினிப்பெண்டிரும் மிகுந்து மிகவும் கீர்த்தி வாய்ந்த நம் தமிழ் நாடு இன்றைக்குச் சில வருஷங்களுக்குமுன் இருந்த நிலைமையைப் பார்க்கிலும் தற்போது மகாத்மா காந்தி அவர்கள் போன்ற புண்ணிய புருஷர்களின் விடா முயற்சியால் சிறிது முன்னேற்ற மடைந்திருப்பது மிகவும் சந்தோஷிக்கத் தக்கதே. பின்னும் நம் பெண்மக்களுக்காகப் பிரசங்கவாயிலாகவும் 'சிந்தாமணி' என்ற பத்திரிகை மூலமும் உழைக்க முன் வந்திருக்கும் அரிய சகோதரி பாலம்மாள் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். தேசத் தொண்டிற்கும் பெண்மக்களே முக்கிய காரணம். ஏனெனில் தேசசேவை செய்யும் ஆடவர் அனைவரும் சிறுவயதில் தம் தாய்மார்களின் கட்டளைப்படியே நடக்கின்றனர். ஆகையால் சிறு வயதிலிருந்தே தம் குழந்தைகளுக்கு நல்லொழுக்கம், கடவுள் வழிபாடு, சுகாதாரம், தேசாபிமானம் முதலிய அரிய விஷயங்களில் சிரத்தை கொள்ளும்படி நாளுக்கு நாள் பயிற்ற வேண்டியது சகோதரிகள் கடமையாகும்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்'

என்ற திருவள்ளுவர் வாக்கியத்தின்படி அப்பிள்ளை சான்றோனெனப் பெயரெடுப்பதும் சிறு வயதில் தாய் பழக்கிய நற்பழக்கத்தாலேயே. ஒரு சிறு பிள்ளை தான் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பொழுது ஓர் ஊசியைக் களவாடிக் கொண்டு வந்து தன் தாயினிடம் கொடுக்க, அவள் அதை வெகுப் பிரியத்தோடு வாங்கி வைத்தாள். அது கண்டு அப்பிள்ளை தன் தாயைச் சந்தோஷப்படுத்துவதற்காக ஒவ்வொரு நாளும் ஏதாவதொரு பொருளைக் களவாடிக்கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். இவ்விதமாகப் பெரியவனான பிறகும் களவெடுப்பதற்காக ஒருவனைக் கொலை செய்தபொழுது கண்டு பிடிக்கப்பட்டுக் குற்றவாளி யெனக் கொலை தீர்ப்புப்பெற்றான். அதை அவன் தாய் அறிந்து ஓடிப்போய் மகனைக் கட்டிக்கொண்டு அழுதபொழுது அக்கொலைஞன் தன் தாயை நோக்கி "ஆ! பாவி! நான் சிறுவயதிலிருந்த பொழுது கொண்டு வந்து தந்த ஊசியை நீ வாங்காது என்னைத் தண்டித்திருந்தால் இக்கொலை செய்திருக்க மாட்டேனே. ஆனதால் நீயே இக்கொலைக்கு முக்கிய காரணம்" என்று தாயின் மூக்கைக் கடித்துவிட்டதாக ஒரு கதை வழங்கி வருகிறது. அதைப்போல தாய்மாரும் அவர்கள் பெரியவர்களான பிறகு தங்களுக்கு நல்லொழுக்கம் பழக்கவில்லை என்றும் கல்வி கற்பிக்க

வில்லை என்றும் தாய்மாரைக் குறை சொல்வதைக் காதாற் கேட்டிருக்கிறோம். "இளமையிற் கல்" "சிலையிலெழுத்து" என்றதுபோல் தாய் தன்பிள்ளைகளை நற்பழக்க முள்ளவர்களாகும்படி பார்ப்பது இளமையிலேயாகும். அப்பிள்ளைகள் பிற்காலத்தில் தேச ஊழியத்தில் முன் வந்து நிற்கக்கூடிய தேசவன்மை உடையவர்களாக வளர்ப்பதும் தாயினது கடமையே ஆகும். அநேகம் சகோதரிகள் அழகிய கதராடைகளை வெறுத்துப் பரதேசித் துணிகளை மிகவும் உல்லாசமாக அணிந்துகொள்ளுகிறார்கள். என்னே இவர்களின் அறிவு! ஏழ்மை நிலையடைந்த தாயார் கொடுக்கும் சிறிது கூழை வெறுத்துப் பிறவீடுகளிற் சென்று அறுசுவை உண்டி அருந்தும் பிள்ளைகளும் உண்டோ? அழகிய கதராடைகளைத் தரித்துக்கொள்வதால் 'தேசாபிமானிகள்', 'சுயராஜ்யப் பிரியர்கள்' என்னும் சிறந்த கீர்த்தியை விரும்பாது பரதேசித் துணிகளை அணிந்து கொள்வதில் யாது பிரயோசனம். பரதேசித்துணிகளுக்காக வீணே வியயஞ் செய்யும் பணத்தை தேசவூழியத்தின்பொருட்டுச் செலவிடுவது எவ்வளவு மேன்மை. நீங்கள் இவ்விதம் விருப்பின் உங்களுடைய பிள்ளைகள் தேச ஊழியர்களாவ 'தெப்படி? தொட்டிலிற் பூ[illegible] குணம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழிப்படி சிறு வயதிலேயே நீங்கள் அப்பிள்ளைகளுக்குப் பரதேசித் துணிகளையும் பரதேசி உணவுகளையும் கொடுத்து வளர்த்தால் பின் அவர்கள் தேச ஊழியத்தில் ஈடுபடுவதெவ்விதம்? தற்காலத்தில் அநேகர் நவ நாகரீக முதிர்ச்சியால் தேசாபிமானம் கடவுள் பக்தியிற் சிறிதும் சிரத்தை கொள்ளாது அந்நிய நாட்டாரைப்போல் உடை அணிந்து கொள்வதும் அத்தேச உணவுகளையே சாப்பிடுவதும் தான் புருஷார்த்தமென எண்ணிக் காலங்கழிக்கின்றனர். அத்தகையோர் 'தமிழர்' எனச் சொல்வதற்கும் அருகரல்லர். ஆதலின் அரிய சகோதரிகளே! அழகிய கதராடைகளை வெறுத்தொழிக்காது தேசாபிமானம் உடையவர்களாய் தேசத்தொண்டில் ஈடுபட்டு உழைக்க நாம் முன் வருவோமாக. கதராடை தரிப்பதிலும் வேறு சிறந்த தேசாபிமானமுமுளதோ? எம் முயற்சி யீடேற சர்வ வியாபகராகிய பகவான் திருவடியைப் பன்முறை துதிப்போமாக.

"இந்திய ஸ்திரீ சமாஜம்."

மேற்படி சங்கத்தின் முறைகளும் கோட்பாடுகளும்.

இந்திய ஸ்திரீ சமாஜம் என்று நூதனமாய்க் கூடிய சபையின் நோக்கம் யாதெனில் விவரந் தெரியாத அனாதைச் சிறு பெண்களை எந்த ஜாதியாயிருந்த போதிலும் அவர்களை வசிக்கத்தகாத இடங்களிலிருந்து பிரித்து அவர்கள் முன்னேற்றத்திற்குரிய கல்வி, கைத்தொழில் கற்பித்துச் சன்மார்க்கத்தில் நிலைநிறுத்துவதேயாம். பிரியப்பட்டு வந்தால் மேற்படி சொன்ன நோக்கத்தை அனுசரித்து தேவதாசிகளென்ற வகுப்பினரைச் சேர்ந்த சிறு பெண்களை இச்சங்கம் முக்கியமாக கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

1. ஆறு வயதிலிருந்து ஒன்பது பிராயம் பெண்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து இலவசமாகக் கல்வி கைத்தொழில் சொல்லிக் கொடுக்கப்படும்.

2 அதற்கு மேற்பட்ட வயதுப் பெண்கள் இந்த சமாஜத்தின் ஆதரவினால் கல்வி கற்றுக் கொள்ளவேண்டுமானால் அவர்கள் ஏற்கனவே சுய பாஷையிலாவது வித்தைக் கற்றுக்கொண்டிருக்கவேண்டியது.

3. அப்படி இல்லாவிட்டால் ஆலோசனை சபையாரின் தீர்மானத்தின்படி ஒவ்வொருவரின் விண்ணப்பமும் இசைக்கப்படும்.

4. வயதில் முதிர்ந்த பெண்கள் அல்லது ஸ்திரீகள் இச்சங்கத்தின் ஆதரவைக்கோரினால் அவர்களுக்குத் தற்சமயம் கூடிய ஒத்தாசை புரியப்படும். சீக்கிரத்தில் கையில் தருந்த தொகை சேர்ந்தபின் அவர்களுக்கே ஓர் இருப்பிடம் ஏற்படுத்தி அவரவர்களுக்கு ஏற்றகல்வி, கைத்தொழில் கற்றுக்கொடுத்து விவாகஞ்செய்துகொள்ள இஷ்டப்படுபவர்களை விவாகஞ் செய்து கொடுக்கப்படும்.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபணையுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண காதரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீரென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா!

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

4-8-26 ல் F. M. S லிருந்து ஸ்ரீமதி சொர்ன லக்ஷ்மி எழுதுவது:—

சகோதரிக்கு வந்தனம் க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமே யல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களிடைவிடாத முயற்சியினாலேயே ஆகும். எல்லாம வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

சிந்தாமணி சந்தா நேயர்களுக்கு

1926ஆ ஆகஸ்டுமாதமிருந்து நமது சிந்தாமணிக்கு மூன்றுவது ஆண்டு தொடங்குகிறது. ஆரம்பம் முதல் சந்தாதாரராகவிருந்து இவ்விரண்டு வருஷ காலமாக சிந்தாமணியை ஆதரித்ததுபோலவே இவ்வருஷத்திலும் சந்தாவை முன்பணமாக வனுப்பி அபிமானிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரராகச் செய்தும் சிந்தாமணியை ஆதரிக்கவேண்டுகிறோம். அயல்நாட்டுச் சந்தாதார்களும் இவ்வாறே உதவிப் புரியக்கோருகிறோம்.

பத்திராதிபர்

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

ஸுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து நீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். நித்தக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாடச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகங்ளடங்கிய ஸெட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதாரர்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும்; சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதாரர்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் வாசிக்கும்படி, [illegible] அடியிற்கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களம்மாள் அவர்களால் [illegible] தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. [illegible] உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் இல்லை. இவைகளை [illegible] சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபிள் கிரவுன் [illegible] அணா.	0—6—0
பால பாரதம் டெமி 92-பக்கங்கள் அணா.	0—8—0
பால பாகவதம் டெமி 87-பக்கங்கள் அணா.	0—8—0

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்
மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

"சிந்தாமணி"

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தர தமிழ பத்திரிகை — 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6¼; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.
3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.
4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.
5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.
6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.
7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.
9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னதுக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.
10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சமபந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேவபரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் 2½ முழ அகலம், பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாபூர், சென்னை

குழந்தைகளின் மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
26 பிராட்வே, மதராஸ்.

சீக்கிரம் வெளிவரும்!

அச்சிலிருக்கிறது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"
சலிவன்ஸ் கார்டன் ரோட்.
மயிலாப்பூர் சென்னை.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமைதோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங்கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும் இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A., விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள். R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது, ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.

207609